# கலைமுகம்

காலாண்டு கலை இலக்கிய இதழ் தை-ஆனி 1997

Sculpture EXHIBITION




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த இதழில்


* வணக்கம்
* நேர்காணல்
* வாழ்த்துக்கள் நூறு
* சரத்சந்திரவும் சமகால சிங்கள அரங்கும்
* பிரச்சனைகளின் தோற்றுவாய்களில் கலைகளது இருப்பளவு
* சிற்பம் ஓர் அறிமுகம்
* கணனித் தமிழ் பற்றி
* தமிழ் இலக்கிய மரபினூடாகப் பெண்மை பற்றிய தேடல்
* தமிழ்மொழி வளர்ச்சியில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பும் அது நீண்டு செல்லுதலும

* அரங்க வலைகள்
* உளி கொண்டெழுதிய கவிதைகள்
* சிற்பி கேட்ட பரிசு
* வெளியும் உருவமும்
* எமது பார்வையில்
* யூதாஸின் கடிதம்
* அமரர் கு. இராமச்சந்திரன்
* பக்ஸ்சில் குழம்பிய குடும்பம்
* வாழ்த்துக்கள் நூறு


### கவிதைகள்


* அதிஷ்டம்
* ஏதோவொன்றாய்
* வரலாறு
* ஒடிக்கப்பட்ட சிறகுக்குள்
* எப்படி அழைப்பது
* கடவுளே பதில் சொல்
* கல்லறைகள் இனி பிரசவிக்கட்டும்
* வீழ்ச்சி
* யாழ்ப்பாணக் கணனி
* கலைமுகமே உனக்கோர் கடிதம்
* ஒப்புக்கு
* இனி என் மூளையும் இதயமும் கற்பழிக்கப்படும்
* சிந்திக் "கவிதை"த்த சில கேள்விகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமுகம்
**KALAIMUGAM**

காலாண்டு இதழ்

1997
தை - பங்குனி
சித்திரை - ஆனி

கலை- 8
முகம்- 1 - 2

A.V. ஆனந்தனின்
சிற்பச் சிறப்பிதழ்


தொடர்புகளுக்கு:

**Centre For Performing Arts**
Apartment 5/6,19 Milagiriya Avenue,
Bambalapitiya,
Colombo-04, Sri Lanka

திருமறைக்கலாமன்றம்
238 பிரதான வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை


# வணக்கம்

நமது மண் இன்று அழுகின்றது. ஆறுதலற்று அவலத்தின் பிடியில் வாழும் தன் மக்களின் வாழ்வை எண்ணி அமைதி கிடைக்காதா என்று அங்கலாய்க்கின்றது.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளும், தளங்களும், போரின் கோரத்தினால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. கலை வாழ்வும் இதற்கு விதிவிலக்கு அல்ல. யாழ் நகரில் திருமறைக் கலாமன்ற நிகழ்ச்சி ஒன்றின்போது சில கலைஞர்களின் நெஞ்சக் குமுறல், இப்படி ஒலித்தது: கலைஞனின் வாழ்வு ஆரம்பமாவதே பிற்பகலில்தான். இங்கு, ஆறுமணிக்குப் பின் வீட்டுக்குள்ளே முடங்கி இருக்கவேண்டிய கட்டாயப் பின்னணியில், கலை என்னாவது? நாம் [கலைஞர்] என்னாவது?

இருந்தும், செயல்படும் தனது திறனில் நம்பிக்கை வைத்தும், எவ்வித சூழலிலும் இயங்கவேண்டிய கடமை தனக்கு உண்டு என்பதை உள்ளூர உணர்ந்தும், ''ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர்'' என்னும் குறள் உண்மையின் துணிவு கொண்டும், ''முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்து,'' சூழ்நிலைக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொண்டு இந்நாட்டின் பல பகுதிகளில் தனித்துவத்துடன் செயல்பட்டு வருகின்றது திருமறைக்கலாமன்றம். யாழ். மண்ணில், நமது மன்றத்தில், கருத்தரங்கு, நாடகம், நூல் வெளியீடு, கற்றுக் கொடுத்தல், இசை நிகழ்ச்சி போன்றவை அடிக்கடி நடை பெறுகின்றன. இவ்வாண்டு, பல இடங்களிலும் மேடை யேற்றப்பட்ட *பலிக்களம்* என்னும் பக்தி நாடகம் யாழ்-குடா நாட்டில் நாலு நாட்கள் நடந்தது; பல்லாயிர மக்கள் பார்த்தார்கள். ஒன்றரை ஆண்டுக்குப் பின் யாழ்-குடாநாட்டில் நமது மன்றத் திறந்த வெளியரங்கில் இன்னிசைக் கச்சேரியின் முழக்கத்தைக் கேட்டு (பார்வை யாளர் வழமையிலும் வெகு குறைவு) கவின் கலைகள் அழியவில்லை, அழியவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதில்லை என இறைவனுக்கு நன்றி கூறியோர் பலர். *சாகாத மனிதம்* என்னும் நாடக நிகழ்ச்சியை மன்றத்திலும் அதற்கு வெளியேயும் மேடையேற்றி அதைப் பார்த்தவர்களின் கண்களைப் பனிக்கப் பண்ணிய ஆற்றல் நமது நாடகக் கலைஞரைச் சாரும். வன்னியிலும், மருத மடுவை அண்டிய பகுதிகளிலும் கவின் கலைகள் பயிலக வகுப்புகள், இசை நிகழ்ச்சிகள், நாட்டுக் கூத்துக்கள் முதலிய நிகழ்ச்சிகள் மன்றத்தால் நடத்தப்பட்டன. வவுனியாவில் நாடகங்களும், நாடகப் பயிற்சி பட்டறைகளும் காலத்துக்குக்காலம் நடந்த வண்ணம் உள்ளன.

ஆவணித் திங்களில், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, திருகோணமலை, கொழும்பு, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, நீர்கொழும்பு முதலிய இடங்களில் நாடகப் பயிற்சி பாசறைகள், கண்காட்சிகள், நூல் வெளியீடு, பல்லினக் கலைஞரும் கலந்து கொள்ளும் கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் முதலியவைகளை நடத்த உள்ளது.

இவ்வாண்டின் சிறப்பு நிகழ்ச்சியாக நமது மன்றத்து மூத்த உறுப்பினர் ''சிற்பச் செல்வன்'' ஏ.வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி பல இடங்களிலும் நடத்தப்பட்டது; இன்னும் நடை பெறவும் உள்ளது. இச்சிற்பியின் படைப்புகள் போரின் பகைப்புலத்தில் பிறந்தவை; ஒரு சில, இரத்த ஆறு ஓடும் சண்டையின் கொடுமையை எடுத்துச் சொல்வதுடன், சிலுவை மரத்தில் கட்டப்பட்ட அமைதிப் புறாவின் ஆக்கத்தின் மூலம் அல்லலுற்று ஏங்கும் மக்களின் இதயக் குமுறலையும் வெளிப்படுத்துகின்றன.

இவ்விதழில் வெளிவரும் ''வாழ்த்துக்கள் நூறு'' என்னும் கருத்துத் தொகுப்பில், இக்கண் காட்சியைப் பார்த்தோர் உள்ளத்தில் எழுந்த தாக்கங்கள் சிலவற்றைப் படித்தறியலாம்.

அண்மைக்காலத்தில் நமது மண்ணில் கலைகள் அபாரமாக வளர்ந்தன. இருந்தும், சிற்பக்கலையைப் பொறுத்தமட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய கலைஞர் நடுவில்தான் அது காக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்தது. கனமும் செறிவும் கொண்டு முப்பரிமாண நிலையுடன் கூடி விளங்கும் சிற்பக்கலையை மற்றைய கலைகளுடன் ஒப்பிடும்போது அதைக் கற்றுக் கொடுப்பது சுலபமானதும் அன்று, வளர்த்து எடுப்பது இலகுவானதும் அன்று என்பது விளங்கும். அதற்கு இயற்கைத் திறன், வளரவேண்டும் என்னும் ஆர்வம், எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்மை, சூழ்நிலைகளின் தன்மை முதலியவைகள் துணை நிற்பவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணப் ''புறப்பாட்டு'' க்கு முன் அறுநூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியரைக் கொண்ட நமது கவின்கலைகள் பயிலகம் ஊடாக ஒரு சிலரை இனம் கண்டு அவர்களுக்கு வளரும் வாய்ப்பு திருமறைக் கலாமன்றத்தால் அளிக்கப்பட்டது. இன்று, அப்பயிலகத்தில் ஐம்பதின்மர் மட்டும் உள்ளனர். அங்கு ஓவியம், சிற்பம் முதலிய துறைகளில் பயிற்சி அளிக்க முடியாத நிலை வேதனையை அளிக்கிறது. இதை நிவர்த்தி செய்ய, கொழும்பு நகரில் கவின்கலைகள் பயிலகம் ஒன்றின் மூலம் நடனம், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் முதலியவைகளுடன் ஓவியத்தையும் சிற்பத்தையும் கற்றுக் கொடுக்க கொழும்பு திருமறைக் கலாமன்றம் முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றது.

ஆனந்தனின் சிற்பங்களைப் பார்த்துச் சுவைத்த வெளிநாட்டவர் வியந்தனர்; தெற்கிலே உள்ள ஒரு சிலர், ''ஆனந்தன் தமிழரா?'' எனக் கேள்விக்கணை ஒன்றினை எழுப்பினர். இது, (ஒரு பக்கத்தில், கவலையைக் கொடுத்தாலும், மறு புறத்தில்) பெருமிதத்தை அளிக்கின்றது. ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கனவு நனவாகிறது. அத்தோடு, நம் இளம் சந்ததியினர் நடுவிலும், நாமும் நமது திறமை களை இப்படி ஏன் வளர்த்து நமது மண்ணுக்குப் பெருமை பெற்றுத் தரமுடியாது என்ற எண்ணம் தோன்றியிருப்பது நமது கலைவாழ்வின் வருங் காலத்துக்கு நல்ல அடையாளம்.

நீ. மரிய சேவியர் அடிகள்

கலைவழி இறைபணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்காணல்

## "சிற்பச் செல்வன்" A.V.ஆனந்தன்


* **கலைஞன் பிறக்கிறான் என்பார்கள். உங்களைப் பொறுத்தவரையில்...**

நிச்சயம் ஒரு கலைஞனைத் திட்டமிட்டு எவரும் உருவாக்கி விடமுடியாது. இயற்கையிலேயே கலை ஆர்வத்தால் உந்தப்படுகின்ற மனித இதயம்தான், ஏதோ ஒருவகையில் அத்துறை சார்ந்த படைப்புக்களில் ஒன்றை தன் விருப்புக்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு தன்னை மறந்து அக்கலையில் லயித்து

### கண்டவர் - அல்வி

*ஆனந்தன், இலங்கையின் வடபுலத்தில் மல்லாகம் என்னும் கிராமத்தில் பிறந்தவர். உழைப்பால் உயர்ந்தவர். இன்று ஒரு தொழில் அதிபர், கவிஞர், சிற்பி, சிறந்த நடிகர். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல மனிதன். உலக நாடுகள் பல சென்று சிற்பக்கலையின் அழகை அனுபவித்து வந்தவர். அண்மையில் அவரது சிற்பக் கண்காட்சி, யாழ்ப்பாணத்தில், திருகோணமலையில், கொழும்பில் இடம் பெற்றது. யாழ். திருமறைக்கலாமன்ற கலைக்குடும்பத்தில் ஒரு மூத்தவர். அவரோடு ஒரு சில மணிநேரம் பேசினோம். அதனை இங்கே உங்களோடு.....*

விடுகின்றது. அது அழகியல் கலையாக இருந்தாலும் சரி எந்தக் கலைஞனுக்கும் இயற்கையான ஒரு உந்துதல் இருந்தேயாகவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் நானும் இதற்கு விதிவிலக்கான வனல்ல. நான் பிறந்ததே ஒரு கலைக்குடும்பத்தில். சிறுவயதிலேயே கலையார்வம் கொண்டவனாக இருந்தேன். என் பாடசாலைப்பருவத்திலேயே பல நாடகங்களை எழுதி நடித்தேன். இத்தகைய ஆர்வமும் உந்துதலும்தான் என்னை இன்று கலைக்கோயிலாகத் திகழும் திருமறைக்கலாமன்றத்துடன் இணைத்தது. இயற்கையாகவே என்னுள் புதைந்து கிடந்த கலை யுணர்வுகளை வெளிக்கொணர திருமறைக்



கலாமன்றமும் எனது தொழில் பட்டறையும் ஏற்றதோர் தளமாக அமைந்து விட்டமை வியப்பன்று.

தொழில் ரீதியில் என் கைவண்ணத்தில் உருவான கதவுகள், நிலைகள், யன்னல்கள் போன்றவற்றில் கலைவண்ணம் இயற்கையாகவே துளிர்விடத் தொடங்கியதை நான் உணர்ந்தேன். என் உள்ளத்தில் எழுந்த உணர்வு அலைகளைச் செயல் வடிவில் காட்ட, தொழில் ரீதியாக என் கைப்பட்ட உளி உறுதுணை யானது. சிந்தனைகள் செயலாகின. சிற்பங்கள் உருவாகின. நான் மரபு ரீதியாக திட்டமிட்டு யாரிடமும் இக்கலையைப் படிக்கவில்லை. பழகவும் இல்லை. ஆனால் காலப்போக்கில் இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவாக்ளின் ஆலோசனைகள்; நவீன சிற்பக் கலைப்பற்றிய நூல்களினூடாக என் மனதில் பதிந்த வைகள்; வெளிநாடுகளுக்குச் சென்ற பொழுதெல்லாம் நான் பார்த்த உலகப் புகழ்மிக்க சிற்பிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்களினூடாக பெற்ற நுட்பத்திறன்; என்பவை யெல்லாம் என்படைப்புக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தவை எனலாம்.

★ ***சிற்பக் கலையில் உங்களுக்கென ஒரு தனித்துவத்தைப் பேணுகிறீர்கள். எந்தவகையில் உங்கள் சிற்பங்கள் அதனை வெளிப்படுத்துகின்றன?***

பொதுவாக மனிதனுக்கு, குறிப்பாகக் கலைஞனுக்கு இயற்கையாக ஒரு தனித்துவம் இருக்கத்தான் செய்யும். அதை வெளிப்படுத்துவதும், அதனை அத்துறைசார் விற்பன்னர்கள் ஏற்றுக் கொள்ள வைப்பதும் அக்கலைஞனின் தனிப்பட்ட திறமையில் தான் தங்கியிருக்கின்றது. உதாரணத்திற்கு இன்று எமது மண்ணில் ஓவியக் கலையை எடுத்துக் கொண்டால், இது ரமணியினுடையது, இது இராசையாவினுடையது, இது மார்க்கினுடையது, என்பதை வரைந்தது யார் என்பதை அறியாமலே நாம் கூற முடியும். அதுதான் அவர்களுடைய தனித்துவம், திறமை. நானும் அதையே விரும்புகின்றேன். பழமையின் ஊடாக புதுமையைப் படைக்க விரும்புகின்றேன். மரபினூடாக ஒரு சில மாற்றங்களைப் புகுத்த விரும்புகின்றேன். இதுவரை வெளிப்படுத்தாத, மறைந்து போய்க்கொண்டிருக்கும், சில பாரம்பரிய உடைநடை பாவனைகளை எனது சிற்பங்களினூடாக ஆவணப்படுத்த விரும்புகின்றேன். அந்த முயற்சியில் ஓரளவு திருப்தி கண்டுள்ளேன். அதை எனது சிற்பங்கள் சில வெளிப்படுத்துகின்றன. இன்றைய நவீன கருத்துக்களுக்கும், உணர்வுகளுக்கும், பின் நவீனத்துவ சிந்தனைகளுக்கும், ஒரு கலைஞனின் உணர்வுகள் ஆட்படாது இருக்க முடியாது. காலத்தின் நகர்வும், தேவையும், ஒரு கலைஞனின் சமகாலப் படைப்பில் இயற்கையாகவே ஊடுருவும் என்பது நாமறிந்த உண்மை. அவற்றை அந்தப் படைப்புக்கள் பேசவேண்டும். அப்பொழுதுதான் அவை அந்தக் காலத்தையும் வென்று வாழும் தன்மை உடையதாக மாறும். பிள்ளையார் சிலையை எத்தனையோ சிற்பிகள் வடித்திருக்கிறார்கள். எத்தனையோ விதத்தில் அவை அமைந்திருக்கின்றன. அவற்றையே திரும்பவும் நான் படைத்து என்ன பயன்! . அது படைப்பு அல்ல. எனது ''ஆனந்த கணபதி'' இந்த வகையில் ஒரு புதிய கண்ணோட்டத்தில் எழுந்த ஒரு மாறுபட்ட படைப்பு என்றே என் மனம் கூறுகிறது. அதே போன்று ''மாவிடிக்கும் மகளிர்'', ''அகதிகளின் அவலம்'', ''பல பாவங்களைப் பிரதிபலிக்கும் முகம்'', ''நாதஸ்வரக் கச்சேரி'', ''ஓட்டையில் தெரியும் உருவங்கள்'', ''நிலையற்ற உடலழகு'' போன்ற எனது சிலைகள் ஏதோ ஒரு விதத்தில் புதிதாக இருப்பதாக நினைக்கின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் எனது சிற்பங்கள் என் நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றனவோ என்னவோ நான் அறியேன். ஆனால் சிற்பங்கள் மௌன மொழியில் பேசவேண்டும்; நிலையில் நின்று கொண்டே அவை அசைய வேண்டும்; நிலை குலையாமல் நினைத்த கதை கூறவேண்டும்; சிலையாக நின்று கொண்டே அவை சிந்திக்கவும் செய்யவேண்டும். மோனாலிசாவின் மோகனச் சிரிப்பு இன்றும் மக்களை மயக்குகின்றது; அதனால்தான் காலத்தை வென்று அது வாழுகின்றது.

★ ***பாரம்பரியமும் குருசிஷ்யமுறையும் ஒரு கலைஞனின் வளர்ச்சியில் எத்தகைய பங்கினை வகிக்கின்றன?***

பாரம்பரியம், குருசிஷ்ய முறை; இவை எதுவாக இருப்பினும் நான் ஏற்கனவே கூறியவாறு கலைஞனுக்கு ஆர்வம் இருக்கவேண்டும். இயற்கையாகவே ஒரு உந்துதல் இருக்கவேண்டும். ஏதோ பழக்கம் என்பதாலோ, வழிவழி முறையாக வந்த குடும்ப தொழில் என்பதாலோ மட்டும் ஒரு கலைஞனின் செயற்பாடு அமையுமெனின் அங்கே வளர்ச்சியை, மறுமலர்ச்சியை, நவீனத்துவத்தை ,புதுமையைக் காண்பது அரிது.

கலை தொழிலாக இருக்கும் மட்டும் பாரம்பரியம், குருசிஷ்ய முறை என்ற கட்டுக்குள் நாம் நிற்கலாம். ஆனால் கலை படைப்பாக வேண்டுமானால், நிச்சயமாக அக்கட்டுக்கள் உடைக்கப்படவே வேண்டும். பொதுவாக யாழ்ப்பாணத்தில் கோயிற் சிற்பக்கலைஞர்கள் இந்த வட்டத்திற்குள்ளேயே நின்றுகொள்கின்றார்கள். அவர்களுடைய திறமைகள், கடின உழைப்புக்கள் எல்லாம் பாரம்பரியம், குருசிஷ்ய முறை என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே அமிழ்ந்து விடுவதால் அவர்களது வளர்ச்சியும், திறமையும் தேங்கும் நீராகிவிடுகின்றது. நவீன கால ஓட்டத்தின் வேகத்திற்கேற்ப தங்கள் சிந்தனைகளை நகர்த்த முடியாதவர்களாகி விடுகின்றார்கள். இது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

பாரம்பரியமும் குருசிஷ்ய முறையும் கலை வளர்ச்சியின் அத்திவாரமாக அமையட்டும்; ஆனால் அதன் மேல் எழுப்பப்படும் கலைக்கோயில் மாறுபடலாம்; வேறுபடலாம்; புதுமையைப் பிரதிபலிக்கலாம்; ஒரு புரட்சியையே உருவாக்கலாம். இன்றைய நவீன உலகும், வர இருக்கும் இருபத்தியோராம் நூற்றாண்டின் விடிவும், கலைஞர்களிடம் இதையே எதிர்பார்க்கின்றது.

நான் பாரம்பரியத்திலோ குருசிஷ்ய முறையிலோ வந்தவனல்ல. கலை என்னை ஆட்கொண்டது. ஆர்வம் என்னை உந்தியது. கையில் இருந்த உளியும், காலடியில் கிடைத்த மரக்குற்றிகளும், அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்வடிவம் கொடுக்க கருவிகளாக அமைந்தன. அதேவேளை உலகளாவிய ரீதியில் கலைத்தொண்டு புரியும் திருமறைக் கலாமன்றத்தின் பரந்த, விரிந்த, உயர்ந்த எண்ண அலைகள் என்னையும் ஈர்த்து, இழுத்து என் படைப்புக்களை கலை உந்தும் இதயங்கள் சில காண வழிவகுத்தது. இது தான் உண்மை.


* ***உங்கள் சிற்பக்கலைச் செயற்பாட்டில் நீங்கள் சந்தித்தவர்கள், ஆதரவாக இருந்தவர்கள் பற்றி....***

எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் ஓவியர் மாற்கு. பல விளக்கங்களை தருவார். தன் கருத்துக்களைக் கூறுவார். பி.ஏ. அமிர்தநாதர் ஓர் அரிய சிற்பக் கலைஞர். என் ஆர்வத்தைக் கண்டு, சிற்பக்கலை சம்பந்தமான பல புத்தகங்களை எனக்கு அன்பளிப்பாக தந்தார். அவை எனக்கு மிகவும் உதவின. சிற்பி விஸ்வலிங்கத்தை என்னால் மறக்கவே முடியாது. என்னோடு சிலகாலம் தங்கியிருந்து சிற்பங்களைச் செதுக்க உதவியவர். சில நுட்பங்களை எனக்கு கற்றுத்தந்தவர். எனக்கு மிகவும் பிடித்தமான சிற்பக் கலைஞர் இவரேதான். ஓவியர் இராசையா, ரமணி, இராசரட்டினம், கனகசபை, வாசுகி போன்ற வர்கள் என் சந்திப்பில் இடம்பெற்ற சிறந்த கலைஞர்கள்.

என் கலைக்கூடத்திற்கு வந்து என்னை உற்சாகப் படுத்தியவர்கள் பலர். அவர்களுள் பல்கலைக்கழக விரிவுரையாளர் கிருஸ்ணராஜா அவர்கள், தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அதிபராக இருந்த புஸ்பநாதன் அவர்கள், இசைத்தென்றல் யேசுதாசன், திரு கதிர் காமதாஸ் போன்றவர்களை என்னால் மறக்கமுடியாது. இன்னும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் வருகையும், அவர்களது விமர்சனங்களும், எனது வளர்ச்சிக்கு மிகவும் உதவுகிறது. உற்சாகத்தைத் தருகின்றது. இவற்றுடன் திருமறைக் கலாமன்ற இயக்குனர் நீ.மரிய சேவியர் அடிகளாருடைய கண்டிப்பான அறிவுரைகள், அன்புக் கட்டளைகள் என்னை ஒரு இலட்சியப் பயணத்தை நோக்கி முன்னேற வைக்கின்றது.

* ***யாழ்ப்பாணத்தில் சிற்பக்கலைப் பற்றி ஏதாவது கூறமுடியுமா?***

யாழ்ப்பாணத்தில் கற்சிற்பம், மரச்சிற்பம், சாந்து சிற்பம், உலோக வார்ப்புக்கள் போன்றவை நாமறிந்த காலந்தொட்டு வளர்ந்து வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவை பெரும்பாலும் இந்து - கிறிஸ்தவ கோயில்களுக்காக உருவாக்கப்பட்டன. ஆரம்பக்காலத்தில் இந்திய சிற்பிகளே இங்கு வந்து எம்மவருடன் இணைந்து இவைகளைச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது எம்மவர்களே தனித்து நின்று இவற்றைச் செய்கின்றார்கள். கோவில் தேர்களில் கோபுரங்களில் காணப்படும் தெய்வச் சிலைகள்



கையால் உருவாகும் கலைவண்ணம்

புராண இதிகாசக் கதைகளைக் கூறுகின்றன. கற்சிற்பங்களைச் செய்யும் சிற்பிகள் இப்பொழுது வெகுவாகக் குறைந்துவிட்டார்கள். காரணம் செய்வதற்குரிய மூலப்பொருட்கள் கிடைப்பதில்லை. உலோக வார்ப்புக்களில் தெய்வாம் சமுள்ள சிலைகள் இப்பொழுது வார்க்கப்படுகின்றது. ஆனால் அன்றுபோலவே இன்றும் எவ்வித மாற்றமுமின்றி வார்க்கப்படுகின்றன. இதனை கலையென்றோ வளர்ச்சியென்றோ கூறமுடிவதில்லை. இவைகளைக் (Creative Art) கலைப்படைப்புகள் என்றும் கூறமுடியாது.

கிறிஸ்தவ தேவாலயங்களில் ஆரம்பக்காலத்தில் சிலைகளை சில சிறந்த கலைஞர்கள் சாந்திலே செய்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவர்களில் மனுவல் தம்பி, மாணிக்க தம்பி, லியோ போன்றவர்களின் படைப்புக்கள் குறிப்பிடத்தக்கன. ஆனால் தற்போது எவருமே இப்பணிகளில் ஈடுபடுவதில்லை என்பது வேதனைக்குரியது. எஞ்சியிருந்த சில சிற்பங்களும் அண்மையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அழியுண்டு சிதையுண்டு போயிற்று.

* ***நவீன சிற்பங்களும், ஓவியங்களும் மக்கள் ரசனையும் பற்றி என்ன கூறுகின்றீர்கள்.***

எதிலும் நவீனத்துவம் நோக்கியே இன்று உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. நாம் இன்று பின் நவீனத்துவ உலகில் நின்றுக்கொண்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் தொட்டு எந்தக்கலையும் இன்று இதற்கு விதிவிலக்கல்ல. சிற்பக்கலையும் அவ்வாறேதான். இதனை அப்ஸ்ரக்ற் (Abstract) என்று கூறுவார்கள். அரூபபாணி – சிம்பொலிக்ஸ் எனப்படும் குறியீடுகளை சிற்பம் பிரதிபலிக்கின்றது. ஒரு சிற்பியோ, ஓவியனோ தனது மன எழுச்சியை, அழுத்தத்தை, உள்ளுணர்வை காட்டுதற்கு நவீன பாணி பெரிதும் பயன்படுகின்றது. மக்கள் அதனைப் புரிந்துகொள்ளவும், இரசிக்கவும் பழகவேண்டும். இன்றைய இளம் சந்ததி நவீனத் துவத்தையே விரும்புகின்றது. ஒரு சிலை வெறுமனே சிலையாக மட்டும் இருந்துவிடக்கூடாது. அது பார்வையாளரை சிந்திக்க வைக்குமானால் அதில் ஒரு சிறப்பு இருக்கின்றது. இதே வகையைச் சேர்ந்தது தான் சிலுவையில் கட்டப்பட்டிருக்கும் எனது சமாதானப்புறா.

★ *கடந்த 10 வருடங்களாக நூற்றுக்கு மேற்பட்ட சிலைகளை வடித்து விட்டீர்களே! உங்கள் இலட்சியம் நிறைவேறி விட்டதா?*

கலைஞனுக்கு நிறைவு என்பது ஒரு முடிவற்ற தூரம். அவனது இலட்சியப்பயணம் ஒரு தொடர்கதை. எத்தனை சிலைகளை ஆனந்தன் செய்தான் என்பதல்ல முக்கியம், அதில் ஒன்று வரலாற்றில் பேசப்படும் ஒரு சாதனையைப் புரியுமானால் அது அவன் தேடலுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகலாம். ஆனாலும் கலைஞனின் தேடல் தொடரவே செய்யும். படித்த பாடத்தையே ஒப்புவிப்பவன் அல்ல கலைஞன், புதிதாக எதையும் படைக்க நினைப்பவன், எதிலும் எதையோ தேடிக்கொண்டிருப்பவன். தன்னையே தான் விமர்சிப்பவன். கண்ணதாசன் தான் எழுதிய பாடல் ஒன்றைப் பலவருடங்களின் பின்னர் கேட்ட பொழுது ''அட – சீ இதை இப்படி பாடியிருக்கலாமே'' என்று கவலைப்பட்டாராம். அவன்தான் கலைஞன்.

★ *நீங்கள் ஒரு சிற்பியாக மட்டும்தானா...*

இல்லை. என் சிந்தனையை எப்படி சிற்பத்தில் செதுக்குகின்றேனோ, அதே போன்று அதனை சிலபல வேளைகளில் கவிதையில் வடிப்பேன். கட்டுரையில் எழுதுவேன். முடியும்பொழுது மேடையில் நடிப்பேன். திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி யில் ஆரம்பகாலத்தில் யேசுவின் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளேன். அண்மையில் ''கலைச்சுவடுகள்'' எனும் கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளேன். அவை எனது சிலைகள் பற்றிப் பேசுகின்றன.

★ *கலையும் அதன் எதிர்காலமும் பற்றி என்ன கூறுகின்றீர்கள்.*

கலை கலைக்காகவே என்றொரு காலம் இருந்தது. இன்று அவ்வாறல்ல. கலை வாழ்வுக்காக; மானுட விடிவுக்காக; சமுக விடுதலைக்காக; சமுதாய முன்னேற்றத்திற்காக; என்றெல்லாம் கருதப்படும் நிலைக்கு கலையின் செயற்பாடு இன்று அமைந்து விட்டது. வாழ்வியலே ஒரு கலை என்று கூறுமளவுக்கு இன்று உலகம் மாறிக் கொண்டிருக்கின்றது. கலைவழி இறைபணியும் நடக்கின்றது; மறுபுறத்தில் கலைவழி கலாச்சாரப் புரட்சியும் நடக்கிறது. உள ஆற்றுப்படுத்த லுக்குக் கூட கலை ஒரு நல்ல ஔடதமாக அமைகின்றது என்று நவீன உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இன்று தெரிந்தோ தெரியாமலோ எல்லாவற்றிற்குமே நவீனம் என்ற சாயம் பூசப் படுகின்றது. நவீன கலைப்படைப்புக்கள் என்ற போர்வையில் நல்லதும் கெட்டதும் நம் வாசலடிக்கே வந்து நர்த்தனமாடக் கூடிய அதிவேக கலைத் தொடர்புச் சாதனங்களுடன் நாம் வாழ்ந்து கொண்டி ருக்கின்றோம். எனவே இன்று நாம் சற்று விழிப்பாக இருக்கவேண்டும். கலை அது எந்தவடிவத்தில் இருந்தாலும் நல்வாழ்வுக்கு ஒரு ஊடகமாக அமையும் வண்ணம் இருந்தல் நன்று.

★ *கலைஞனுக்கு சுமுகமான, அமைதியான சூழ்நிலை தேவை. அங்கே தான் அவன் படைப்பு சிறப்படையும் என்பார்கள். ஆனால் யுத்த பேரிகை முழங்கும் யாழ். குடாநாட்டில் எப்படி இத்தனை சிலைகளையும் உங்களால் உருவாக்க முடிந்தது?*

கலைஞன் எந்தச் சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்துவான். இங்கே அமைதி என்பது மன அமைதியையே குறிக்கின்றது. மன உறுதியைக் குறிக்கின்றது. எவற்றையும் இழக்கலாம். ஆனால் மன அமைதியை இழந்தால் எல்லாவற்றையும் இழந்த மாதிரியேதான். கடந்த 10 வருடங்களாக யுத்தம் என் தொழிலைப் பாதித்ததே தவிர என் இலட்சியக் கனவை, கலை ஆர்வத்தைப் பாதிக்கவில்லை. மாறாக ஆவலை பூர்த்தி செய்யும் வண்ணம் அநேக சிலை களைப் படைக்க நல்ல நேரத்தையும், காலத்தையும் தந்தது. என் சிந்தனை முழுவதும் சிலையிலேயே ஒன்றியதால் யுத்த பயம் என்னை அணுகவில்லை. அது என் செயற்பாட்டுக்குத் தடையாக இருக்க வுமில்லை. இன்னும் சுதந்திர, சுயாதீன, உள்ளார்த் தமான வெளிப்பாட்டுக்கு சூழ்நிலை ஒரு தடையாக அமையாது.

★ *இறுதியாக உங்கள் எதிர்காலம் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்.....*


எனது எதிர்காலத்தின் இடைவெளி நாளை மட்டு மாகவும் இருக்கலாம், இன்றேல் இன்னும் நாற்பது ஆண்டுகளாகவும் இருக்கலாம். காலத்தை ஒரு சாட்டாக வைத்து நேரத்தை வீணடிக்க விரும்பாதவன் நான். ஒரு கலைஞனது படைப்புக்கள் மதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும்பொழுது, புகழ்ந்து பேசப்படும் பொழுது, அவன் பெருமிதம் மட்டும் கொள்ளமாட்டான், மாறாக பொறுப்புணர்வும், கடமையுணர்ச்சியும் கொண்டவனாக, காலத்தால் அழியாத சில படைப்புக்களை தன் சந்ததிக்கு விட்டுச் செல்ல இன்னும் என்ன செய்யலாம் என்று ஆவேசம் கொள்வான். அந்நிலை தான் இன்று என் நிலையும். என் சிந்தை எல்லாம் சிலைகள் பற்றியதாகத்தான் இருக்கும். மகாத்மா காந்தி கூறியிருந்தார் ''சரித்திரத்தைப் பின்பற்றாதே, நீ அதை உருவாக்கு'' என்று, நான் மைக்கல் அஞ்சலோவையும், லியனாடோ டாவின்சியையும், றெம்பிறாண்ட போன்றவர்களையும் படித்திருக்கின்றேன். அவர்கள் கலைப்படைப்புக்களை பார்த்திருக்கின்றேன். ஆனால் முடிந்தளவு ஒரு ஆனந்தனாகவே என் தனித்துவத்தை பேண முயலுகின்றேன். சிலை செய்வது ஒரு கலை; கலைக்குத் தேவையானது தெளிந்த மனநிலை; அந்த மனநிலையில் ஊற்றெடுக்க வேண்டியது அற்புதமான கற்பனை; அதனை நிஜமாக்க நான் உளி எடுத்தால் அது சிலையாகலாம்; எழுதுகோல் எடுத்தால் அது கவிதையாகலாம்; அவற்றை கலையார்வமிக்க மக்கள் கூட்டம் காலமெல்லாம் ஏற்பார்களானால் அந்தப் படைப்பு சாகா வரம் பெறலாம். அங்கே ஒரு வேளை காலத்தையும் கடந்து ஆனந்தன் வாழலாம்.

வணக்கம் நன்றி.



கண்காட்சியின் போது ஆயருடன் இயக்குனரும் சிற்பியும்

# வாழ்த்துக்கள் நூறு

## சிற்பக் கண்காட்சி பற்றிய கருத்துக்கள்

*ஆனந்தனின் சிற்பங்கள் வெறும் யதார்த்த பொம்மைகளாக அல்லாமல் உணர்வு பூர்வமாகப் பேசும் கலை வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன.*

*- செங்கையாழியான்*

*எமது உள்ளங்களை தெய்வத்திடமிட்டுச் செல்கின்றது. சிந்திக்க சிந்திக்கத் தொடர்ந்து கொண்டு போகும் தொடர் காட்சியாக எமக்கு இது புலப்படுகிறது.*

*- சகோதரி மேரி விக்ருவார்*
*திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்.*

*சிலைகள் பேசுகின்றன. பாடுகின்றன. ஆடுகின்றன. அழுகின்றன. சிரிக்கின்றன. நம்பவே முடியவில்லை! எம்மிடையே இப்படியும் ஒரு கலைஞனா? நாடே பெருமைப்படுகின்றது.*

*- மேரி ராணி. - அதிபர்*

*கற்பனைத் திறனுடன், கைத்திறன் போட்டியிட்டுச் செல்கின்றது. கலையுடன் அவரது பண்பட்ட உள்ளத்தையும் அவருடன் நடத்திய பேட்டியில் அறிந்து கொண்டோம்.*

*- சகோ.மேரி எட்விஜ், சகோ.மேரி பார்பரா, யாழ்.*

*உங்கள் கலைப் படைப்புக்கள் விந்தையானவை*

*- சிவநாதன், அயோத்தி*

*ஆனந்தன் கலையாக வந்தான்*
*அன்பையே விலையாக தந்தான்*

*- கவிஞர் யாழ்-ஜெயம்*

*காலாதி காலத்தின் கருவூலங்களை எம்*
*கண்களால் கண்டு களிக்க தன் கரங்களால்*
*சிலையாக வடித்த சிற்பி ஆனந்தனை*
*கரம் கூப்பி வாழ்த்துகிறோம்.*

*- நல்லாயன் சகோதரிகள், நாவாந்துறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இறைவன் அவருக்கு கொடுத்த கொடை
– சீ. சுப்பிரமணியம், கோண்டாவில்

மரங்களின் மீது மலர்ந்து வந்த சிற்பங்களில் உயிரோட்டம் தெரிகிறது
– அ.மா. இராசேந்திரம், அதிபர், அச்சுவேலி

மரங்கள் நவரசங்களை மாற்றி மாற்றிக் காட்டுவதை கண்டு லயித்து போனோம்.
– அனிதா, வினிதா சகோதரிகள், யாழ்.

மௌனமாக நிற்கும் சிலைகள் ஏதோ ஒவ்வொன்றை சுட்டிக்காட்டி இசைநாதம் மீட்டி நிற்கின்றன.
– ஜூட் றவிநாத், உடுவில்

சிற்பங்கள் உயிருடன் இருக்கின்றன. உலகெங்கும் அறியப்படவேண்டும்.
– இராசரத்தினம்
கி.சே.அலுவலர், வட்டுக்கோட்டை

ஆனந்தன் ஈழத்து சிற்பக்கலைக்கு புத்துயிர் ஊட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.
– சாள்ஸ் யோசேவ், யாழ்.

எம்பக்கே தேவாலயத்தை எம் மாணவர்கட்கு பார்க்கும் வாய்ப்பு இல்லாவிடினும் ஆனந்தனின் சிற்பங்களால் அவற்றை காணும் பாக்கியம் பெற்றுள்ளோம்.
– எஸ்.கோகிலன், ஆசிரியர், நல்லூர்.

ஆனந்தனின் சிற்பங்களை பார்த்து வியப்படைந்தேன். மீண்டும் ஒரு சோழர் காலம் பிறக்கட்டும்.
– மு.சிவப்பிரகாசம் ஓவியர், கொழும்புத்துறை

இந்தியாவில்தான் எண்ணற்ற சிற்பக் கலைஞர்கள் இருப்பார்கள் என எண்ணியிருந்த எம் மக்களுக்கு எம் மண்ணிலும் இத்தகையவர்களிருக்கின்றார்கள் என்பதை இன்று கண்கூடாக கண்டு பெருமை கொண்டோம்.
– சற்குணபாலன், வல்வெட்டித்துறை

வெறும் அழகியற் காட்சியாக மட்டுமன்றி அதற்கும் அப்பாற் சென்று கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் ஊட்டுகின்றன.
– அருட்சகோதரி யோலன்ட்,
அதிபர், தி.கு.க. மடம், யாழ்.

மரங்களை நான் காணவில்லை. அவை உயிரோடு பேசின. யார் கொடுத்தது இந்த உயிர்? ஆனந்தனின் சிந்தனை ஆற்றலா? அவருக்குள்ள தன்னம்பிக்கை சிந்தனை ஊற்று எம்மனைவரையும் சிந்திக்க தூண்டுகிறது.
– யோசப் பாலா, "மணியோசை", யாழ்.

இறைவனின் படைப்பாற்றலின் உன்னத வெளிப்பாடு எமது ஆத்மார்த்த சிந்தனையைத் தட்டியெழுப்பி விடுகிறது. தமிழ் மண்ணுக்கு இத்தகையதோர் கலைஞனைத் தந்த இறைவனுக்கு நன்றி.
– சகோ.மேரி டனஸ்தாஸ்
தி.கு.க.மடம், யாழ்.

சிற்ப வல்லுனரின் நுண்ணிய வெளிப்பாடு எவராலும் சாதாரணமாக மதிப்பிட முடியாதது.
– எம். திருவாசகர், யாழ்.

மரத்தில் ஒலி, ஒளி நிறைவான உருவங்களை கண்டு மனம் மகிழ்ந்தேன்.
– சி.மார்க்கண்டு கொய்யாத்தோட்டம், யாழ்.

எமது கலையார்வம் குறைந்து அருகிப்போன காலகட்டத்தில் நிறைவாகப் படைத்திருக்கும் சிற்பக்கலை மாணிக்கம் ஆனந்தனை வாழ்த்துகின்றேன்.
– வண.றொபேட் நேசநாயகம்,
குருநகர் பங்குத்தந்தை

திருமறைக் கலாமன்றம் தந்த திருமறைச் செல்வன் ஆனந்தனே உன் நிறைவான கை வண்ணத்தில் கலைதன்னைக் குறைவறத் தந்தவனே உன் கலை காலத்தால் அழியாத சுவடுகளாய் ஞாலத்தில் நிலைத்திடும்.
– ப.கனகசிங்கம் "யாழோன்"

இன்றைய சூழ்நிலையில் மருத்துவர்களால் எமக்கு மனோரீதியாக அளிக்கப்படவேண்டிய சிகிச்சையை ஆனந்தனின் சிற்பங்களைப் பார்த்தபோது அனுபவித்துணர்ந்தேன். நொந்துபோன இனத்திற்கு நல்ல மருந்து.
– எஸ்.என். வாமதேவன், மானிப்பாய்


பொறுமையுடன் வடித்தெடுத்த இயேசு பாலகன் பிறப்புச் சிற்பத்தை சிற்பி மனதாலும் கண்ணாலும் அளந்து தெய்வாம்சங்களுக்குரிய சிறப்புடன் செய்துள்ளார். ஒரே மரத்தில் செய்யப்பட்ட இச்சிற்பத்திற்கு ஈடிணையில்லை.
– ஆட்ஸ் தர்மன், கோண்டாவில்

கலையின் மகோன்னத நிலையை வெளிப்படுத்தியுள்ள இக்கைவண்ணங்கள் கடந்தகால, நிகழ்கால மனித சமுதாயத்தின் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக் கூறுபவையாகத் திகழ்கின்றன.
– யோண்சிங்கம், யாழ்.

உயிருள்ளவரை உள்ளத்தில் நிலைத்து நிற்கும் கலைப்படைப்புகள்
– சு.சிறிதரன், உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரத்சந்திரவும் சமகால சிங்கள அரங்கும்

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி இலங்கைத் தீவை ஆட்கொண்ட பொழுது, அதனுடைய கலாச்சாரம் இங்கே அக்காலத்தில் நிலவிய, ஆனால் சற்றுப் பலவீனமடைந்த நிலையிலும் தாக்குப்பிடித்துக் கொண்டிருந்த ஒரு மாபெரும் பாரம்பரியத்துடன் மோத வேண்டிய நிலைக்கு உள்ளானது. இப்பாரம்பரிய கலாச்சாரமானது அசோகனுடைய காலத்தில் இருந்து, இந்தியப் பெருநிலப்பரப்பினூடாக புத்த சமயம் புகுந்த காலத்தில் இருந்து இங்கு வளர்ச்சியடைந்து வந்துகொண்டிருந்த தொன்றாகும்.

இவ்வாறாக பெரும்பான்மை மக்களிடம் தாக்குப் பிடித்த புத்தமார்க்க இலக்கிய பாரம்பரியமானது, சரித்திர காலத்திற்கு முற்பட்டு இங்கு நிலவிய பலதேவதை வழிபாடு, அதாவது இங்கு வாழ்ந்த கிராமிய மக்களின் கிரியை வழிபாட்டு முறையில் அமைந்த கிராமிய மத அநுட்டானத்துடன் இணைந்து தனது காலை பதித்தது.

இவ்வாறு இலங்கையின் பாரம்பரியமும், புத்தமார்க்க இலக்கிய பாரம்பரியமும், மதப் பரப்புதல் நடவடிக்கையினூடாக இணைந்து தங்களுக்கிடையில் ஒரு பொதுத்தன்மையை உருவாக்குமுகமாக இரண்டறக் கலந்தன. இந்நிலையில் புதிதாக ஆக்கிரமித்த கலாச்சாரம் இங்கிருந்த பாரிய கலாச்சாரத்துடன் பிணக்குற்றபொழுது ஒருவித சகிப்புத்தன்மை தென்பட்டது.

ஆனால் இவ்வித மோதல், 19ம் நூற்றாண்டில் பிரித்தானிய மதபோதனையாளர் இங்கிருந்த பாரம்பரிய மதத்துடன் நேரடியாக பிணக்குற்ற பொழுது உச்சக்


ஆங்கிலத்தில்: பந்துல ஜயவர்தன

தமிழில்: அல்வி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தை அடைந்தது. இதற்கு ஜேர்மனியிலும், இத்தாலியிலும் முறையே ஹிட்லருடையதும், முசோலினியுடையதுமான காலத்தில் எழுந்த வன்மையான தேசிய உணர்வு மாத்திரமல்லாது, அதே காலத்தில் அண்டை நாடான இந்தியாவிலும் மற்றும் ஆசிய நாடுகளிலும் எழுந்த அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டங்களும் காரணமாக இருந்தன. இவ்வாறான சுதந்திரத்திற்கான குரல் வெறும் அரசியல் சுதந்திரத்திற்காக மட்டுமல்லாது, கலாச்சார விடுதலைக்காகவுமாக இருந்தது. தொடக்கத்தில் ஆக்கிரமித்த கலாச்சாரத்துடன் இணைந்து போனவர்கள். காலகதியில் தங்கள் முக்கிய பாரம்பரிய கலாச்சார தனித்துவத்தைத் தேடும் முயற்சியில் முன்னேற்றம் கண்டார்கள்.

இவ்வித முயற்சியில் ஐரோப்பாவில் கல்வி கற்றுத் திரும்பிய ஆனந்தக் குமாரசாமி போன்றவர்கள் முன்னோடியாக விளங்கினார்கள். இத்தகைய புத்திஜீவிகளுடைய தேடுதல், இந்திய கலாச்சாரத்துடன் மதரீதியாக எமக்கிருந்த உறவை புலப்படுத்தியது. இத்தகையவர்களில் அநாகரிக தர்மபாலவும் ஒருவர். இவ்வாறான விழிப்புணர்வு அரசியல், மதவிடயங்களில் மாத்திரமல்ல அழகியல் உணர்விலும் ஏற்பட்டது. இக்காலத்தில்தான் இந்தியாவில் ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதன் அந்நாட்டின் கலாச்சார மறுமலர்ச்சிக்கு வித்திட்டுக் கொண்டிருந்தது. அங்கு சென்று வந்த இலங்கையர் இங்கும் அத்தகைய கலாச்சார மறுமலர்ச்சியைக் காணவிழைந்தனர்.

இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றிய ஆனந்த சமரகோன், பாடகர் சுனில் சாந்தா, இசையாசிரியர் மக்கலோமுவ, சுதேச பலே நடன ஆசிரியர் சித்திரசேன, இசைஞன் அமரதேவ, மற்றும் ஓவியக் கலைஞர் ஜோஜ் சயிற் போன்ற சாந்திநிகேதனில் உருவாக்கம் பெற்ற தேசியக் கலைஞர்கள் இங்கும் கலாச்சார மறுமலர்ச்சி காண முன்னின்றனர். கீழைத் தேய பாரம்பரியத்தில் அமைந்த சமகால தேசிய கலை முகிழ்விற்கு முன்னணியில் நின்று உழைத்தவர்கள் என்ற தன்மையில் இவர்கள் வெற்றி கண்டார்கள்.

இந்திய நாடக ஆக்கங்கள் சில புராதன இலங்கையின் நாடக இலக்கியத்தில் இடைக்கிடை முகம் காட்டியுள்ள போதிலும், புராதன இலங்கையில் நாடக இலக்கியம் என்ற ஒன்று இருந்தது என்பதற்கு எவ்வித சான்றுமில்லை. ஆனால் இலங்கையின் கிராமியக் கலாச்சாரமானது நீண்ட பாரம்பரியமுள்ள ஒரு மதரீதியான "பேயாட்டல்" எனும் ஒரு ஆட்ட முறையினை பேணிவந்துள்ளமையை நாம் காண முடிகின்றது. இவ்வாறான ஆட்டமுறை நிகழ்வுகளே அன்று முன்னேற்றமடையாத நிலையில் இருந்த கிராமிய நாடக ஆற்றுகையின் தளமாக அமைந்தது எனலாம். இதிலிருந்தே கிராமிய ஆற்றுகை உதித்தது. காலனித்துவ ஆட்சியின் ஆரம்பத்திற்கு சற்று முற்பட்ட காலத்திற்தான்; அருகி வந்துகொண்டிருந்த தம் பக்தர்களைக் கவரும் நோக்கமாக புத்த அறிஞர்கள் நாடகப் பிரதியாக்கங்களை உருவாக்கினர். ஆனால் உண்மையில் கிறிஸ்தவ மிசனரியே இங்கு ஒரு கிராமிய அரங்க அமைப்பை அறிமுகம் செய்தவர்கள் எனலாம். பின்னர் இது "நாடகம்" என அழைக்கப்பட்டது. இது தென்னிந்திய கிராமியத் தழுவலாக அமைந்திருந்ததாயினும் உண்மையில் அதன் பிறப்பிடம் சமஸ்கிருத (Court Theatre) வேதியல் சார்ந்த அரங்காகவே இருந்தது. இப்புதிய வடிவமானது முழுத் தீவையும் வலம் வரக் கூடிய வல்லமை பெற்றிருந்ததுடன் கிராமமட்டத்தில் அமோக ஆதரவைப் பெற்றது.

இவ்விதமாகப் பிரபல்யம் அடைந்த இப்புதுநாடக வடிவம், விரைவில் சுதேச புராணக் கதைகளைத் தன்னகத்தே ஏற்றுக் கொண்டது.

இவ்வாறான புதுவடிவம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆங்கில - இந்தியக் கலப்பில் உருவானதும், பார்சி அரங்கென்று அறிமுகமாகியதுமான ஒரு நகர அரங்க வடிவின் தாக்கத்தினால் பின்னடைவைக் கண்டது. இப்பார்சி நாடக அரங்கு நகர, பாமர, பாட்டாளி வர்க்கத்தினரைக் கவர்ந்தது மாத்திரமல்ல, அத்துடன் அதன் கேலித்தனமான, பரிகாசமான நாடக பாணி, துரிதமாக ஆங்கில மரபுக்கு அடிமையாகிய மத்திய தரவர்க்கத்தையும் ஈர்த்தது.

இவ்வாறாக பிரசித்தமடைந்த பார்சி நாடக அரங்கானது ஒரு காலகட்டத்தில் சுதந்திரத்திற்கான தேசிய அரங்கியல் இயக்கங்களுடன் ஈடுபாடு கொண்டு சுதந்திர உணர்வை ஊட்டுமுகமாக தனது நாடக உத்திகளை பௌத்த புராணக் கதைகளில் இருந்தும் கையாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. உண்மையிலேயே இவ்வரங்கு இன்று தீவிர தேசியவாதிகள் பரம்பரையை விட்டுச் சென்றதுடன், தங்கள் அரங்கின் ஒரு பகுதியாகிய இந்துஸ்தானி சங்கீதத்தையும் விட்டுச் சென்றது. அதன் அடையாளமாக இன்றும் திகழ்ந்து கொண்டிருப்பதுதான் “டவர் தியேட்டர்”.

இக்கலப்பு பார்சி நகர நாடக அரங்கு தனது இறுதிக் காலத்தில் ஒரு றோமன் கத்தோலிக்க அரங்கை; அதுவும் மறைமுகமாக காதல்வயப்பட்ட இன்பியல் நாடகங்களுக்கு எதிரான ஒரு சமயச் சார்பான சமூக, ஒரளவு இயல்புவாத நாடகங்களை அறிமுகப்படுத்திச் சென்றது. இந்நாடகங்கள் ஒரு கடின, செயற்கையான மொழி நடையை உபயோகிக்கும் பண்புகளைக் கொண்டிருந்தது மாத்திரமல்ல, திடீரெனப் பாடல்கள் தோன்றும் பழைய “நாடகம்” “நூர்த்தி” போன்றவற்றின் மாதிரியை உள்ளடக்கியதான பாடல்களை இரசிக்கும் பார்வையாளர்களையும் கொண்டிருந்தது.

இதில் அதிருப்தி கொண்ட புதிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சிலர் பிரசித்தி பெற்ற சில ஐரோப்பிய நாடகங்களை அதாவது கோகல், மோலியர் செக்கோவ், வைவ் போன்றவர்களின் நாடகங்களை தேசியப் போர்வையில் சிங்களப் பார்வையாளர் முன் கொண்டு வந்தனர். இவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்தான் அந்நாளில் இளம் விரிவுரையாளராகத் திகழ்ந்த சரத்சந்திர அவர்கள். இளம் வயதில் இருந்தே சமகால சிங்கள சமூகத்தின் கலாச்சார மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை காட்டியவர்; என்பதுடன் மேலோட்டமாகவும், கண்மூடித்தனமாகவும் பின்பற்றப்படும் மேல்நாட்டுக் கலையம்சங்களை கண்டிருக்கும் அதே வேளையில் எங்கிருந்தாலும் நவீனத்துவத்தை முட்டாள்தனமாக எதிர்ப்பவர்களையும் சாடினார்.

இவர் ஏற்கனவே சிங்களக் கதைகளின் பரிணாம வளர்ச்சியை பற்றிய பல தர்க்க ரீதியான விமர்சனங்களையும்; சிங்கள கலாச்சார மறுமலர்ச்சியைப் பற்றிய பல தர்க்கரீதியான கட்டுரைகளையும் எழுதியிருந்தார்.

## அதிஷ்டம்

வெள்ளிகள் பூத்த குடிசையில்
கண் மழையில் நனைந்த
ஓர் ஆண்டியை .
சடுதியில் விழுந்த
பேரதிஷ்டம்
நிலவமைச்சர் ஆக்கியது.

ஆண்டி இனி அவராக
வேண்டியமட்டும்
நிலம் விழுங்கி
நிமிர்ந்த
மாடிகள் விழுங்கி
தலை நிமிர்ந்தாரே
பண்ணையாராக.

பர்ஜனன்

இவர் கூட சாந்திநிகேதனின் அநுபவங்களை பெற்று நாடு திருப்பியிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்கள நாடக அரங்கின் மூலத்தை தேடும் ஒரு அரும்பெரும் முயற்சியாக இவர் சிங்கள நாட்டுக் கூத்துக் களை ஆய்வுசெய்து அதன் பலாபலன்களை வெளிப்படுத்தினார். சிங்கள நாடக அரங்கின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் சமகால ஐரோப்பிய நாடகங்களின் மாதிரியின் ஊடாகத்தான் சிங்கள நடை அரங்கின் தரத்தை உயர்த்த முடியுமென்று நம்பினார். அதன் காரணமாக அன்றைய ஆங்கிலப் பேராசிரியராக இருந்த லின்லூடோவிக் என்பவரை ஊக்கப்படுத்தியும், மற்றும் பல சிங்கள அறிஞர்களுடன் இணைந்தும் கோகேல், மோலியர் போன்றோரின் படைப்புக்களை உருவாக்கினார். இவ்வாறான பரிசோதனையில் சிறிதுகாலம் ஈடுபட்ட சரத்சந்திர, கால கதியில் இது பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறவில்லை என்பதைக் கண்டார். காரணம் நாடகத்தை வெளிப் படுத்தும் தன்மை அவர்களுடைய வாழ்க்கை முறையில் இருந்து அன்னியப்பட்டு இருந்தமையே என்பதை உணர்ந்தார். இவ்விதமான கணிப்பீடுகளும்; மற்றும் சிங்கள நாட்டுக்கூத்தில் அவருக்கிருந்த நெருக்கமும்; சமகால சிங்கள பார்வையாளர்களுக்கு இவற்றில் இருந்து சில பாரம்பரிய விழுமியங்களை எடுத்து ஒரு ஆற்றுகையை உருவாக்க வேண்டிய உந்து நிலை கொடுத்தது. இவ்வாறான பரிசோதனையில் ஒன்றுதான் அவருடைய ''பபாவதி” (Pbavati) எனும் நாடகம். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்த சமயக் கட்டுக் கதையில் இருந்து எடுக்கப்பட்டு நவீனப் படுத்தப்பட்ட ஒரு ஆற்றுகை. இங்கே கோட்டும், ரையும், சாறியும் அணிந்துவந்து பாத்திரங்கள் பேசின. பாரம்பரிய நாடகத்தில வருவது போல முகவுரையும், முடிவுரையும் வழங்கும் உரைஞர்கள் கதையை நகர்த்திச் சென்றனர். இவ்வாறான கலப்புப் படைப்பு பார்வையாளரை அவ்வளவாக கவரவில்லை.


இந்நிலையில் சரத்சந்திரவின் யப்பானிய விஜயம் அவருடைய நாடகக் கலையுலகில் ஓர் புதிய அரங்கியல் அணுகுமுறைக்கு வித்திட்டது. ஜப்பானிய பாரம்பரிய நாடகங்களான "கபுகி" "நோ" போன்ற நாடகங்களின் மேல் விழுந்த அவரது பார்வை, இங்கும் தற்கால மக்களுக்கு பாரம்பரியத்தினூடாக புதுமையைப் புகுத்தும் எண்ணத்திற்கு காலாக அமைந்தது.

இந்நிலையில் 1948ல் இலங்கை சுதந்திரம் பெற்றது. 1956ல் தேசிய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஒரு கலாச்சார மறுமலர்ச்சி நாட்டில் ஏற்பட்டது. பாரம்பரிய கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும் என்ற ஆனந்தக் குமாரசாமியின் அறைகூவலின் அடிப்படையில் அரசாங்கம் ஒரு கலைக்கழத்தை ஸ்தாபித்தது. 1956இல் இவ்வாறான குரல் சற்று ஓங்கி ஒலித்தது. இதே ஆண்டில்தான் சரத்சந்திர பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு "மனமே" என்ற நாடகத்தை தயாரித்திருந்தார். அதன் கரு பாரம்பரிய நாடக முறைமையைப் பின்பற்றியதான பௌத்த ஜாதகக் கதைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. இந்நாடகத்தின் இசைகூட பாரம்பரிய "நாடகம" என்பதின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. இங்கே நாடக உரைஞர் பாரம்பரிய ஓதுதல் (விருத்தம்) முறையில் நிகழ்வுகளை அறிமுகம் செய்தார். அத்துடன் பாரம்பரிய " நாடகம" வின் மொழி நடை செந்நெறிப்படுத்தப்பட்டிருந்து. ஒப்பனையும் ஆடையமைப்பும், இன்னொரு பல்கலைக்கழக பேராசிரியர் சிறிகுணசிங்க என்பவரால் கையாளப்பட்டிருந்தது மாத்திரமல்ல அது மோடிப்படுத்தப்பட்டிருந்தது.

இன்றுவரை அவ்வாறான மோடிப்படுத்தல் புதிய சிங்கள அரங்கின் பாரம்பரியமாக உருவாக்கப்பட்டுள்ளது. சரத்சந்திராவின் இப்புதிய படைப்பு அந்நேரம் சிங்கள, ஆங்கில, பத்திரிகைகளின் அமோக வரவேற்பை பெற்றதுடன்; பல்கலைக்கழகத்தில் இதுவரை உருவாக்கப்பட்ட நாடகங்களில் இதனைப் போல சிறந்தது ஒன்றை இதுவரை கண்ட தில்லை என்று ஒரு பத்திரிகையாசிரியர் வெகு வாகப் புகழவும் செய்தார்.

நகரத்திலும் கிராமத்திலும் இந்நாடகத்திற்கு அமோக செல்வாக்கு ஏற்பட்டது. படித்த வர்கள் மத்தியில் இந்நாடகம் பாரட்டுப் பெற்றது மாத்திரமல்ல, அவர்களின் அபிப்பிராயப்படி சரத்சந்திராவின் அரசியல் கலாச்சார வெளிப்படுத்தல் எனும் தேடுதல் கண்டுபிடிக்கப்பட்டு பலன் பெற்றுள்ளது என்பதுமாகும். இன்னும் ஒருபடி மேலே கூறுவதானால் இக்கண்டுபிடிப்பு உண்மையிலேயே ஒரு முழுமை பெற்ற அரங்கின், அதாவது இசையும், கவிதையும், ஆடலும், பாடலும், நிறைந்தது, சமகால பார்வையாளர்களின் உள்ளத்தைத் தொடும் ஒரு ஆற்றுகையாக அமைந்திருந்தது என்பதாகும். இருப்பினும் 1961இல் இவருடைய "சிங்கபாகு" எனும் நாடகத் தயாரிப்பானது சற்றே விமர்சனத்துக்குள்ளானது. இது பாரம்பிரய "நாடகம" பாணியில் இருந்து ஓரளவு விலகியும், கிரேக்க மாதிரியில் அமைந்த பலர் சேர்ந்து பாடும் முறையைக் கொண்டதாகவும் அமைந்திருந்து.

தவிர்க்க முடியாத சூழ்நிலையால் தகர்ந்து போயிருக்கும். ஆனால் என்றுமே வாழும் உலகளாவிய மனிதநேய உறவுக் கோட்பாடு பற்றி சரத்சந்திர பேசினார். ஆம் பெரும்பாலும் கவிதா தன்மை வாய்ந்ததும், உள்ளத்தை உறுத்தி, மனக் கிளர்ச்சியை ஊட்டும் மனோபாவம் கொண்டதுமான இவரது பாத்திரங்களின் மிக ஆழமான மனப்பதிவுகள் விமர்சகர்களை கூட ஒரு கணம் மௌனமாக்கி விடுகிறது. ஏனெனில் அந்த அளவுக்கு அவரது படைப்புக்கள் பார்வையாளர்களை வலிந்து தன் வசமாக்கி விடுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையின் எதிர்நிலைக் கருத்தியல்
# (Art's Negative Ideology)

## பிரச்சனைகளின் தோற்றுவாய்களில் கலைகளது இருப்பளவு

கதிரேசு ரதீதரன்

**'கலை'** என்ற தனிப்பகுதி அல்லது துறை, வாழ்விற்கான தேவை அற்ற ஒன்றாகும். ஏனெனில் அனைத்துக் கலைகளும் நிறுத்தப்பட்டால் / தடைசெய்யப்பட்டால் அல்லது முழுமையாக அற்றுப் போனால் அது மனித வாழ்விற்கான அத்தியாவசிய மான ஒன்றின் இழப்பாக கருதப்படாது. எனவே கலையின் நிறுத்தத்திற்கான நியாயபூர்வமான முடிவு கவனத்தில் எடுக்கப்படுகிறது. (இது தொடர்பாக சில ஒத்திசைவான கருத்துக்களை, பிளேட்டோவும் குறித்த காலத்தில் வழங்கி இருந்தார்)

* கலை என்றால் என்ன?
* கலை எவ்விதம் உள்ளது?
* கலையை ஏனையவற்றில் இருந்து பாகுபடுத்துவதென்ன?
* கலைக்கான ஒரு வரைவிலக்கணம் உண்டா?
* கலை பற்றி கலைக்கோட்பாட்டாளர்களது கருத்துக்கள் என்ன?

(கலை பற்றி இவ்விதம் கேள்விகள் தொடரலாம்)

மேற்படி கலை பற்றிய கேள்விகளிற்கான பதில்களை நோக்குதலை விட, இக்கட்டுரை அடிப்படையில் கீழ்வரும் கேள்வியும் பதிலுமே பிரதானமாக எடுக்கப்படுகிறது.

* 'கலை' மனிதர்களின் உளப்பாங்கில், நடத்தைகளில் செல்வாக்கு செலுத்துகிறதா?

இதற்கான பதிலை மனிதர்களின் நடத்தைகளின் மூலமே அறிய முடியும். கலை மனிதர் மீது செலுத்தும் ஆதிக்கம் அல்லது மாற்றம் நடைமுறை வாயிலாக அறிய முடியும். சமூக / நாட்டு / உலக -மேம்மாட்டிலும், தேவைரீதியாகவும் கலைச் செயல்களை சர்ச்சைக்குரிய ஒன்றாகவே கருதமுடியும்.

மருத்துவத்துறை, பொருளாதாரத்துறை, உளவியல்துறை, தொடர்புச்சாதனத்துறை போன்றவற்றில் ஏதாவது ஒரு துறையின் செயற்பாட்டை நிறுத்தினால், மனித வாழ்வுத் தேவையின் இயல்பில் பாதகம் ஏற்படும் என்பதை – ஊக ரீதியாகவும்; சில நடைபெற்ற, நடைமுறைரீதியாகவும் அறிய முடியும்.

அனைத்து கலை வடிவங்களும் இல்லாமல் போன பின்னர் அது ஏனைய துறைகளில் (கலையல்லாத துறைகளில் : – கலையல்லாத துறையொன்றுள்ளதா? என்ற கேள்வியும் ஒரு புறம் உள்ளது –) மட்டும் பகுதியளவில் இருப்பதே அதன் இருப்பிற்கு போதுமானதாகும். (''ஆயகலைகள் அறுபத்து நான்கு'' – என்ற சமய ரீதியான பிரிப்பினுள், எல்லாத்துறைகளும் கலையின்பால் உட்படுவதை அவதானிக்கலாம். இக்கட்டுரை ஆக்கரீதியில் அம்முறை நிராகரிக்கப்படுவது ஓர் எடுகோளாகும்.)

கீழ்வரும் இலக்கமிடப்பட்ட குறிப்புகளில் 'கலை' என்பது ஏனைத்துறைகட்குள் பயன்பாட்டில் இருப்பதையும் அல்லது இனிப் பயன்பாட்டுக்குட்படுத்தலாம் என்பதையும் சுட்டும்.

1) மருத்துவக்கற்கையின் ஒரு துறையான உடற்கூறியல் (Anatomy) உடல் உறுப்புக்களின் அமைப்பையும் செயற்படு முறையையும் காட்ட, நூல்களிலே ஓவியங் களை பயன்படுத்துகின்றன.
2) தேவை கருதிய கட்டடவாக்கத்தில் கலை நுட்பங்கள் கையாளப்படுதல் (வீடு, தொழிற்சாலை – இவற்றில் சிற்பம் ஓவியம் போன்ற கலை வடிவங்கள் கையாளப் படுதல்)
3) இயந்திரங்கள், விஞ்ஞான சாதனங்களின் அமைப்புகளில் (ஊர்திகள், விமானங்கள், கணனிகள்) வர்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும், அமைப்பு அடிப்படையிலும் கலைநுட்பம் (Art Technic) பயன்படுகிறது.

4) தொலைக்காட்சி, சலனப்படம் என்பவற்றை, சினிமா போன்ற கலைவடிவ துறைகளை விடுத்து, அல்லாத படைப்புத் தேவைகட்கு மட்டும் கலைக் கையாட்சியுடன் பயன்படுத்தலைக் குறிப்பிடலாம்.

5) மனித ஊழியத்தை ஊடகமாக்கி அசையும் திறன் கொண்ட கலை வடிவங்களை கல்வி, உளவியல் போன்ற துறைகட்குள் பயன்படுத்தல் (நாடக ஆற்றுகையை உளவியல் சிகிச்சை முறையின் ஒரு பகுதியான Drama Therapy - நாடக சிகிச்சை வழிமுறைக்கு பயன்படுவதை உதாரணமாக கொள்ளலாம். இங்கு, நாடக ஆற்றுகையை தனிக் கலைத்துறையாக இயங்குதலை மறுதலிக்கும் நோக்கமாக கருதலாம்.)

6) சிகை அலங்காரம் முதல் ஆடை ஆபரணத் தயாரிப்புக்கள் உட்பட கடகம், பாய், பெட்டி பின்னுதல் ஈறாக பயன்பாட்டு கலை வடிவுகளை போன்ற இன்னோரன்ன துறைகட்குள் மட்டும் கலையின் இயல்பு நிலைகளை பயன்படுத்துதல்.

கலையின் அவசியம் பற்றிய வலியுறுத்தல்களை மனிதர்களின் தேவைக்கான பயன்பாட்டு வலியுறுத்தல்களில் காணப்படும் ''நியாயம்'' என கருதப்படுபவை மறுதலிக்கப் பட்டு, அதை விடுத்த ''பதில் நியாயங்கள்'' சில கீழே வலியுறுத்தப்படுகின்றன.

கலையின் பயன்பற்றிக் கூறப்படும் கருத்துக் சுருக்கங்கள்:

அ) விருப்பு

ஆ) மனச்சமநிலை

இ) பொழுது போக்கு

ஈ) பாரம்பரியம் என்று பேணப்படும் கலை மரபுத் தொடர்ச்சியாக....

உ) தொழில்

விளையாட்டு மற்றும் சமய துறைகளுக்குள் (சமயத் துறையினுள் கலைக்கையாட்சி அதிகம் : அது வாழ்வின் சடங்காசாரங்களுடனும் பலநிலைகளில் பின்னியிருப்பதை அவதானிக்கலாம்) மனிதர்கள் பொழுது போக்குகளில் ஈடு படமுடியும். இதில் * இயற்கையை இரசித்தல், * மனிதர்கள் கூடிப்பேசும் பண்பு/மரபு - போன்றவற்றிலும் தமது பொழுதுகளை செலவளிக்கலாம் : இதன் தொடர்ச்சியில் மனச்சமநிலையுமுண்டு ; அத்தோடு மனச்சமநிலை, சிக்கலாக உருமாறினால் உளவளத்துணையை நாடி, அது பற்றிய சீர்நிலையைப் பெற முடியும். (உளவளத்துணைக்குள் நாடக உத்திமுறைகளுமுண்டு). விருப்புக்கள்; தொழில்கள் சமுகத்தின் தேவை கருதியும், பிரச்சனைகள் கருதியும் மாற்றப்படும் நிலையை மனித நடத்தையும்/ நாகரீகமும் - வலியுறுத்துகின்றது.

# ஏதோவொன்றாய்....

*நீண்டுவிட்ட வரலாற்றின்*
*அந்தலைகளில் நின்று*
*எனதுகளை தேடுகிறேன்;*
*அவை நீண்ட நாட்களுக்குமுன்*
*தொலைந்து போயிருப்பதும்*
*நான் வேறொன்றாய் மாறியதும்*
*விகாரமானதும்*
*எனதுகள் தோண்டப்பட்டு*
*ஏதோ திணிக்கப்பட்டதும்*
*அதை விக்கி முனகி*
*ஜீரணித்ததும்*
*தோலுரித்து மை பூசியதும்*
*கனவுத்தளத்தில்*
*மெதுவாய் வந்து போகின்றன.*
*எனினும்: சிந்திக்கவோ*
*செயலாற்றவோ முடியாத*
*தொலைதூரத்தில்*
*நைந்து போன ஜீவனாய்*
*ஏதோவொன்றாய்*
*இப்பொழுதும்....நான்*

**எம். சாம்**

தொடர்சியான, தனித்த 'கலை' வருகை அல்லது செயற்கைத் தனமான கலை நிலைகள் என்பவை தொடர்ச்சி யான 'கலை'நிலைகள் என்பவை தொடர்ச்சியாக மரபாக வருகின்றன; அதனை பின்னர் பேணி 'மரபு' என்ற வரையறைக் குட்படுத்துவர் (யப்பானிய நோ (Noh) கபுக்கி (Kabuki) ஈழத்தில் வடமோடி, தென்மோடி வடிவல்கள் என்பன மரபு பேணுகையாக முற்பட்டுள்ளன). ஆனால் மரபுகள் மாறு கின்றன. (கொள்ளை, களவு, கொலை, கற்பழிப்பு என்பன தொடர்ச்சியாக இருப்பதால் மரபா? அல்லது அதனை பேணுவதா? இதன் தொடர்ச்சியில் கலையின் மரபும் விளைவும் அடுத்து நோக்கப்படுகிறது.)

விஞ்ஞான ஊடகத்தின் முதன்மையான, கலை வெளிப்படு கையில் சினிமா திரைப்படமும்; தொலைக்காட்சி மூலமான ஒளிப்பதிவுப் படமும் ; தொலைக்காட்சி மூலமான ஒளிப்பதிவுப் படமும் இங்கு குறிப்பிட்டு நோக்கப்படுதல் வேண்டும்.

இந்தியாவின் தமிழ்நாட்டுச் சினிமா செலுத்தும் ஆதிக்கம் மனிதர் மட்டத்தில் ஆரோக்கியமான விளைவுகளை வெளிப் படுத்தவில்லை: அதேபோல் அமேரிக்க 'ஹொலிவூட்' படங்கள் கதாநாயகமோக (Hero Worship) சமூகத்தை ஊக்கப்படுத்து கிறது. (இதன் பக்க விளைவுகள் பல வெளிப்பாடுகளை உலக அரங்கில் காட்டி நிற்கின்றது) பல்வேறு அரசியல் சீரழிவுகள் சினிமா மூலம் ஏற்பட்டுள்ளது (எனினும் கலைத்துவப் பிரக்ஞையுடன் கூடிய படங்கள் -Art Films -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சிலவானவை மிகக் குறைந்த குறித்த சிலரால் மட்டுமே நடைமுறையில் நுகர்வுக்கு உட்படுகின்றன) தொலைக்காட்சிச் சாதனங்கள் வாயிலாக அனேகம் யாழ்ப்பாணம் உள்ளிட்டு உலக மட்டம் வரைக்கும் நீல படங்கள் (Blue Film)' நுகர்வுக்குட்படுகின்றன. மேற்படி முறைமையூடாக ஆரோக்கிய நிலைகள் இல்லை என பல மட்டத்திலும் கருத்து வெளிப்பாடுகளுண்டு. உலக அரங்கில் பல நாடுகளின் சினிமா வடிவங்கள் நுகர்வதற்கான தொடர்பு வாய்ப்புக்கள் தற்போது தொலைக்காட்சி முறைக்குள் வருவதால் பண்பாட்டு ஏகாதிபத்தியம் 'கலை' வடிவூடாக நடைபெறுகிறது.

இலக்கியங்களில் (சிறுகதை, நாவல், எழுத்து பதிவுடன் கூடிய புகைப்படங்கள்) அதிக நுகர்வுக்குட்படும் நூல்களின் தன்மையில் (உதாரணமாக ஈழத்தில்) ஆரோக்கிய நிலைகள் இல்லை: (ரமணிச்சந்திரன், ரஜேந்திரகுமார், ரஜேஷ்குமார், பி.டி.சாமி. போன்றோர் கதைகள்; மாயாவி தோன்றும் ராணிக் கமிக்ஸ் வெளியீடுகளை அனேகர் நுகர்கின்றனர் – இவை மண்ணெண்ணெய்க் கடை உள்ளிட்ட மூலைமுடுக்குகள் வரை சென்றுள்ளது – அத்தோடு பாலியல் தீனி போடும் நூல்கள், படங்கள் மாத வெளியீடுகளாக இலக்கியப் பெயர்களில் வெளி வருகின்றன – இன்று யாழ்ப்பாணத்தில் அதிகம் பரவ தொடங்கியுள்ளன – 'இலக்கிய தரம்' எனப்படும் நூல்கள், மிகக் குறைந்த அதுவும் புத்திஜீவிகள் மட்டத்தில் மட்டும் நுகரப்படுகின்றன. பெரும்பாலும் அதிகம்பேர் நசிபு இலக்கியத்தின் ஆதிக்கத்திற்கே உட்படுவதால் ஏது வலுவானது? எதுவெனினும் இது கலை மூலமே நிகழ்கிறது)

இசைக்கச்சேரிகள் (மேற்கத்தய இசைவடிவங்கள் சில வன்முறை, கொலை உணர்வு போன்றவற்றை தூண்டுகின்றனவாம்), நாடக ஆற்றுகைகள், நடன நிகழ்ச்சிகள் என்பவற்றில் மனிதர்கள் தமது நேரத்தை வீண் விரயம் செய்யப்படுவதாக உணரப்படுகிறது. மனிதர்களின் சமூக, பொருளாதார, அரசியல், உளவியல் முன்னேற்றத்திற்கான ஆக்க திறனிற்கு இதன் நேரத்தை மாற்ற முடியும். மேலும் மனிதனது ஆன்மீக தேவைகளை கலையூடாக நிறைவாக்கல் முறைமையை, சமயதுறையூடாகவும் இயற்கையின் அமைப்பியலூடாகவும் பூர்த்தி செய்ய முடியும்.

பொதுவாக 'கலைஞர் கூட்டங்கள்' இழிவான நிலையிலும் கண்ணோட்டத்திலும் காணப்படுகின்றனர்.

* குடிகாரர்கள்
* ஆண்/பெண் – பாலியல் சகவாசம் உள்ளவர்கள்
* குடும்ப பொறுப்பற்றவர்கள் (கலையீடுபாடு சூதாட்டத்துடனும், வேசையாடுதலுடனும் ஒப்பீடு செய்யப்படுகிறது)
* பொருளாதாரத்தை வீணாக்குபவர்கள் (தாலிக் கொடி விற்று நாடகம் போடல்)

(பெண்களில் சின்னமேளக்காரிகள், ஆட்டக்காரிகள், கூத்தி பிடிப்போர் என்றும்; ஆண்களில் வெறிக்குட்டிகள், தண்ணிச்சாமிகள், ஏமாற்றுப் பேர்வழிகள், கடனாளிகள், பெம்பிளைக் கள்ளர்கள் என்றெல்லாம் கலைஞர்கள் யாழ் / சமுகத்தில் கருதப்படுகின்றது. குறிப்பு:- இப்பண்புகள் கலைஞர் அல்லாதோரிடமுமுண்டு.)

சமுக, அரசியல், பொருளாதார பிரச்சனைகளில் – அழிவு/ ஆக்கம் – இரண்டிலும் 'வெகுஜன இயக்கங்கள்', கலைகளைக் கையாண்டு மனித கூட்டத்திற்கு தேவையானது அல்லது தேவயற்றது எல்லாவற்றிற்கும் அண்ணளவாக/ கிட்டத்தட்ட 'மூளைச்சலவை' (Brain Wash) போன்ற (இது சரியற்ற சொல்லாகவும் இருக்கலாம்) முறையூடாக ஈர்ப்புக்கவர்ச்சிக்கு உட்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மனித அழிவு வீதம் அதிகம்.

'கலை' மிக விரைவில் மனிதர்களை நிலை மாற்றுகிறது. இன்று கலையாலே பெரியளவில் சமுக/ உலக – பிரச்சனைகள் மேற்படுகிறது. சமுக பிரச்சனைகளில் ஒன்றாக கலையுமுள்ளது.

மேற்படி சிற்சில உதாரணங்களில் இருந்து ஒரு முடிவிற்கு அநேகர் வரமுடியும். அதாவது தனித்து 'கலைத்துறை' இயங்கத் தேவையில்லை: அனைத்து கலைவடிவங்களும் ஏனைய துறைகளுக்குள் ஒன்றாக, அதனுடன் ஒட்டி இருத்தலே போதுமானது.

எனவே இன்று முதல் அனைத்துக் கலைகளும் நிறுத்தப்பட வேண்டியதன் முன்னெச்சரிக்கை விடப்படுகின்றது.

## வரலாறு

பாலையிலே
ஒரு
பசும் பூங்கா
பார்ப்பவர் விழிகளில்
பரவசந்தான்.

பாலையிலே
ஒரு
பகற்கனவா?
என
விழிவியக்கும்
வாய்திறக்கும்
மூடுவதை அவை
தாம் மறக்கும்.

பாலையில்
கோடையின்
கொடுங்கோலை
மறந்திடச்செய்யும்
பசும்பூங்கா
வேர்களுக்கடியில்
பிணக்குவியல்
யாருக்குத்தெரியும்
வரலாறு?


மாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பம்

## ஓர் அறிமுகம்



**கேள்வி:** **கல்லிலே கலை வண்ணம் கண்டவர்கள் சிற்பக் கலைஞர்கள். பல்லவர், சோழர் கால சிற்பங்கள் பல நூற்றாண்டுக்கு முற்பட்டவையாக இருந்த போதும் அவற்றில் காணப்படும் கலை நுணுக்கங்களுக்காக இன்றளவும் போற்றிப் புகழப்படுகின்றன. இலங்கையில் ஈசுரு முனி விகாரையில் காணப்படும் சந்திர வட்டக்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் மிகவும் பிரசித்தமானவை. ''கொடுப்பதற்கு என்னிடம் ஏதோ இருக்கின்றது. அதை நான் கொடுத்துவிட்டுச் செல்ல விரும்புகிறேன். இது தான் கலையின் தொடக்கம் ; கலையின் அடிப்படை விடயம் உள்ளத்தின் முழுமை உணர்வும்அந்த முழுமையை அப்படியே அர்ப்பணம் செய்யும் விருப்பமும் தான்'' இவ்வாறு இந்தியாவின் புகழ் பெற்ற கலைஞரான அனதா சங்கர்ராய் தனது கலை என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். அனதா சங்கர்ராய் குறிப்பட்டது போல உள்ளத்தின் முழுமை உணர்வு என்பதனை கல்லில் சிற்பமாக வடிப்பது என்பது இலகுவான விடயமல்ல. இதற்கு முறையான பயிற்சி அவசியம். சிற்பக் கலைத் துறையில் ஈடுபட விரும்பும் ஒருவர் ஆரம்பத்தில் எத்தகைய பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை சொல்வீர்களா?**

**பதில்:** சிற்பம் என்பது ஒரு பக்கம் இருக்க, அந்த சிற்பத்திற்கு அடிப்படை சித்திரமாகும் என்பதனை நாம் அறிய வேண்டும். ஆகவே சித்திரம் என்றால் என்ன என்பதனை அறிய வேண்டும். ஒரு மனிதனது மனதில் எழும் கற்பனைகளை இரேகை மூலமோ அல்லது வர்ணம் மூலமோ வெளிக் கொணர்வதே சித்திரமாகும். சித்திரத்தை நாம் கற்பதென்றால் அடிப்படையில் இருந்து கற்பதே இலகுவானதாகும். மற்றும், ஒரு குழந்தை எழுத முன் சித்திரம் பயில்வது நல்லது என மகாத்மா காந்தி கூறியுள்ளார். எனவே சித்திரம்தான் மூலகர்த்தா. எனவே சிற்பத்திற்கு அத்திவாரம் சித்திரமாகும். சிற்பமானது பலவகைப்படும் எனினும் முக்கியமானவை

1.அமைத்தல்

2.செதுக்கல்

சித்திரம் ஆதி காலத்திலே பாஷை இல்லாத எழுத வாசிக்கத் தெரியாத மனிதர்களிடையே தோன்றியது. இதன் அடிப்படையிலேயே சிற்பம் தோன்றிற்று. அதுவும் உயர் புடைப்பு, தாழ் புடைப்பு சிற்பங்கள். இதற்கு உதாரணமாக நாம் அல்ராமீரா, எல்செயில்ஸ் லீ உள்ள சிற்பங்களை எடுத்துக் கொள்ளலாம். அத்துடன் மைக்க லாஞ்சலோவின் ஆரம்ப சிற்பங்களை பார்த்தாலும் தெரியும். உதாரணமாக படிகளில் மடோனா, புனித ஜோன், மற்றும், குழந்தையுடன் மடோனா, அல்ராமீரா, எல்செயில்ஸில் உதாரண மாக மான்கூட்டம், எறிதடிகள், புல்மேயும் மான் கூட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: இந்த இடத்திலே ஒன்றைக் கேட்கலாம் என்று நினைக்கிறேன். உயர்புடைப்பு, தாழ்புடைப்பு என்று சொன்னீர்கள். இதை சற்று விளக்கமாக கூறமுடியுமா?**

பதில்: உயர் புடைப்பு என்றால் நாம் எந்த ஊடகத்தில் சிற்பம் செதுக்குகின்றோமோ அதில் எமக்கு தேவையானவற்றை முன்னதாகவும் தேவையற்ற பகுதியை செதுக்கி அகற்றிவிட்டால் சிற்பமானது ஊடக மட்டத்தில் இருந்து உயர்வாக இருப்பதே உயர்புடைப்பு சிற்பமாகும். உதாரணமாக மனித வடிவமும், குதிரைத்தலையும், காதல் சிற்பமும்.

தாழ்புடைப்பு சிற்பம் என்றால் நாம் எதிர்நோக்கும் சிற்பமானது ஊடக மட்டத்தின் மேலாக அல்லாமல் அதன் மட்டத்திற்கு கீழாக இருப்பது. எனவே ஊடகத்தில் அதன் மட்டத்தை நாலு பக்கமும் அப்படியே வைத்து அதற்கு உள்ளதாக தாழ்வாக குடைந்து எடுப்பதே தாழ்புடைப்பு சிற்பமாகும். உதாரணமாக கிண்ணரப்பெண், இருதலைப் பட்சி.

**கேள்வி: இந்த குகை ஓவியங்கள், சிற்பங்கள் என்று சொல்லப்படுபவை உயர் புடைப்பு சிற்பங்களா? தாழ்புடைப்பு சிற்பங்களா ?**

பதில்: குகை ஓவியங்கள் என்பது மெல்லிய உயர் புடைப்பாக செதுக்கப்பட்டு வர்ணம் தீட்டிய ஓவியங்களாகும். எனவே இங்கு அநேகமானவை உயர்புடைப்பாகும். மனிதமுகம் தாழ்புடைப்பு சிற்பமாகும். மற்றும் கடிவாள மான் கொம்பில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் யாவும் உயர்புடைப்பு சிற்பமாகும்.

**கேள்வி: கருங்கல்லிலே செதுக்கப்பட்ட சிற்பங்கள் நீண்ட காலத்திற்கு சிதைவுறாமல் இருக்குமென சொல்லப்படுகின்றது. கருங்கல்லைப் போன்று வேறு எந்த ஊடகங்களிலெல்லாம் சிற்பம் செதுக்கப்படுகின்றன என்பதனை சொல் வீர்களா?**

கேள்வி தொடுத்தவர்:
முருகேசு ரவிந்திரன்
பதில் அளித்தவர்:
திரு. அ. வெஸ்லி ஜுட்ஸன்.

பதில்: இதனை நாம் ஆதிகாலம் தொட்டு பார்த்தால் குகையில் வாழ்ந்தவர்கள் (அல்ராமீரா, எல்செயில்ஸ் லீ) கல்லிலோ, மரத்திலோ சிற்பம் செதுக்கியது அரிது. அவர்களுக்கு கிடைத்த ஊடகம் எலும்புகள், மற்றும் மான்கொம்புகள் என்பன. எனவே கூர்மையான கற்களை உளியாகக் கொண்டு சிற்பங்களை செதுக்கினர். அதற்கு உதாரணமாக எறிதடிகள், புல்மேயும் மான் கூட்டம், திரும்பி பார்க்கும் எருதின் தலை. இவையாவும் கடிவாளம் மான் கொம்பில் செய்யப்பட்ட சிற்பங்களாகும்.

அடுத்தபடியாக மறுமலர்ச்சிக் காலத்தில் மைக்க லாஞ்சலோவை எடுத்து நோக்குவோம். இவருடைய உலகப் புகழ் பெற்ற சிலை ''பியட்டா'' ஆகும். இது சலவைக்கல்லில் செதுக்கப் பட்டதாகும். மற்றும் அக்காலத்தில் வாழ்ந்த சிற்பிகள் பளிங்குக் கற்களிலும் செதுக்கி யுள்ளனர்.

எம் நாட்டில் விகாரைகளிலெல்லாம் கருங்கல் சிற்பங்கள் காணப்படுகின்றன. கருங்கல்லில் செய்யப்பட்ட சிற்பங்கள் நீண்ட ஆயுளைக் கொண்டன. ஏனென்றால் கல்லின் தன்மை நன்கு இறுகிய தன்மை. இன்றைய யதார்த்தத்தில் பார்த்தால் புதை பொருளாராய்ச்சி மூலம் எடுக்கப் படும் கருங்கற் சிற்பங்கள் சிதைவுறாமல் இருக் கின்றன. மேற்கத்திய நாடுகளில் சலவைக்கல் சிற்பங்கள் சிதைவுற்ற நிலையில் காணப்படு கின்றன. மற்றும் மரத்தில் செதுக்கிய சிற்பங்கள் காணக்கூடியதாய் உள்ளன. எம்பக்கே தேவா லயத்தில் மரச்செதுக்கு வேலைப்பாட்டை காண லாம். திருமறைக்கலாமன்றத்தால் கொழும்பு பொதுசன நூலகத்தில் கடந்த மே மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட திரு. A.V. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியில் வைக்கப் பட்டவை மரச்சிற்பத்திற்கு சான்று பகர்கின்றன.

மற்றும் S-lon குழாயால் செய்யும் நவீன சிற்பமும் உண்டு. இந்த சிற்பங்களை நான் செய்து வருகின்றேன். நான் யாழ் நகரில் புகழ் வாய்ந்த ஓவியர் A.மாற்குவிடம் ஓவியத்தைக் கற்றுக் கொண்டேன். அவர் திருமறைக் கலாமன்றத்தில் ஓவியம் பயிற்றுவித்தார். அவர்தான் எனக்கு இத்தகைய நவீன சிற்ப முறையினை பயிற்று வித்தார். அவருடைய ஓவியங்கள் ஒரு தனி நவரசம் கொண்ட நவீன ஓவியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பத்தையும் யாரும் செய்யாத நவீன முறையில் தான் செய்ய வேண்டுமென்ற கொள்கையுடன் செய்தார். அதுவும் கழிவான பொருட்களில் புதுமை படைத்தவர் தான் எனது குரு. யாழ். நகரில் வீதியில் செல்லும்போது வீதியோரங் களில் கிடக்கும் வெற்று பிளாஸ்ரிக் போத்தல், மற்றும் கழிவு S-lON குழாய்கள் என்பவற்றை சேகரிப்பார். வீதியில் சேகரிப்பது என்பது இழிவல்ல. அவ்வளவும் அவரது மகிமை, அதில் தோன்றுவது புதுமை. இவை ஏனைய சிற்பிகள் செய்யும் மரச் சிற்பம், கற்சிற்பங்களுக்கு சரி நிகராக, அதிலும் மேலாக முன்னணியில் நிற்கும் தகைமை உள்ளவை.

அவரது மாணவனாகிய நானும் அவரது அடியை ஒட்டியே இப்படிப்பட்ட நவீன சிற்பங்களை செய்துள்ளேன். அவர் எமக்கு அடிப்படை சிற்பத்தினை பயிற்றுவித்தார். அதாவது புடைப்புச் சிற்பங்களை பயிற்றுவித்தார்.

**கேள்வி:** **நீங்கள் இந்த S-lON குழாயில் சிற்பம் செய்யலாம் என்று கூறினீர்கள். உண்மையிலேயே கருங்கல், போன்ற வேறு ஊடகங்களில்தான் சிற்பம் செய் வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். S-lON குழாயில் சிற்பங்கள் செய்வது என்பது புதிய முறை. இந்த SlON குழாயில் எவ்வாறு சிற்பம் செய்யப்படு கின்றன என்பதனை சொல்வீர்களா?**

**பதில்:** மரத்தில் சிற்பம் செய்ய, எவ்வாறு குறித்து பின் செதுக்குகின்றோமோ அதேபோன்று எமது கற்பனையை S-lON குழாயில் குறித்து பின் தேவையற்ற பகுதிகளை வாள்பிளேட்டால் வெட்டி எடுப்பேன். பின் அதனை அப்படியே வைத்தால் அதன் எழில் தோன்றாது. எனவே அதனை வெப்பமேற்றி அதனை எவ்வாறு, எங்கு வளைத்தால் அல்லது விரித்தால் எழில் மிகைப் படுமோ அதற்கேற்ப அங்கு அங்க அமைப்பினை அசைவுற செய்வதன் மூலம் எழில்பட சிற்பம் தோன்றுகின்றது. ஒரு பெண்ணின் உருவத்தை நோக்கினால் மெல்லிடையாள் என்பதற்கு இணங்க அந்த பெண் உருவத்தில் இடையினை மெல்லியதாக வளைக்கின்றோம். நான் செய்த இப்படிப்பட்ட சிற்பங்களில் சிலுவையில் தொங்கும் இயேசு எனக்கு நன்றாக பிடித்தது. அந்த சிற்பத்தில் வளைவு நெளிவுகளை நன்கு பயன்படுத்தி யுள்ளேன். மரத்தில் செய்யும் சிற்பம் உளி கொண்டு தேவையான வடிவத்தில் செதுக்கி எடுப்பது. ஆனால் வாள் பிளேட் கொண்டு சிறிய சிறிய வெட்டுக்களை வெட்டி எடுப்பது மிகவும் கடினமானதாகும். பல காயங்களை கைகளிலும் கால்களிலும் ஏற் படுத்தும். ஈற்றில், இவைகளை எழில்படுத்த வர்ணம் பூசலாம்.

**கேள்வி:** **கல்லிலே கலை வண்ணம் கண்ட சிற்பக்கலை ஞர்கள் அத்தோடு திருப்தியடையவில்லை. எத்தகைய திண்மப் பொருட்களிலெல்லாம் தம் கை வண்ணத்தை காட்ட முடியுமோ அவற்றை யெல்லாம் பயன்படுத்தி சிற்பக் கலைக்கு மெருகூட்டினர். கல்லிலே செதுக்கப்பட்ட சிற்பங்கள் போன்று மரச்செதுக்கு சிற்பங்களும் பிரசித்தி வாய்ந்தவை. மரச்செதுக்கு சிற்பங்கள். எவ்வாறு செதுக்கப்படுகின்றன என்பதனை கூறுவீர்களா?**

**பதில்:** நாம் முதலில் எந்த மரத்தினை எடுத்தாலும் அதில் செதுக்கப்படும் சிற்பமானது ஒரு சிற்பியின் மனதில் எழும் கற்பனையினைக் கொண்டு அமைகின்றது. உதாரணத்திற்கு ஒரு சம் பவத்தினை கூற விரும்புகின்றேன். நான் யாழ். நகரில் ஓவியத்தினை எனது ஆசிரியர் ஓவியர் திரு. மாற்குவிடம் கற்றுவந்தேன். அவரிடம் ஒரு சிறந்த சிற்பி ஒருவர் வருவார். அவர் தான் வீதியால் போய்க் கொண்டிருக்கும் போது குப்பையில் ஒரு பலகைத்துண்டு திடந்ததாகவும், அதனை வீட்டிற்கு கொண்டு போய் அதன் வடிவத்தை வைத்து அப்படியே வியக்கும் வண்ணம் ஓர் அற்புத சிற்பத்தினை செய்ததாகவும் கூறினார். எனது ஆசிரியர் மாற்கு அதனைப் பார்த்துவிட்டு அதன் பிற்பகுதியைக் காட்டி இதை நாம் கண்டால் இதில் என்ன செய்ய முடியும் என்று காலால் தட்டிவிட்டுச் செல்வோம் என்று கூறி, அந்த சிற்பத்தைப் பார்த்து வியந்தார். சிற்பமானது ஒரு சிற்பியின் சிந்தனையில் உருவாகிறதாகும். சிற்பி ஒரு மரத்தை எடுக்கின்றான் . அந்த மரம் (ஊடகம்) எந்நிலையில் எந்த வடிவத்தில் உள்ளதோ அதே வடிவத்திற்கமைய சிற்பி தனது கற்பனை வளத்தை பயன்படுத்தி அதற்கேற்ற முறையில் தனது திட்டத்தை இரேகைப் படமாக வரை கின்றான். அதன் பின் அதனை ஊடகத்தில் வரைந்து தனது சிற்பவேலையை ஆரம்பிக் கின்றான். அதிலும் ஊடகத்தின் வடிவத்திற் கிணங்க உருவத்தின் அசைவுகளை அதற்கேற்ற முறையில் அபிநயமான முறையில் அமைக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** **அதாவது சில மரங்களில் இயற்கையிலேயே சில உருவங்கள் வடிவமைந்து காணப்படு கின்றன. அந்த மாதிரியான மரங்களை எடுக்கும் போது அதனை மெருகூட்டி சிற்பமாக்குவது கூடுதலான கலைநயம் உள்ளதாக இருக்கும். அந்த முறையினை சிற்பக்கலைஞர்கள் கையாளுகின்றனரா என கூற முடியுமா?**

**பதில்:** ஒவிய ஆசிரியர் திரு.மாற்கு புதுமையை விரும்புபவர். எனவே அவர் நீங்கள் கூறியது போல இயற்கையிலேயே கலையம்சம் கொண்ட ஒரு மரக்கிளையினை எடுத்து அதற்கு மேலும் தனது புதுமையினை ஊட்டி தாண்டவம் ஆடும் சிவன் போல் செய்துள்ளார். இது மட்டுமல்ல இவ்வாறான பல இயற்கை கலையம்சம் கொண்ட மரங்களை மிகவும் மெருகூட்டி வைத்துள்ளார். எனவே இவரைப் போல் புதுமையை விரும்பும் சிற்பிகள் இவ்வாறான சிற்பங்களையெல்லாம் செய்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

**கேள்வி:** **மரச் செதுக்கு சிற்பங்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டனவா? அல்லது ஆதிகாலம் முதல் எமது நாட்டில் இந்த கலை மிகச் சிறப்பாக வளர்ச்சியுற்று வந்திருக் கின்றனவா என்பதைப் பற்றி கூறுவீர்களா?**

**பதில்:** ஆதியில் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு மக்கள் குடியேறினர். எனவே இந்தியாவில் இருந்து கலைகள் இலங்கைக்கு வந்தது மறுக்க முடியாத ஒன்றாகும். எம் நாட்டில் உள்ள சீகிரியா ஓவியத்தை நாம் பார்த்தால் தெரியும் இந்த ஓவியங்கள் இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியத்தை ஒத்ததாகும். இதைப் போன்றே இலங்கையில் காணப்படும் சிற்பங்களும் அனேக மானவை இந்தியாவில் உள்ளவைகளை ஒத்த வடிவங்களாகும். ஆதி காலத்தில் சிற்பம் பரிணாம வளர்ச்சி அடைவதற்கு விகாரைகளே காரணமாய் அமைந்தன. இலங்கைச் சிற்ப வளர்ச்சி இந்திய நாட்டு சிற்ப வளர்ச்சியுடன் தொடர்புடையது. இரு நாடும் ஒரே கலை இலக்கணத்தையே கொண்டுள்ளன. இலங்கைச் சிற்பங்கள் இந்திய சிற்பங்களை தழுவியன. இலங்கைச் சிற்பம் இந்திய சிற்பத்தின் ஒரு பிரிவெனக் கூறின் அது மறுக்க முடியாத உண்மையாகும் என்று ''இலங்கையில் கலை வளர்ச்சி'' என்னும் நூலில் கூறப்படுகின்றது. எனினும் மரச்சிற்பம் இந்தி யாவில் இருந்து வந்தது என்று கூற முடியாது, ஆனால் சிற்பக்கலை ஆதியில் இந்தியாவில் இருந்து வந்தது என்பது உண்மை. எனவே அதனை ஒட்டி அதன் பரிணாம வளர்ச்சியாகவே மரச்சிற்பங்கள் இங்கு தோன்றின எனக் கருதுகிறேன்.

**கேள்வி:** **இந்தியாவில் காணப்படும் அஜந்தா ஓவியங் களுக்கும் நம் நாட்டில் காணப்படும் சீகிரியா ஓவியங்களுக்கும் இடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றனவா? அதாவது சீகிரியா ஓவி யங்களும் இந்தியக் கலைஞர்களால் வரையப் பட்டனவா? இது குறித்து சான்று ஆதாரங் களுடன் கூற முடியுமா?**

**பதில்:** நான் படித்த நூல்களில் வரும் குறிப்புகளைக் கொண்டு பார்க்கும்போது அஜந்தாவிற்கும் சீகிரியாவிற்கும் இடையே ஒருசில வித்தி யாசங்கள்தான் உண்டு. ஆனாலும் இரண்டும் ஒத்திசைந்து போகக்கூடியன. ஒரே இயல்பு டையன. ஆனாலும் இந்திய ஓவியர்கள் தான் சீகிரியா ஓவியத்தை வரைந்தார்கள் என்று எந்த குறிப்பிலும் குறிப்பிடப்படவில்லை.

**கேள்வி:** **மரத்தில் எவ்வகையான சிற்பங்கள் செதுக்கப் படுகின்ற என்பதனைப் பற்றிச் சொல்வீர்களா?**

**பதில்:** மரத்தில் சிற்பம் செய்வது என்பது, அந்த மரத்தின் தன்மையிலும் அதன் வடிவத்திலும் அமைந்துள்ளது. ஒரு கனமான உருளையான மரம் என்றால் அதில் சிலை வடிவான ஒரு சிற்பத்தினை செதுக்க முடியும். மற்றும் மரப் பலகைகளிலும் மரத்தில் இருந்து அகற்றப்படும் கழிவுப் பகுதிகளிலும் புடைப்பு சிற்பமே செய்யப்படு கின்றது. இதற்கு உதாரணமாக பல வீடுகளின் கதவுகள், மற்றும் வீட்டு சுவர்களில் தொங்கவிடும் அலங்காரப் பொருட்களைக் குறிப்பிடலாம்.

**கேள்வி:** **சிற்பங்களை செதுக்குதல் மூலம் வடிவமைப்பதாக சொல்கின்றோம். அதேபோன்று சிலைகளை வடித்தல் மூலம் வடிவமைப்பதாக சொல்கின்றோம். இந்த சிற்பங்களுக்கும் சிலைகளுக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை சொல் வீர்களா?**

**பதில்:** இதில் காணப்படும் ஒற்றுமையானது சிற்பமும் சிலையும் முற்றுப் பெற்ற நிலையில் ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால் செய்முறைகள் யாவும் மாறுபடும் நிலைகளாகும். ஒரு ஊடகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் உளி கொண்டு செதுக்கி எடுப்பதே சிறப்பமாகும். அதாவது ஊடகத்தின் தன்மைக் கேற்ப, வடிவத்திற்கேற்பவே சிற்பத்தினை நாம் அமைக்க முடியும். ஆனால் சிலை வடித்தல் என்பது அப்படியல்ல. நாம் விரும்பிய கருத்தை விரும்பிய வடிவில் அமைக்கலாம். சிலையானது களிமண், சீமெந்து என்பவற்றைப் பயன்படுத்தியும் அமைக்கலாம்; சிலர் பிளாஸ்டர் பரீஸைக் கொண்டும் அமைக்கின்றனர்.

**கேள்வி: மரச் சிற்பங்களிலே எவ்வகையான நுணுக்கங்களை கையாள்வர் என்பதனை நீங்கள் கூறுவீர்களா?**

**பதில்:** நாம் ஒரு மரத்தில் சிற்பம் செய்யும் போது அதில் எந்த பக்கத்தால் சிற்பம் செய்வது என்பதனை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது மரத்தின் இழை யோட்டங்களை நாம் அறிய வேண்டும். மற்றும் சிற்பம் செய்யும்போது அதில் தோன்றும் சிரமம், மற்றும் நுண்ணிய வேலைகளை நாம் நுணுக்கமாக மேற்கொள்ள வேண்டும். சில நுண்ணிய வேலைகள் உண்டு. உளியை நாம் எம்கையில் வைத்து கையின் வேகத்தைக் கொண்டே மரத்தை செதுக்கி எடுக்க வேண்டிய நுணுக்க வேலைகள் காணப்படும்.

**கேள்வி: மரத்திலே இந்த மாதிரிகையான நுட்பங்களை கையாள்வது மிக இலகுவான விடயமா?**

**பதில்:** நான் அறிந்த சிற்பி ஒருவர் தினமும் கூறுவார்: ''நான் உளி எடுத்தால் மரம் நடுநடுங்கி அழும்'' என்று. அவ்வாறாக தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேனைப்போல் இனிக்கும் சிற்பம். ஒரு சாதாரண மனிதனை எடுத்துக் கொண்டால் அவன் எந்த விடயத்தை பார்த்தாலும், இதனை எப்படி செய்தார்கள் என்று அதிசயப்படுவான். இப்போது நான் ஓவியத்தை வரையும் போது எனக்கு மிக இலகுவாக இருக்கிறது. ஆனால் சிலர் அதனை பார்த்துவிட்டு இதை ''எப்படியடா வரைகின்றாய்'' என்று கேட்பர். எனவே தேர்ச்சி பெற்றவர்களுக்கு இலகுவாகவே இருக்கும்.

**கேள்வி: ஏனைய ஊடகங்களை விடவும் மரச் சிற்பங்கள் செய்வது எந்த வகையில் முன்னேற்ற கரமானது?**

**பதில்:** கருங்கல்லில் செய்யப்படும் சிற்பம் போல் அல்ல மரத்தில் சிற்பம் செய்வது. மரமானது மென்மை யான தன்மையினை கொண்டுள்ளது. எனவே எங்கு ஆழமாக தோண்டி எடுக்க வேண்டுமோ அந்த இடத்தில் அதற்கேற்ற உளியை வைத்து மிக இலகுவாக செதுக்கக் கூடியதாக உள்ளது. எனவே சிற்பம் செய்வதற்கு மரம் நல்லதொரு ஊடகமாக உள்ளது. எனினும் அதில் பல நுணுக் கங்களை பயன்படுத்தித்தான் செதுக்க வேண்டும்.

**கேள்வி: மரத்திலே செய்யக்கூடிய சிற்பங்கள் மிக நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடிய தன்மை உள்ளனவாக இருக்கின்றனவா? அல்லது அப்படியான தன்மை உள்ளதாக இருப்பதற்கு ஏற்ற முறையிலே மரங்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்களா?**

**பதில்:** ஒரு மரத்தில் செய்யப்பட்ட சிற்பமானது நீண்டகாலம் பாதுகாப்பாக இருக்க வேண்டு மானால் அது எம்முடைய கவனத்திலும் பாதுகாப்பு முறையிலும் தங்கியுள்ளது. உதாரணமாக நாம் கண்ணாடிப் பாத்திரம் ஒன்றை பாவிப்பதானால் அதனை உடையாமல் நெடுங்காலம் பாவிப்பது எமது கவனத்திலும் பாவனை முறையிலும் உண்டு. அதே போன்றுதான் மரச்சிற்பங்களும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டு மானால் அவைகளை நாம் பாதுகாக்கும் முறையில்தான் உண்டு.

**கேள்வி: சமயஸ்தலங்களிலே மரச்செதுக்கு சிற்பங்களின் பயன்பாடு கூடுதலாக காணப்படுகின்றது. இந்த சமயஸ்தலங்களிலே மரச்செதுக்கு சிற்பங்கள் எவ்வகையான தேவைகளுக்கு பயன்படுகின்றன?**

**பதில்:** மரச்செதுக்கு சிற்பங்களை நான் யாழ். நகரில் சமயஸ்தலங்களில் பார்த்துள்ளேன். இந்து தேவாலயங்களின் வாயில்களின்மேல் மரத்தால் செதுக்கப்பட்ட மகர தோரண அமைப்பு செய்துள் ளனர். அது தெற்கில் விகாரைகளில் கருங் கல்லாலோ, சீமெந்தாலோ அமைக்கப் பட்டுள்ளன. மற்றும் சமய ஸ்தலங்களில் கதவுகள் செதுக்கல் வேலைப்பாடு உடையனவாக காணப் படுகின்றன. முக்கியமாக இந்து தேவால யங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மிகப்பிரமாண்டமான சிற்ப வேலைப்பாடு அமைந்த ஓர் அமைப்பு சுவாமி களை வலம் கொண்டு வரும் தேர். இவை சிறு சிறு துண்டுகளாக மிகவும் நுட்பமாக செதுக்கப் பட்டு மிக பிரமாண்டமான முறையில் பொருத்தப் படுகின்றன. இவ்வாறாக பல மரச்சிற்ப வேலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள் சமயஸ்தலங்களில் காணப்படுகின் றன. உதாரணமாக், கதிரேசன் ஆலயத்தில் உள்ள தேர்ச்சிற்பம். மிகச் சிறந்தது. இற்றைக்கு கிட்டத்தட்ட 125 வருடங்கள் பழமை வாய்ந்தது.

*31.05.97, 07.06.97 திகதிகளில் இலங்கை தேசிய சேவையில் காலை 7.15க்கு கல்விச் சேவையில் ஆய்வரங்கம் முலம் ஒலிபரப்பு செய்யப்பட்டது.*

# கணனித் தமிழ் பற்றி

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

சமகால வாழ்வியலின் பல்வேறு கூறுகளிலும் தன்னை இணைத்துக் கொள்ளும் வரையில் அசுர வேகத்தில் வளர்ந்து வரும் சாதனம் கணனி. அவ்வகையில் அது உலக மொழிகள் பலவற்றில் தன்னை இணைத்துக் கொண்டுவிட்டது. தற்போது சில ஆண்டுகளாகத் தமிழ் மொழியும் அதனுடன் உறவு கொள்ளத் தொடங்கிவிட்டது. இத்தொடர்பு ''கணனித் தமிழ்'' என்ற ஒருவகைமை சுட்டித்தக்க வகையில் வளர்ந்துள்ளது என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

கணனியின் பயன்பாடு என்பது 15 ஆண்டுகளுக்கு முன்வரை தகவல்களைத் தொகுத்து வைத்தல், பகுப்பாய்வு செய்தல் என்ற வகையிலேயே அமைந்திருந்தது. பின்னர் அது செய்திப் பரிமாற்றத்திற்குரிய சாதனமாகவும் பயன்பாட்டு வளர்ச்சி நிலையில் எய்தியது. E. Mail Bulletin Post System, Electronic News Paper, Internet, Discussion Group, முதலியனவாக இந்த வளர்ச்சி பன்முகப்பட்டுச் செல்கிறது. இவற்றைத் தமிழில் புரிந்து கொள்ளவும், தமிழை இவற்றிற்கேற்ப தயார்படுத்திக் கொள்ளவுமான முயற்சிகள் தமிழ் நாட்டிலே தொடங்கப்பட்டு விட்டன. Electronic News Paper எனப்படும் மின்னனுச் செய்தித்தாள் செய்திகளைக் கணனித் திரையில் காட்சிப்படுத்துவது - கட்புல வாசிப்புகளுக்குத் தருவது - மட்டுமன்றி அவற்றை நாம் விரும்பும் குரலில் எடுத்துரைப்பது மாகும். Internet, எனப்படும் அனைத்துலக வலைப்பின்னல் அமைப்பானது 50க்கு மேற்பட்ட நாடுகளில் உள்ள 2 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பயன்படுத்தப்படும் செய்திப் பரிமாற்ற முறையாகும்.

இவ்வாறாக கணனித் தொழில் நுட்பத்தை தமிழ் உள்வாங்கிக் கொள்ளவேண்டுமானால் அடிப்படையாகச் சில முதற்கட்டக் கடமைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அவை:-

(அ) தமிழுக்கேற்ற ஒரு பொதுவிசைப் பலகை (Key Board)

(ஆ) கணிமத்தில் ஒற்றுக்களை (Soft ware) நடைமுறைப் படுத்த உதவும் அமைப்பு முறை

கணனியில் செய்திகளை உட்புகுத்த தேவைப்படும் (Input) முக்கிய சாதனம் விசைப் பலகை என்பதையறிவோம். ஆங்கிலத்தில் இவ்விசைப் பலகை அனைத்துலகப் பொதுமை யுடையதாய் அமைந்துள்ளது. ஆனால் தமிழில் இப்பொதுமை இன்னும் ஏற்படவில்லை. தமிழ் நாட்டில் ஒருவித விசைப்பலகை, கனடாவில் இன்னொருவகை, சிங்கப்பூரில் மற்றொருவகை. இந்நிலையில் மாற்றம் அவசியம். தலைச் சொல்லாக்கத்தில் நாடுகளுக்கிடையில் பொதுமை தேவைப்படுவது போலவே, கணனி விசைப் பலகையிலும் பொதுமை தேவை. இவ்வாறு பொதுவிசைப் பலகை அமைக்கும் பொழுது எழுத்துக்கள் பயன்படுத்தப்படும் அளவுக்கு ஏற்ப அவற்றுக்கு முதன்மை தந்து அமைத்துக் கொள்ள வேண்டும். சிங்கப்பூரில் ''நன்யாங்'' தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நா. கோவிந்தசாமி என்பார் அமைத்துள்ள ''கணியன் விசைப் பலகை'' இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. தமிழ் நாடு கணனித் தமிழ் ஆர்வலர் பலர் இதனை வரவேற்றுள்ளனர். ஆயினும் இற்றைவரை கோவிந்த சாமியின் விசைப்பலகை தமிழ் உலகின் பொது அங்கீகாரம் பெற்றதாகத் தெரியவில்லை.

தமிழ் மொழியமைப்பின் சிறப்புக்களில் ஒன்று அதன் சொற்புணர்ச்சியில் ஒற்று எனப்படும் மெய்யெழுத்துக்கள் இடம் பெறும் முறைமை. ஆனால் நடைமுறையில் பலருக்கு இதில் தெளிவில்லை. இவ்வாறு தெளிவற்ற நிலையில் எழுதப்படுவனவற்றை திருத்தும் வகையில் கணிமம் அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆங்கிலத்தில் தவறாக எழுதப்படுவதை திருத்த (Spell Check) என்பது கணிமத்தில் அமைந்துள்ளமையை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இதேபோல மொழிநடையை அழகுப்படுத்தப் பொருத்தமான சொற்களை மாற்றி அமைத்துக் கொள்ளும் வகையில் (Style Check) என்பதும் கணிமத்தில் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அடிப்படைத் தேவைகளை - முதற் கட்டப் பணிகளை நிறைவு செய்து கொள்ளும் போது தமிழுக்கு கணனித் தொழில் நுட்பத்தைக் கைப்பிடித்துச் சமநிலையில் நடைபயில்வதற்கான தகுதிப்பாடு கிட்டிவிடும் - அறிவியல் தமிழின் தேவைக்கேற்ப தமிழ் மொழிக்குப் புதிய இலக்கணம் படைக்க நாம் முயல்வோம். 21ம் நூற்றாண்டின் தமிழ்வரலாறு (கணனித் தமிழை தன்னகத்தே கொண்ட) அறிவியல் தமிழின் வரலாறாக அமைவதாக.

தமிழரசுத்தந்தை S.J.V.செல்வநாயகம் - நினைவுப் பேருரையில் கேட்டவை 26/4/1997

# ஒடிக்கப்பட்ட சிறகுக்குள்

உங்களுக்காக
நான்
எதையும்
இழக்கவில்லை
இதுவரையில்.
நீங்கள்
என்னை
இறுகப்
பற்றியிருக்கின்றீர்கள்
என்ற
நம்பிக்கையில்

தவறித் தவறி
வேற்றுமைப் படுத்தும்
பொழுதுகளிலெல்லாம்
நான்
திணறித் திணறி
செத்துக் கொண்டிருப்பதை
நீ
அறிய வேண்டாம்
பாவம்
உன்னால்
அதை
தாங்கிக் கொள்ள
முடியாது.

வேதனைகளை
நான்
நண்பர்களாக்க
விரும்புகின்றேன்
ஒரு
எல்லைக்கு அப்பால்
அவையாவது
என்மேல்
இரங்குகின்றனவே.

உங்கள்
பரிவுகளிலும்
அரவணைப்புகளிலும்
தொடுகைகளிலும்
முத்தங்களிலும்
நெற்றியில்
இடப்படும்
சிலுவைக் கோடுகளிலும்
காணமுடியாத
சில பாசங்களை
உங்கள்
பிரிவுகள்
ஏற்படுத்தி விடுகின்றன.

M.சாம்

# எப்படி அழைப்பது ?

ஓ!
எல்லாம் வல்லவனே
உனக்கு
புல்லும் ஆயுதந்தான்.
போற்றிப்பரணியை
உனக்காகப் பாடுவேன்;
ஆனால்
நீருக்குள்
நெருப்பைக் கொண்டுசெல்லும்
உனது வல்லமையால்
மீன்கள் அல்லவா செத்துமடிகின்றன?

தோலிருக்க
சுளை தின்னக்கூடிய
நீ
சுளையை விட்டுவிட்டு
தோலைக் கௌவிக் கொண்டதென்ன?

ஈனவும் விடாமல்
மேயவும் விடாமல்
இடறிவிழுத்தும்
உனது வல்லபத்தின்மேல்
"சாதுவும்" சினக்கும்போது
அதனை
"பாதகன்" என்பாயாகில்
உன்னைமட்டும்
எப்படி அழைப்பது?

- விதுரன் -




யாழ். பொங்கல் விழாவில் கலை நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மரபினூடாகப் பெண்மை பற்றிய தேடல்



சமூகப் பண்பாட்டு அம்சங்களினூடாகவே பெண்ணது வாழ்வு தீர்மானிக்கப்படுகின்றது. இவள் இப்படித்தான் வாழவேண்டுமென்ற வரையறை பண்பாட்டோடு கூடியது. ஓர் இனம் தனித்துவம் பேணுவதற்குப் பண்பாடு அவசியமாகின்றது. இது மனிதனை ஒழுங்கமைக்கின்றது. அவனது அன்றி அவளது ஆளுமைகளை விழிப்புணர்வுகளை மேம்படுத்துகின்றது. வாழ்க்கையில் ஆற்றவேண்டிய பணிகள், வாழ்வில் தனக்குரிய பங்கு, கடமை, உரிமை என்பவற்றைப் பண்பாடு கொண்டிருக்கும்.

தமிழ்ப்பண்பாடு சிறப்புடையது. ஆனால் நடைமுறையில் கொச்சைப்படுத்தப்படுகின்றது. குறைபாடுகள் நிவர்த்திக்கப்படும்போது இப்பண்பாடு மேன்மையுறும். இந்தத் தமிழ் பண்பாட்டுணர்வு மேலைத்தேசத்தவர்களின் வருகையின் பின்னரே முக்கியப்படுத்தப்பட்டது. அவர்களது ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுக்கின்றபோது, அவர்களிலிருந்து விடுபடுவதற்கும், தனித்துவம் பேணுவதற்கும் இப்பண்பாட்டம்சங்களை உணரத் தொடங்கினர். இது பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுவார்.

"மேற்குலகின் தொடர்பால் ஏற்பட்ட புதிய நிலைமைகளுக்கு புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொழுது நடந்த சோதனைகளின் பொழுது, நவீன உலகில் தொடர்ந்தும் தமிழராக நவீன வளர்ச்சி உள்வாங்கிக்கொண்ட தமிழராக வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டபொழுது எவை எவை எமது அடிப்படைப் பண்புகள், எப்பண்பு இல்லாவிட்டால் நாம் தமிழராக இருக்க முடியாது போய்விடும் என்பதை அறிந்த பொழுது தான் நாம் எமது பாரம்பரியத்தை மீளக் கண்டு கொண்டோம்."

செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை.

இதனடிப்படையிலேயே பெண்ணியல்வாதம் சம்பந்தமான கருத்துக்களும் பண்பாட்டைத் தழுவி முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். 'பெண் விடுதலை' என்னும் கருத்துப்படிவம் மேலைநாட்டுச் சிந்தனை மரபில் இருந்தே வந்தது. அது அங்கிருந்து பிறநாடுகளுக்குச் செல்கின்றபோது அந்நாட்டுப் பண்பாட்டிற்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். மாற்றாது விடின் 'பெண்ணியல் வாதம்' எனும் கருத்தே தன்னை இழந்து விடும் என்கின்ற மா.இராமலிங்கம் அவர்களின் கருத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். இதனாலேயே மேலைநாட்டுப் பண்பாட்டிற்கேற்புடையதான பெண்ணியல்வாதச் சிந்தனைகள் பலவற்றை எமது பண்பாடு மறுதலித்துப் பெண்ணியல் வாதிகளையும் விரோதமாகப் பார்த்தது.

தமிழ்ப்பண்பாடு அன்பின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது. உயிர்கள் அனைத்திலும் அன்பு காட்டியது. கடவுளை அன்பு வடிவமாகக் கொண்டது. அன்பே அனைத்திற்கும் அச்சாணியாயிற்று. " யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனப் போற்றியது. பெண்ணைத் தெய்வமெனக் கொண்டாடியது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனப் போற்றியது. இப்பண்பாடே பெண்ணை தேவதாசியாகவும் பார்த்தது. விரசமாகவும் பார்த்தது. சீதனக் கொடுமையில் உயிரைப்பறித்தது.

இலக்கியங்கள் பண்பாட்டுணர்வுகளை உள்வாங்கியே தோற்றுவிக்கப்படுகின்றன. எந்தவொரு இலக்கிய கர்த்தாவையும் அவன் வாழுகின்ற சூழல் அமைவுகளும், பண்பாடுகளும் பாதிக்கின்றன. அப்பாதிப்புடன் கூடிய இலக்கியங்கள் தனிநிலைச் செய்யுட்களாக இருக்கலாம்; அன்றி வான்மீகியைத் தழுவிய கம்பரது இராமாயணமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ராஜம் கிருஷ்ணனின் வீடு நாவலாக இருக்கலாம். இவை யாவும் தாம் தோன்றிய சமூகத்தை அவர்களது வாழ்வியல் முறைகளை மனவமுத்தங்களை வெளிக்கொணர்வதற்காகவே அமைந்தன. இவ்வகையில் இலக்கியம் என்பது மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து தோன்றியதெனலாம்.

தமிழ் இலக்கியமும் அது சுட்டும் பண் பாட்டம்சங்களும் பெண்ணியல் வாதத்திற்குச் சாத கமாக இருந்ததாவென ஆராய்கின்றபோது இரு வேறுபட்ட விடைகளே கிடைக்கின்றன. பெண்ணை எங்களுடைய மரபுத்தாயாக, மனைவியாகப் பார்த்ததேயொழிய உணர்ச்சிகள் கொண்ட உயிராகப் பார்க்கத் தவறியதே இதற்குக் காரணமாகும். இதனடிப்படையிலேயே இலக்கியம் சித்தரிக்கும் பெண்கள் பற்றி ஆராயலாம்.

இலக்கியச் சித்தரிப்பில் பெண்ணானவள் தனி நிலைச் செய்யுட்கள் தொடக்கம் பாரதி இலக்கியங்கள் வரை எவ்வாறு இடம் பெற்றிருக்கின்றாள் என்பதே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றது. பின்வரும் எடுகோள்களைப் பயன்படுத்தி இக்கருத்தைத் தெளிவுபடுத்தலாம்.

1. **பெண் பற்றிய வர்ணனைகள் – உள்ளத்திற்கா அன்றி உடலுக்கா முக்கியத்துவம் கொடுத்தன என்ற நோக்கு.**

2. **பெண்ணினது உணர்வுகள், ஆதங்கங்கள் சுட்டப்படும் முறைமை அவள் கூற்று , கவிக் கூற்று, ஏனையப் பாத்திரக் கூற்றாக அமையும்.**

3. **பாத்திரமாகச் சித்தரிக்கப்படும் பெண், வாசகர் மனங்களில் எத்தகைய இடத்தினைப் பெறுகின்றாள் என ஆராய்வது ஒடுக்கு முறைக்கு அனுதாபப்படும் சமூகம் விடுதலை யுணர்வை ஆதரிக்கின்றதாவெனும் அடிப்படை.**

சங்க இலக்கியங்கள் திணைமரபு அடிப்படையில் வாழ்க்கையைச் சுட்டுகின்றன. இலக்கியப்பாடு பொருளாக அகமும் புறமும் அமைந்தன. மனவுணர்வுகளோடு சம்பந்தமுடைய காதல் வாழ்வு அகம் எனவாயிற்று. தமிழ் பண்புக்குரிய சிறப்பான இலக்கிய மரபு இங்கு பெண் " மனைக்கு விளக்காகிய வாணுதல்" எனப் போற்றப்பட்டாள். பூக்கொய்தும், நீராயும் சுதந்திரமாகத் திரிந்தாள். தினைப்புனம் காத்தும், பயிர்த்தொழில் செய்தும், மந்தை மேய்த்தும் பொருளாதார ரீதியில் செயற்திறன் பெற்றிருந்தனர்.

கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்த போதும் அது பூரணமானதாக இருக்கவில்லை யென்பதை இற்செறிவும், உடன்போக்கும் விபரிக்கின்றன. பரத்தையை நாடச் சென்ற கணவனை நேரடியாகவும், மறைமுகமாகவும் கண்டிக்கும் மனப்பக்குவம் உடையவளானாள். ஒளவையாரும், நப்பசலையாரும், வெள்ளிவீதியாரும் பெண்பாற் புலவர்களாக அமைந்து கல்வியில் சிறந்திருந்தனர். வீரப் பெண்ணாகத் திகழ்ந்திருக்கிறார்கள். போர்ப் பாசறையில் காவல் நின்றிருக்கிறார்கள். கணவனும், சகோதரனும் இறந்த பின்னும் மகனைப் போருக்கு அனுப்பியிருக்கிறாள். ஆனால் அவள் போர்க்களத்தில் போர் புரிந்தமைக்கான தகவல்கள் எதுமில்லை. இவ்விலக்கியங்களில் கணவனை இழந்த பெண்களின் துயர் சோகமாக விபரிக்கப்படுகின்றது. மொட்டை அடித்தும், வளையல்கள் முறித்தும், பூவினை விலக்கியும், மண்தரையில் எள்ளும் சோறும் உண்டு வருந்தியிருக்கின்றனர். இது தவிர உடன்கட்டை ஏறியமையை பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு மூலம் அறிகிறோம். உலகியல் வாழ்வில் கைம்மை நோன்புடன் வாழ்வதைவிட இறப்பது மேலெனக் கருதியதன் விளைவே இப்பெண்களின் பரிதாப முடிவாக இருந்திருக்கலாம்.

ஆரம்ப நிலையில் பெண்ணினது அகவுணர்வுகள் நாகரிகமாகக் கூறப்பட்டன. பின்னர் பெண்ணானவள் தன் பாலியல் தேவைகளை வெளிப்படையாகக் கொச்சைத் தனமாகக் கூறுவதனைக் கலித்தொகையில் காணலாம். மன்னர்களதும், செல்வந்தர்களதும் போகப் பொருட்களாக்கிப் பெண்களைப் 'பரத்தையர்' எனக் குறிப்பிட்டனர். அங்கம் அங்கமாக விரசத்துடன் வர்ணிக்கப்பட்ட பாடல்கள் கவித்துவத்திற்காகத் தரமான இலக்கியம் எனப் போற்றப்பட்டது. இது தவிர கலித்தொகை ஓரிடத்தில் பெண்ணை,

**"வெறுப்பினால் வேற்றுருவங் கொண்டதோர் கூற்றங்கொல்" என உயிர்வாங்கும் யமனாகக் கூறும்.**

இதனையே வள்ளுவரும்

**"பண்டு அறியேன் கூற்று என்பதை இனி அறிந்தேன் பெண் தகையால் பேரமர் கட்டு"**

என்று குறிப்பிடுவார். பெண் ஒடுக்குமுறை யென்பது வரலாற்றின் தொடர்ச்சியாக அமைந் திருக்கின்றது. கற்பு எனும் போர்வையில் அவள் கணவனுக்குக் கட்டுப்பட வேண்டியவளாக இலக்கி யங்கள் சித்தரிக்கின்றன. பரிபாடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**
**இகழினும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவர்"**

எனக் கூறுவதையே வள்ளுவரும்

**"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

எனக் கூறுகின்றார்.

திருவள்ளுவர் காலம் சமணத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலமாகும். இக்கால அற இலக்கியங்கள் யாவும் பெண்ணை அடிமையாக்கி இழிவு படுத்தியது. இதற்குச் சமணர்களது வருகையுடன் சமயப்போதனை கடுந்துறவறத்தை வலியுறுத்தியதையும், சங்ககாலச் சமுதாயத்தின் இழிநிலையையும், வணிகர் சமுதாயத்தின் பொருளுடைமை ஆண்களைச் சார்ந்த மைந்தமையையும் காரணங்களாகக் கொள்ளலாம்.

சிலப்பதிகாரத்தில் இருபெண் பாத்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கண்ணகி தனது கணவனுக்கு இழைக்கப்பட்ட தீங்கிற்காக மன்னன் உயிரை வாங்கி நகரையே எரிக்கின்றாள். ஆயினும் இவள் குடும்ப வாழ்வில் பரத்தையினை நாடிச் சென்றவனை இன்முகங் காட்டி வரவேற்றதும், இறுதியில் தெய்வமாகப் போனதும், அவளது ஆளுமையைக் குறைப்பதாக அமைகின்றது. இந்த நியாயமான கோபம் தனக்குத் துரோகம் இழைத்த கணவனிடத்தில் காட்டாமைக்கு கற்பு எனும் மாயையை அமைத்துவிட்டனர். ஒருவனுக்கு ஒருத்தியெனும் குடும்ப அமைப்பினை மாதவி கணிகையர் குலத்தில் பிறந்தாலும் ஏற்றுக்கொண்டாள், எனினும் அவளைச் சமூகம் பரத்தையாக நோக்கி இழிவுப்படுத்தியதைக் கோவலனின் "அலம்புணர் கொள்கைச் சலதி" என்றும் "ஆடல் மகளே" என்றும் அவளை விளிப்பதனூடாக இளங்கோ புலப்படுதுகின்றார். சமூகநியதியெனும் பெயரில் ஒடுக்கப்பட்ட தன் குலத்தினது அமைப்பினை மீறிய மாதவி, துறவியாகப் போவதன் மூலம் கணிகையர் குலமென்ற அமைப்பையே உடைத்தெறிகின்றாள். கணவனை இழந்து தனித்து வாழ அச்சமூகம் இடந்தராது என்ற காரணத்தினாலேயே அவள் துறவியாவதுடன், மகளையும் துறவியாக்குகிறாள்.

உள்ளத்துணர்வுகளையெல்லாம் தம் கவியாற்றலினாலே வெளிபடுத்த முற்பட்ட காரைக்காலம்மையாரும், ஆண்டாளும் தம் பாடல்களை பக்தியெனும் போர்வைக்குள் மூடிக் கொண்டனர்.




பாதி அழிந்தும் மீதி தொலைந்தும்
பரிதவிக்கும் எம் மக்களின் நிலை அறிந்தும்
பராமுகமாய் இங்கு பகற்கனவு காணும் - இந்த
பாதகர் மனங்கள் பதறிடச் சொல்லாயோ?

மலிவு பொலிவாய் மலிந்தது இங்கே
மானிட உயிர்களின் பிணங்களின் மீதே
கொடுமைகள் கூடக் குறுகியதிங்கே
குரோதங்கள் வீசும் குருதிக் குமட்டலிலே

உற்றவர் கொற்றவர் கற்றவர் சுற்றவர்
என்றவர் இங்கு மிஞ்சிடார் பாரும்
வைகறை வேளையில் பள்ளிகள் பாடிட
கழுகுகள் தான் இங்கே மிஞ்சிடக் கூடும்

இறந்தோம் இறந்தோம் இறப்புவரை இறந்தோம்
நிமிடங்கள் தோறும் இறந்தே வாழ்ந்தோம்
கட்டிய கனவுகள் பொடியாகிப் போகிட
பதறி எழுமுன்னே பட்டென வீழ்ந்தோம்.

பொத்திப் பொத்திநாம் காத்தவை எல்லாம்
பத்தே நொடிதனில் கைவிட்டுப் போனதால்
சூனியம் தானா எம் கண்முன்னே - தொடரும்
சோகங்கள் தானா என்றும் எம்முடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாள்,

*"தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்*
*தனிவழி போயினாள் என்னும் சொல்லு*
*வந்தபின் னைப் பழி காப்பதரிது"*

எனத் தன் காதல் உணர்வுகளை பெண்ணிலையில் வெளிப்படுத்திய போதும் அது பக்தியுணர்வுக்குள் அமிழ்ந்து போனதால் அவள் பற்றிய பார்வையும் மாறுபட்டமைகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் சமுதாய அமைப்பில் அறிவு, ஆளுமை ரீதியில் மேலோங்கி வரும் அல்லது விடுபட்டு வரும் பெண்ணைச் சித்தரிக்கும் பொதுத்தன்மையை நோக்கும்போது, அவளை உலகியல் வாழ்விற்கு அப்பாற்பட்டவளாகச் சித்தரிக்க காணலாம். உதாரணமாக ஔவையாரைக் கிழவியாக்கியதும், மாதவியை துறவியாக்கியதும், கண்ணகியைத் தெய்வமாக்கியதும், காரைக் காலம்மையாரைப் பேயாக்கியதும், ஆண்டாளை பித்துப்பிடித்தவளாக்கியதும் தமிழ்ச் சமுதாயத்தின் வக்கிரத்தை உணர்த்துகின்றது.

பல்லவர் கால பக்தி இயக்கம், சமூக விடுதலையுணர்வு சம்பந்தமாக பெண்ணுரிமை பற்றியும் சிந்தித்திருக்கின்றது. இயக்கம் மக்கள்மயப்படுவதற்கு எல்லாச் சமூகத்தினையும் ஒருங்கிணைக்க வேண்டிய தேவையேற்பட்டது. எனவே மங்கையர்க்கரசியை அரசகுடும்பத்திலும், திலகவதியாரைப் போர்வீரர் குடும்பத்திலும், காரைக்காலம்மையாரை வணிகர் குடும்பத்திலும், ஆண்டாளைப் பிராமணக் குடும்பத்திலுமிருந்து தேர்ந்தெடுத்தது. சுந்தரர், பரவையார் திருமணம் கணிகையர் குலத்திற்கு சமூக அங்கீகாரத்தைத் தந்தது. இக்காலமே பெண்ணுக்குச் சமவுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தையும் உருவாக்கியது. "மையார் மலர்க் கண்ணாள் பகர்" என அப்பர் சிவனைக் குறிப்பிடுவதால், அக்காலத்தில் நாயன்மார்களால் சிவன் அர்த்த நாரீஸ்வரராக, மாதொரு பாகனாகப் பார்க்கப்பட்டிருக்கின்றார்.

காப்பிய இலக்கியங்கள் வடமொழித் தழுவலாக இருந்த போதும், அவை, தாம் தோன்றிய சமூகப்பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. தமக்கு முன்னைய இலக்கியப் பாரம்பரியத்தினைத் தொடர்கின்றன. உதாரணமாக கம்பராமாயணத்தில் இராமனால் சீதைபற்றி அனுமனுக்குக் கூறுவதை நோக்கலாம். "கால்தகை விரல்கள் தொடக்கம் உறுப்புகளின் நல்லிலக்ககணம் கூறிய இராமன் இறுதியில் அவள் ஆத்மாவைப் புரியாமல் இருந்து விடுகின்றான். அது அவளை தீக்குளிக்கவைக்கின்றது.

சிற்றிலக்கியங்களில் ஏழு பருவப் பெண்களும் பாட்டுடைத் தலைவனைக் கண்டு காதலித்த சம்பவங்களை விபரிக்கின்றன. அவர்களது ஆளுமையை, கம்பீரத்தை எடுத்துச் சொல்லும் ரீதியில் இங்கு பெண்கள் இழிவுப்படுத்தப்படுகின்றனர்.

பொதுமக்கட்சார்புடைய இலக்கியத் தோற்றத்தின் போதும் பெண்கள் விரசமாக நோக்கப்பட்டனர். இதற்கு அடிப்படைக் காரணம் இஸ்லாமியரது வருகையேயாகும். ஆயினும் இவற்றினது இசையையும், தாளலயத்தையும் இரக்கின்ற அதேவேளை, பாலியல் உணர்வும் தூண்டப்படுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. உதாரணமாகக் குற்றாலக் குறவஞ்சியில் குறவன் குறத்தி உறவிலுள்ள விரசத்தையும், வசந்தமாலையின் பந்தாடல் அழகையும் கூறலாம். சித்தர் பாடல்கள் பெண்ணை இழிவுபடுத்தியும் உள்ளன. போற்றியும் உள்ளன. பட்டினத்தார்

*"இரும்பை முலையுங் குடிகெடுப்பேன் என்குதே*
*அரும்பு விழியுமென்ற னாவியுண்பேன் என்குதே"*

எனக் கூறும் போது பெண் எமனாகின்றாள். ஆனால் கொங்கணச் சித்தர் பெண்ணைச் சக்தியாக, வலிமையாக, சலியாத உழைப்பாகக் கூறுவதை,

*"மாதாவாய் வந்தே அமுதந் தந்தாள் – மனை*
*யாட்டியாய் வந்து சுகங் கொடுத்தாள்"*

எனும் பாடல் வரிகள் ஊடாகக் காணலாம்.

தனிப்பாடற்திரட்டில் பெண் பரத்தமை புலவர்கள் பலராலும் கண்டிக்கப்பட்டுள்ளன. காளமேகப் புலவரும் வெற்றிலையின் தன்மையைப் பரத்தையுடன் ஒப்பிடுகின்றார். பாடல் பின்வருமாறு

*"கொள்ளுகையால் நீரில் குளிக்கையால் மேல்ஏறிக்*
*கிள்ளுகையால் கட்டிக் கிடக்கையால் – தெள்ளு புகழ்ச்*
*செற்றவரை வென்ற திருமலை ராயன் வரையில்*
*வெற்றிலையும் வேசையாமே."*

எனினும் இதுவரை காலமும் தனிநிலைச் செய்யுட்கள் தொடக்கம் பெண்ணது பரத்தமை கண்டிக்கப்பட்டு வந்தபோதும் ஆண் பரத்தமை கண்டிக்கப்பட்டதற்கு எந்தவிதச் சான்றுகளுமில்லை. அதனால் ஆண்கள் பல பெண்களை நாடிச் செல்வது இழிவாகக் கருதப்பட்டதைக் காணமுடியாதிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மிஷனரிமாரின் வருகை, மேனாட்டு மரபுகளைத் தமிழ் இலக்கியங்கள் உள்வாங்க வழிவகுத்தது. இதனால் அங்கு தோற்றுவிக்கப்பட்ட பெண்ணியம் சம்பந்தமான கருத்துக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் தமிழில் கலந்தன. இவை பெண்கல்வி, முன்னேற்றம் என்பவற்றிற்கு மதிப்பளித்தன. இதனால் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், கோதைத்தீவு போன்ற நாவல்கள் பெண்ணின் பல்வேறு விதமான பரிமாணங்களையும் சித்தரிக்கின்றன.

மேனாட்டுப் பண்பாட்டுத் தாக்கங்களின் உந்துதலினால் பெண் விடுதலை பற்றிய தன் கருத்துக்களை முதன்முதலில் நேரடியாகப் பாரதியார் கூறினார். பெண்கள் விடுதலைக் கும்மி, புதுமைப் பெண் ஆகிய பாடல்கள் இவரது எண்ணச் சித்தரிப்புக்களாகும். இவையாவும் இன்றைய பெண்ணியல்வாதக் கருத்துக்களை உள்வாங்கிய வடிவங்களாகும். ஆணும் பெண்ணும் நிகர், கற்பு நிலை இருவருக்கும் பொது, பெண்கள் ஏட்டை விலத்துவது மடமை, போன்ற கருத்துக்களுடன் பெண்ணை நோக்கி,

> **"நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்**
> **நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
> **நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
> **செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"**

என அவளுக்குரிய தனித்துவ ஆளுமையயை புரிய வைத்திருக்கின்றார்.

இந்த உந்துதலில் நின்று கொண்டே பின்னர் தோன்றிய கவிஞர்களும், சிறுகதை, நாவலாசிரியர்களும் பெண்மை பற்றிய புதிய உருவங்களை வாசகர்களுக்கு அளித்தனர். இதனது தொடர்ச்சி இன்று மேலும் வலிமை பெற்று முன்னெடுத்துச் செல்லப்பட்டு வருகின்றது.

---

**வாழ்த்துக்கள் நூறு....**

எமது பண்பாட்டின் சமயச்சார்பற்ற சிற்பக்கலையின் வளர்ச்சியில் இது ஓர் குறிப்பிடத்தக்க முயற்சி.

- என். நலலோஜினி
நுண்கலைப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்.

மேளவாத்தியக்காரின் முக பாவங்கள், மேழி பிடிக்கும் கைகள், காண்டா மிருகம், எந்தையும் தாயும், சூமோ வீரன் போன்ற சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

- கோ.கைலாசநாதன், யாழ்.

# கல்லறைகள் இனி பிரசவிக்கட்டும்

*சிலவேளைகளில*
*கருவறைகள்*
*பயங்கரங்களையும்;*
*கல்லறைகள்*
*பாசத்துடிப்புகளையும்;*
*ஏற்படுத்திவிடுகின்றன.*
*எதுவும்*
*எதற்கும்*
*நிரந்தரமானவைகளல்ல!*
*பத்து மாதம்*
*குடிகொண்டிருந்த*
*கருவறைகள்*
*தரமுடியாத*
*மனித நேய*
*உணர்வுகளை*
*கல்லறை மேடுகள்*
*பத்து விநாடிகளில்*
*கொடுத்துவிடுவதுமுண்டு.*
*நான்*
*கல்லறையில்*
*பிறந்து*
*கருவறையில்*
*புதைக்கப்படுவதை*
*விரும்புகிறேன்.*
*மீளப் பிறக்க*
*கல்லறைகளை*
*கண்டு கொள்ளும் வரையில்*
*என்*
*தாயின்*
*கருவறையில்*
*எவரும்*
*புதைக்கப்படாதிருக்கட்டும்.*

M.சாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வளர்ச்சியில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பும் அது நீண்டு செல்வதலும்

ஜி. கென்னத்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**தான்** இறந்த பின்னர் தனது கல்லறையில் தன்னை ''தமிழ் மாணவன்'' என்று பொறிக்கச் சொன்ன ஐரோப்பியர் ஜி.யு.போப் அவர்கள். ''வெறுமனே பிரச்சார ரீதியாக எழுந்த சமயப்பணிதான் ஒரு ஐரோப்பியனை இவ்வாறு கூற வைத்தது'' என்று இன்று இவரைப் பற்றி கூறுவது எந்தக் 'கோட்பாட்டு விளக்கங்களுக்கும்' அகப்படாத ஒரு மறைமுக பொறாமையைத் தவிர வேறில்லை. மதத்தைப் போதித்தார்கள் அதே நேரம் தமிழை நேசித்தார்கள். தமிழ்ச் செய்யுள்களைத் தொகுத்துத் 'தமிழ்ச்செய்யுட் கலம்பகம்' என்னும் நூலையும் வெளியிட்டார்.

திருக்குறளை முழுமையாக உலக றியச்செய்த பெருமைக்குரியவர் ஜி.யு.போப் அவர்கள்தான். திருக் குறளை நாற்பது ஆண்டுகாலமாக படித்து உணர்ந்து அதில் பொதிந் திருக்கும் கருத்துக்களை, குறட்பாக் களை முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886ல் வெளியிட்டார். இவை மட்டுமல்ல தமிழின்மேல் கொண்ட மரணம் வரையான பற்றா னது அவர்களுக்குத் தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டிய உத் வேகத்தைக் கொடுத்திருந்தது.

1893ல் நாலடியாரை முதலில் மொழிபெயர்த்து வெளியிட்டார். சைவ சித்தாந்த கருத்துக்களைக் கொண் டிருந்த திருவாசகத்தை 1890 ஏப்ரல் 20ம் தேதி தனது 80வது வயதில் வெளியிட்டார்.

மேற்போந்த கருத்துக்களால் ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் சேவைப் பரப்பானது எவ்வாறு தமிழை உலக றியச் செய்தது என்பதை உணர்த்து கின்றது.

ஐரோப்பியர்களால் மட்டுமல்ல ஈழத்தில் தோன்றிய கிறிஸ்தவர்களின் இடையறாப் பணியும், சேவையும் கால் தரிக்காத ஆய்வும் இன்றைய எமது தமிழின் பெருமைப்பாட்டுக்கும் உல களாவிய தன்மைக்கும் வித்தாய் அமைந்திருக்கின்றன. தமிழை உலகறியச் செய்வோம் என்று பாரதி கனவு காண்பதற்கு ஒரு நூற் றாண்டுக்கு முன்னரே அதைச் செயல் வடிவில் காட்டியவர்கள் கிறிஸ்தவ பாதிரிமார்கள்.

அருட் கலாநிதி ஏ.ஜே.சந்திர காந்தன் ''கிறிஸ்தவமும் தமிழ் பண் பாடும்'' என்ற நூலில் அல்லது ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

''ஈழத்தமிழ்ச் சமுதாயத்தில் கிறிஸ்தவமும் தமிழர் பண்பாடும், ஆக்கபூர்வமான முறையில் இணைந்து வளர்வதற்கு இருபதாம் நூற்றாண்டில் தனிப்பட்டவகையில் ஈழத்தமிழ் அறிஞர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பு குறைத்து மதிப்பிடக் கூடிய தொன்றல்ல. சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகள், தனிநாயக அடிகள் போன்றோர் தமது மறைப்பணியோடு ஒப்பரிய பண்பாட்டு பணியாற்றி னார்கள். தனிச்சமய முதல்வாதம் சுவாமி ஞானப்பிரகாசரிடம் இருந்த போதிலும் இக்குறுகிய சமய நோக்கு அவரது தமிழார்வத்தினைக் குறையச் செய்து விடவில்லை.'' .என்று குறிப் பிடுகிறார். மேலும் இவர் கிறிஸ்த வத்தின் தாக்கம், அதன்மீது எழுந்த எதிர்ப்புணர்வு இம்மத எதிர்ப்பினால் கிடைத்த பயன்களை தனது அகன்ற ஆய்வில் குறிப்பிடுகிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

''தமிழ்ப் பிராந்தியத்தில் கிறிஸ்தவ சமயத்தின் வருகையினையும், வளர்ச்சி யினையும் இன்னும் ஈழத்தமிழ் சமுதா யத்தின் சமூக கலாசார உறவுகளில் கத்தோலிக்க சமயம் ஏற்படுத்திய தாக்கத்தினையும், வரலாற்று ஓட்டத்தில் தனிமைப்படுத்தி ஆய்வ திலும் பார்க்க, சமுதாயத்தின் இயக்க நிலையில் இதனை ஒப்பியல் நோக்கில் ஆய்வது பெரும் பயனுடையதாகும். தமிழ்ச்சமூகத்தின் கலாசார அமைப் பிலும், ஈழத்தமிழரின் திருமறையாகிய சைவநெறியின் பரிணாம வளர்ச்சியிலும் அகல்விலும் கிறிஸ் தவம் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பிக்கப்பட்ட மறை மாற்ற முயற்சிகள் கிறிஸ்தவத்துக்கும் இந்து மறைக்கும் இடையில் முரண் பாடுகளை தோற்றுவித்ததேயாயினும் இந்து மார்க்கம் இதன் வழியாக எதிர்ப்புணர்வுடனிணைந்த மறுமலர்ச் சியினைப் பெறவும் தனது காலத் தினதும், மக்களினதும் தேவைகளை யுணர்ந்து இந்து சமயத்தில் ஆக்க பூர்வமான புதியமுறைகளையும் நியமங் களையும் புகுத்தவும் இச்சூழ்நிலை வழிகோலியது என்பது வரலாற்று உண்மை'' என்று கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட வெறுப்பும், எதிர்ப்புணர்வும் கூட தமிழையும், தமிழ் மறையையும் ஒரு எதிர்ப்புணர்வு நிலையிலாவது வளர்ச்சிக்கு இட்டுச் சென்றிருக்கிறது என்பதை அறியக்கூடியதாக இருக் கின்றது.

ஈழத்தமிழ் கிறிஸ்தவர்களின் தமிழ்த்தொண்டு பற்றி பேசுகையில் எவரும் தனிநாயகம் அடிகளாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து, மறந்து விடமுடியாது. ஈழத் தமிழ்ப் பணியோடு சர்வதேசமயப் பட்ட நிலையிலும் தமிழ்ப்பணியிலும் நிறைந்து காணப்படுகிறார். தமிழின் ஒரு தூதனாக சர்வதேசமெங்கும் வலம் வந்த கிறிஸ்தவர் இவராவார். தமிழ்நாட்டிலும், மலேசியாவிலும் தமிழ்மொழியை அனைத்துலகிற்கும் கொண்டு சென்று ஏனைய மொழிகளோடு நேர்நிறுத்தியதோடு மட்டுமல்ல தமிழ்மொழியை சக்தி வாய்ந்த மொழியாக்கியவர் தனி நாயகம் ஆவார். தமிழையும் தமிழைப் பற்றித் தெரிந்தோரையும் சர்வதேச மட்டத்தில் ஒன்றிணைத்து அதன் விளைவாய் தமிழை ஆராய "உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்" (International Association for Tamil Research) என்ற அமைப்பை உருவாக்கியர். இதனை விட தமிழ் ஆராய்ச்சிக்காக தமிழ்ப் பண்பாடு (Tamil Culture) என்னும் ஆய்விதழைத் தொடக்கி வைத்தார். அவரால் நடத்தப் பட்ட இவ்விதழ் இன்று தமிழியல் (Journal of Tamil Studies) என்று உலகத்தமிழ் நிறுவனத்தினரால் வெளியிடப் படுகின்றது.

தனிநாயகம் அடிகள் பற்றி பேரா சிரியர் கலாநிதி பொன். கோதண்ட ராமன் (தமிழிலக்கியத்துறை, சென்னை பல்கலைக்கழகம்) இருபதாம் நூற் றாண்டுத் தமிழாராய்ச்சியை எண்ணிப் பார்க்கும் பொழுது தனிநாயகம் அடிக ளாரை எந்த ஆய்வாளனாலும் மறக்க முடியாது. அடிகளார் இலங்கை, தமிழகம், இலண்டன் ஆகிய இடங்ளில் கல்வி கற்று ஆய்வு நிகழ்த்தி தம்முடைய ஆய்வுத்திறனை நன்கு வளமாக்கிக் கொண்டவர். இலங்கையிலும் மலேசி யாவிலும் பணியாற்றித் தமிழுக்குச் சிறப்பு சேர்த்தவர். தமது பன்மொழி புலமையையும் பல்கலை அறிவிய லையும் தமிழ்ப்பணிக்காகவே பெரிதும் பயன்படுத்தியவர்" என்று குறிப்பி டுகிறார்.

மேலும் குறிப்பிடுகையில் "சங்க இலக்கியங்கள் பற்றியும் சங்கத்தமிழர் வாழ்வுபற்றியும் இவருடைய ஆய்வுப் பகுதிகள் வேறு எந்த நூலிலும் காணமுடியாத அளவுக்குத் தெளிவை யும் விளக்கங்களையும் வழங்குகின்றன" என்கிறார். இயற்கை பற்றி எழுதிய இவரது ஆய்வுகள் பிரசித்தமானவை

* பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (Nature in Ancient Tamil Poetry)
* பூக்கள் கொண்டு தமிழர்கள் சொல்லிவிட்டார்கள் (The Tamil said it All with Flowers)
* கலியாணசுந்தரனாரின் இயற் கையும் இயலும் (Nature and The Natural in Kalyanasundram)
* தமிழர்களின் பொற்காலத்தில் கவிதை
* நிலைப்பாடும் கவிதையும்
* இயற்கையில் மனிதாபிமான கண் ணோட்டம் (The Humanist Concept of Nature)

சங்க காலத் தமிழகத்தின் கல்வி முறை பற்றி இவர் நிகழ்த்திய ஆய்வுகளுக்கு இலண்டன் பல்கலைக் கழகம் "டாக்டர்" பட்டம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

ஞானப்பிரகாசரின் தமிழ்ப்பணி மதத்தின் பார்வைக்கப்பால் விரிவு பட்டு நின்றது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் கிறிஸ்தவகுரு நிலையில் இருந்தும் அவரது பணி விரிந்தே இருந்தது. ஞானப்பிரகாசரின் தமிழ்ப் பணி ஆய்வுகள், ஆராய்ச்சிகள், ஆய்வு நூல்கள் என்று விரவிக்கிடக்கின்றன. குறிப்பாக "தமிழ் அமைப்புற்ற வர லாறு" என்னும் நூல் முதன்மை யானது. கணக்கிட முடியாத தமிழ்ச் சொற்கள் கூட்டங்கூட்டமாக இருப் பதைக் கண்ணுற்ற இவர் மேற்படி நூலை யாத்து சொற்களானது, எவ் வாறு விரிவடைந்து செல்கின்றன என்பதை கூறுகின்றார். மொழி ஆராய்ச்சித்துறையில் அவர் சிறந்த வல்லுனர் என்பதை இலங்கையில் மாத்திரமல்ல கடல் கடந்த நாடுகளி லும் பலர் ஒத்துக் கொண்டுள்ளனர். சிந்துவெளி வரலாற்று வெளிப்பாடு களில் தோன்றிய கல் அட்சரங்களை வாசித்துத் தமிழரின் பண்டைய சிறப்பைச் சுட்டிக்காட்டியதால் ஞானப்பிரகாசர் பெயர் இந்திய வரலாற்று அறிஞர்களால் கூர்ந்து அவதானிக்கப்படுகிறது.

தமிழ் வடமொழிக்கு எவ்வகை யிலாயினும் குறைந்த அமைப்பைக் கொண்டிருந்தால் அதன் இளமைத் திறம் குன்றியிருக்கும். எனவே திராவிட மொழிகளை இனிது ஆராய்ந்து வடித் தெடுத்த ஆதித்தமிழ் தமிழ்தாதுக்களை இனப்படுத்தும் புதுமுறையை நுழைத் துப் பொருள் காணும் அகராதி ஒன்றை அமைக்கும் நோக்கில் "சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி" என்னும் நூலை ஆக்கமுனைந்தார். தமிழ் சொற்களின் அடிகள் சிதையாதிருக்க, அத்துடன் இடைநிலை, விகுதி முத லான துணை உறுப்புகள் விதிப்படி வந்து புணர்ந்து சொற்கருத்தை இலகுவாக விளக்கும் அமைப்பு வேறெந்த மொழிகளிலும் இல்லை என்ற கருத்தை ஆணித்தரமாக்கி மேற்படி அகராதியை உருவாக்கினார்.

சுமேரிய மொழியோடு ஆரிய திராவிட மொழிகளை ஒப்புநோக்கி "சுமேரியமும் தமிழும்" என்ற கட்டுரையை வரைந்தவர். (Sumerian and Tamil Times of Ceylon 20-11-1927) இதைவிட ஆரிய மொழியுடன் தமிழுக்குள்ள தொடர்பு என்னும் அரிய கட்டுரைகளையும் வரைந்தார். இவரது மொழி பற்றிய ஆழமான ஆய்வானது உலகின் ஏனைய மொழி ஆராய்ச்சியில் இறங்கியவர்களுக்கு பெருந்துணையாய் இருந்திருக்கின்றன.

அடிகளாரின் பரந்துபட்ட மொழி ஆராய்ச்சியைப் பாராட்டி, அவரது பேராற்றலுக்கு மதிப்பளித்து 1939ல் ஜேர்மன் நாடானது அங்கு இவரது தலைபதித்த முத்திரை ஒன்றை வெளியிட்டது.

ஞானப்பிரகாசரின் மொழிப் பணியை ஈழநாட்டில் தொடர்ந்து மேற்கொண்டவர் தாவீது அடிகளார் ஆவார். ஞானப்பிரகாச அவர்களால் முற்றுப்படுத்த முடியாத (இறப்பின் காரணமாய்) போன ஒப்பியல் அகராதியை தொடர்ந்து பல அதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்களை செய்தவர். இதன் ஒன்பதாவது பிரிவை சிங்கள மொழியில் வெளியிடத் திட்டமிட்டிருந்தார். மேலும் சிங்களமொழி தமிழ் மொழியின் தங்கை என்று முதலில் ஆதாரத்துடன் நிரூபித்துக்காட்டியவர் இவர் ஆவார். கிட்டத்தட்ட 4000 சிங்கள சொற்களுக்கும் தமிழ்ச்சொற்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளை முன்னிறுத்தி தனது கருத்துக்கு ஆதாரமாக்கினார். இவர் ஏறத்தாழ 34 மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற மாமேதையாக காணப்படுகின்றார்.

ஈழத்து கிறிஸ்தவ தமிழ்ப்பணி இம்மூன்று துறவிகளோடு முற்றுப் பெறவில்லை. அது இன்னும் நீண்டு சென்று கொண்டிருக்கிறது. கிறிஸ்தவத்தின் ஈழத்து மண்ணிலான பணி 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே ஆழமாக பரவியது என்பது உண்மையே.

இதுவரையும் உரைநடையின் தோற்றமும் அதற்கான கிறிஸ்தவத்தின் பங்களிப்பையும், ஈழத்தில் கிறிஸ்தவர்களின் கால்தரிக்காத பணியையும் நோக்கினோம். இனி உரைநடையோடு தொடர்புபட்ட மற்றொரு பிரிவாகிய அச்சுக்கலையையும் அதன் அறிமுகப், பணியையும் நோக்குவோம்.

## அச்சுக்கலையின் அறிமுகமும் தமிழில் நூல்களின் தோற்றமும்

தமிழ்மொழியைப் பொறுத்தவரை அதன் இன்றைய வளர்ச்சிக்கும் அதன் அகத்தே உருவாகும் நூல்கள் சர்வதேசமயப்படுத்தலுக்கும் அச்சுக்கலையின் பணி முதன்மையானதாகும். தமிழில் ஆதியில் தோன்றிய நூல்களின் அழிவுக்கும், மறைவுக்கும் தனித்து நாடுகாண் சண்டைகளும், கடல் கொள்ளுதல்களும் மட்டும் காரணமாகா. ஏனெனில் கி.மு.2000ம் ஆண்டளவில் உதித்த கிரேக்க நாகரிகத்தில் தோன்றிய நாடக, கலை இலக்கிய நூல்கள் இன்றும் பார்வைக்கு அதே பிரதிகளாகக் கிடைக்கின்றன. 'கி.மு. எழுந்த எகிப்திய நாகரிகத்தினில் காணப்படும் வானசாஸ்திர, நாடக நூல்களும் இன்றும் கூட பாதுகாப்பாக பேணப்பட்டு வருகின்றன.

தமிழில் அச்சுக்கலையின் தோற்றம் இடம் பெறாமைக்கு முக்கிய காரணம் அதன் 'அறிமுகம் இன்மை' இல்லை என்பதே ஆகும். ஒரு காலத்தில் படித்தவர்களால் மட்டும் வாசித்து அறியக்கூடியதாக இருந்த நிகண்டுகளும், இலக்கண இலக்கிய நூல்களும் படித்த மேலாளர் கையில் இருந்து கல்விப் புலங்களும் சாதாரண மக்களினால் வாசித்து அறியக்கூடிய திருப்புமுனை காலத்துக்கு வந்தது அச்சுக் கலையின் அறிமுகத்தினால் ஆகும். அக்கலை ஐரோப்பியர்களால் அல்லது கிறிஸ்தவர்களால் அறிமுகம் செய்யப் பட்டது என்பது உண்மையாகும்.

இருண்டு கிடந்த தமிழ் நாட்டில் ஒருசிலரின் கைகளில் இருந்த கல்விச்செல்வம் தமிழில் அச்சுக் கலையின் தோற்றத்தின் பின் இல்லாமற் போயிற்று எனலாம். தாழ் நிலையிலிருந்த மக்களின் அறிவுக் கண்கள் திறக்கப்பட்டதோடு விளங்காத பல உண்மைகளை அச்சுக் கலையானது விளங்க வைத்தது. எனவே அச்சுக்கலையின் அடிப் படைப் பயன்பற்றி மேற்போன்ற கருத்தின் ஊடே அறியக்கிடக்கிறது.

தமிழ் நாட்டில் அச்சுக்கலையானது காலடி எடுத்து வைக்குமுன் ஐரோப்பிய நாடுகளில் இக்கலை தோன்றியது என்பது யாவரும் அறிந்த உண்மை. முதன் முதலில் தமிழில் அச்சில் எழுந்தவை எவை என நோக்குகையில், தனிநாயகம் அடிகளார் "முதலில் அச்சேறிய தமிழ்நூல்கள்" என்னும் கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

"நாமறிந்தவரையில், முதல்முதல் அச்சேறிய தமிழ் போர்த்துக்கல்லின் தலைநகராகிய லிஸ்பன் மாநகரில் 1554ம் ஆண்டு அச்சிடப்பெற்றது. இந்நூல் தமிழ் ஒலி வடிவைக் குறிப்பதற்கு "தமிழ் வரிவடிவைக் கையாளாது உரோமைய எழுத்துக்களையே கையாண்டது. இந்நூல் மூன்றாவது சுவாம் என்னும் போர்த்துக்கேய மன்னனின் ஆணையின்படி அச்சிடப் பட்டது. பின்னர் இதனை அச்சிட்டது. லிஸ்பன் நகரில் வாழ்ந்த தமிழ்க் கிறிஸ்தவர்களான வின்ஸ்சென் தேடி நசரேத், யோட்ஜ் காவல்கோ, தோமஸ் தே குருசு என்போர் ஆவார்" எனக் குறிப்பிடுகின்றார்.

சு. வே. வேலுப்பிள்ளை அவர்கள் 'காலமும் கருத்தும்' என்ற நூலில் "கிறிஸ்தவர்கள் அச்சுக்கூடங்களை நிறுவி மக்களுக்கு விளங்கதக்க எளிய உரைநடையில் துண்டு பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிட்டு தம் கருத்துக்களைப் பரப்பியதால் மக்களின் கவனத்தை ஈர்த்தனர்" என்கிறார்.

தமிழ்நாட்டில் முதலில் வெளிவந்த நூலைப் பற்றி நோக்குகையில் இது 1577ம் ஆண்டு வந்தது. தமிழ்நாடு கொல்லத்தில் அச்சிடப்பட்டு 16 பக்கங்களுடன் வெளிவந்தது. இதன் பெயர் "தம்பிரான் வணக்கம்" என்பதாகும். Flos Sanctorum என்று இதன் ஆங்கலப்பதம் காணப்படுகின்றது. இந்நூலை இயற்றியவர்கள் போர்த்துக்கல் நாட்டைச்சேர்ந்த சுவாமி என்றிக்கஸ் என்பவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுவாமி மனுவேல் என்பவருமாவார். இந்நூலானது பின்னர் விரிவாக 112 பக்கங்களுடன் "கிறிஸ்திசியானி வணக்கம்" என்ற பெயரில் 1579ம் ஆண்டு வெளிவந்தது. இது Doctrina Christiana என்னும் ஆங்கிலப் பதத்தால் அழைக்கப் படுகின்றது.

எனவே இலக்கியங்களில் பல பிரதித்தன்மை, ஒரு சீர்த்தன்மை, பராதீனப்பாடு என்ற பல மாற்ற விளைவுகள் அச்சுக்கலையால் ஏற்பட்டன. பேராசிரியர் கா. சிவதம்பி அவர்கள் குறிப்பிடுகையில் "அச்சு முறைமை என்பது எழுத்தைப் பேணும் முறைமை மாத்திரமன்று எழுத்தைப் பரப்பும் முறையுமாகும். அச்சு முறைமை எழுத்தறிவின் குழந்தையான அதே வேளை அதன் தாயாகவும் இருந்துள்ளது. ஏட்டிலக்கியத்திலும் பார்க்க அச்சிலக்கியம் அதிக தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராதினப்படுத்தப்படுகிறது" என்று இலக்கியகமும் கருத்து நிலையும் (1982) என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

இவரது கருத்தை நோக்குகையில் இலக்கிய பிறப்பாக்கங்களின் உற்பத்தியில் அதன் வளர்ச்சியில் வீரியத்தன்மை ஏற்பட்டமை கிறிஸ்த வர்களால் அறிமுகம் செய்யப்பட்ட அச்சுக்கலையின் முக்கியத்துவத்தை உய்த்துணர்த்துகின்றன. எனவே இவ் வச்சுக்கலையின் வளர்ச்சி பின்னர் பல பிரிவான நூல்களுக்கும் இலக்கிய ஊடகங்களுக்கும் வழிவகுத்தது எனலாம்.

தமிழில் விஞ்ஞான நூல்களின் வருகை என்பது ஐரோப்பியரின் பாதிப்பும், பலனும் என்பதாகும். ஏனெனில் தரவுகளையும் தகவல் களையும், சான்றுகளையும் முடிவு களையும் உண்மையென நிரூபிக்கும் நூல்கள் தமிழில் இருந்ததில்லை எனலாம். அவ்வாறு இருந்ததென்று கூறப்பட்டாலும் அவை உண்மைக்குப் புறம்பான யதார்த்த மனித புலன்க ளால் அறியமுடியாத கற்பனா வாதங் களாகவே இருந்தன. உதாரணமாக:

1 பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு முதலான எழுவகைப் பொருள் களால் நிரம்பப் பெற்ற கடல்கள் இருக்கின்றன.

2. இராகு, கேது என்ற பாம்புகள் சூரிய சந்திரன்களை விழுங்கு வதால் சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாகுதல் (இன்றுவரை இம்மூட நம்பிக்கை நிலவுகிறது)

3. இந்திரனுடைய சாபத்தினால் இடி, மழை, மின்னல் உண்டாகுதல்.

இவைபோன்ற வெறுமேன நம் பிக்கை கொண்ட கற்பனா வாதங் களிலே மக்கள் மூழ்கி இருந்தனர்.

ஐரோப்பியரின் தொடர்பு கிடைத்த பின்னரே எழுதுதல், படித்தல், கணக்குப் போடுதல் என்ற குறுகிய வட்டத்துக்குள் நில்லாமல் பூகோள நூல், வானநூல், இயற்கைப் பொருள் நூல், கேத்திரகணிதம், வரலாறு முத லான விஞ்ஞான நூல்களையும் கற்கவும் அறியவும் தொடங்கினர்.

தமிழில் எழுந்த விஞ்ஞான நூல்கள் 19ம் நூற்றாண்டில் இருந்து எழுதப்பட்டன என்று கூறப்படுகிறது.

1. சென்னை பாடசாலை புத்தகச்சங்கம் (The Madras School Book Society)

2. தென்னிந்திய கிறிஸ்தவ பாடசாலை புத்தகச்சங்கம் (The South Indian Christian School Book Society) என்ற இரு அமைப்புகளில் முதலாவது அமைப்பானது மதச்சார்பற்ற அமைப் பாக இயங்கி புத்தகங்களை வெளியிடு வோர்க்கு நன்கொடையும் அளித்து வந்தது. இந்துசரித்திரம், உலக சரித்திரம், பலதேச சரித்திரம், இரொபின்சன் குருசோ என்பன இவ்வமைப்பால் வெளியிடப்பட்ட சில நூல்களாக காணப்படுகின்றன. இரண் டாவது அமைப்பானது பாளையங் கோட்டை நாகர்கோயில், நெய்யூர், யாழ்ப்பாணம் முதலிய ஊர்களில் அச்சுக்கூடங்களை நிறுவி மிசனறிகளுக்கூடாக விஞ்ஞான நூல்களையும் ஏனைய நூல்களையும் வெளியிட்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு வெளியிடப்பட்ட சில நூல்களை நோக்குகையில் இரேனியுஸ் ஐயர் (Charles Theopilus Edward Rhenius) அவர்களால் "பூமிசாஸ்திரம்" என்னும் நூல் எழுதப்பட்டது. இதுவே தமிழில முதலில் எழுந்த பூகோள நூலாக காணப்படுகின்றது.

இதனைவிட உலகசரித்திரம், உலக சரித்திர மாலை, கேத்திர கணிதம், உளர்த்திரி விலங்கியல் போன்றவை ஏனைய நூல்களாகும்.

எனவே பூகோள நூல்களின் அறி முகம், சரித்திர நூல்களின் கால்பதிப்பு, கணித நூல்களின் நுழைவுகளும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் பாதிப்பு என்பது உண்மையே.

தொடர்புச் சாதனங்களில் முக்கிய மான தொன்றாகவும், ஜனநாயக நாட்டின் ஒரு முதன்மையான கருவி யாகவும் காணப்படுவது பத்திரிகை ஆகும். அதன் பணியும் தேவையும் ஆழமானதொன்றாகும்.

ஐரோப்பாவில் முதலில் எழுந்த இவ்வெகுசன தொடர்புச் சாதன மானது 19ம் நூற்றாண்டில் முதலில்

## வீழ்ச்சி

கஷ்டப்பட்டுச் சாணேறி
கணங்களுக்குள்ளே முழுஞ்சறுக்கி
கனவுகளாய்க் கலையும்
எங்கள் பிரயத்தனங்களுக்கு
யாரிடம் கூலிக்கேட்பது?

எல்லோரும்
'இறால்" போட்டுத்தான்
'சுறா" பிடிப்பார்கள்.
நாமோ
திமிங்கலத்தை வேட்டையாடும்
மனவேட்கையில்
''சுறா" வைப் போட்டல்லவா
''இறால்" பிடிக்கிறோம்.

இந்த இறாலுக்கும்
சொந்தம் பாராட்டி
நமக்குள் நாமே
நையப்புடைபட்டபோது
நெறிக்கெட்டுப்போன
ஒரு காட்டு அலியனை
வீட்டிற்குள் நுழைவதற்கு
பச்சைக் கொடி காட்டினோம்.

''இழப்பு" இல்லாமல
இல்லை ''விமோசனம்"
ஆனால்......
''இழப்பு" மட்டும் அறுவடை செய்யவா
உழைத்துக் களைக்கிறோம்?

மாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தது. தமிழில் இதழியலின் தோற்றத்தை அறியும்போது 1831ல் கிறிஸ்தவ மதபோதனைச் சங்கத்தின் சார்பில் வெளிவந்த 'தமிழ் சஞ்சிகை' தமிழில் வெளிவந்த முதல் பத்திரிகையாக காணப்படுகிறது. இது மாத இதழாக வெளிவந்தது. சென்னை மத துண்டுப்பிரசுரக் கழகம் என்னும் அமைப்பால் வெளியிடப்பட்டது.

தமிழ் தவிர, ஆங்கிலம், இந்தி, மலையாளம் முதலான மொழிகளிலும் இச்சஞ்சிகை வெளிவந்தது. தமிழ்ப் பகுதிக்கு ஏ.பார்னஸ் பாதிரியார், ஜே.கோல்டன் பாதிரியார், சாமுவேல் ஜோன்சன், ஜே.லாசரஸ் பாதிரியார், பி.ஏ.பிஷப் சார்ஜம்ட் போன்றோர் பொறுப்பாக இருந்தனர்.

ஈழத்தைப் பொறுத்தவரை தமிழ் இதழியல் வருகை 'உதயதாரகை' மாத இதழோடு ஆரம்பிக்கின்றது. இவ்விதழானது 1841ல் மாதம் இருமுறை வெளிவந்தது. இவ்விதழ் யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் ஈஸ்ட்மென் ஸ்ட்ராங் என்பவரால் அச்சிடப்பட்டது. ஹென்றி மார்ட்டின், செத் பேசன் ஆகியோர் இதழாசிரியர்களாகச் செயற்பட்டனர். இதழியல் தொடர்பான ஏனைய விபரங்களை 'பண்பாடு' 1993 வைகாசி இதழில் பெ.சு.மணி எழுதிய "தமிழ் இதழின் வரலாற்றில் ஒரு காலகட்டம்" என்னும் கட்டுரையில் காணலாம்.

கட்டுரையின் இறுதி நோக்கினை தரும்போது "கிறிஸ்தவர்களால் தமிழுக்கு அறிமுகம் செய்யப்பட்ட உரைநடை வரன்முறை, அச்சுக்கலை அறிமுகம் என்பவை தமிழ் இலக்கிய சூழலில் அது நவீனத்துவ நிலை நோக்கிய நகருதல்களுக்குப் பாதையை கண்டுபிடித்துக் கொடுத்தது. நவீனத்துவம் பேசும் ஊடகங்களான சமூக சேர்க்கை, தனித்துவநிலை தற்புதுமை விமரிசன நோக்கு, எளிமை, கோட்பாட்டு ரீதியான ஆய்வு, ஜனரஞ்சிதத்துவம், சமூகவயப்படல் என்பன தமிழ இலக்கியத்தில் முகம் காட்டத்தடங்கின. இது அச்சுக்கலை ஏற்படுத்திய பிரதிகூல தாக்கங்கள் ஆகும். நாவல், சிறுகதை, புதுக்கவிதை, கட்டுரையியல் என்பனவெல்லாம் அச்சுக்கலையால் துளிர்விட்ட புதிய ஊடக வடிவங்களாக காணப்படும் புதிய அறிமுகங்களாகும். ஏனெனில் ஒரு நாவலையோ அல்லது கட்டுரையையோ உரைநடையில் பேணலாமே தவிர செய்யுள் வடிவில் ஒலைச் சுவடியில் பேணமுடியாது. எனவே அச்சுக்கலை, உரைநடை என்பவற்றின் பயன் இவற்றின் இயலாமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது எனலாம்.

எனவே, இன்று சர்வதேச ரீதியில் சிறப்பானதொரு மொழியாக இருப்பதோடு, பல்வேறுபட்ட மொழியாளர்களாலும் அறியப்படுகின்ற ஆய்வு செய்யப்படுகின்ற மொழியாகத் தமிழ் மொழி காணப்டுகின்றது.

ஒரு மொழியின் அதிஉயர்வீச்சு என்பது அதன் திறனும் அதன் உபயோகப் பரப்பும் ஆகும். தமிழ் மொழியைப் பொறுத்தவரை "சங்கங்களுக்குள்" இறுகிய செய்யுள் வடிவாய் இருந்தது. உலகறிய விரவிப்போனது, உணரப்பட்டது என்பது ஐரோப்பிய கிறஸ்தவர்களால் என்பதில் ஐயமில்லை. உரைநடை, அச்சுப்பதிப்பு, நூல்கள், சஞ்சிகைகள் என்றும் "காப்பிய செய்யுள் தமிழை" சாதாரண, அடிநிலை மக்களும் பண்பறியச் செய்ததில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பு விரிவானதும் ஆழமானதும் ஆகும்.

எனவே இன்று தமிழ்மொழியின் ஒவ்வொரு வரலாற்றுத் திருப்பங்களில், வளர்ச்சியில் அடிவேராக நின்ற கிறிஸ்தவத்தை வெறுமனே மத அடிப்படை வாத நோக்கில் அவ்வளர்ச்சி பாதையில் இருந்து வேறாக்குவதும் மறைப்பதும் மிகவும் வேதனைக்குரியதும் விகடத்துக்குமுரியதே. செமித்திய பண்பாட்டைக் கொண்ட கிறிஸ்தவம் மதக்கொள்கையைப் பரப்பவே தமிழைக் கற்றனர், வளர்த்தனர் என்று வலிய கருத்துக்களை நிதர்சனத்துக்கு முரணாக புலமைக்கொள்கை வைத்து வாதாடுவது ஏன் என்று புரியவில்லை.

கிணற்றுப்போக்கில் இருந்த தமிழ் ஆய்வினையும் நோக்கினையும் சமுத்திரச்சுறாவின் போக்கில் திசை திருப்பியவர்கள் நிச்சயமாக அன்றைய கிறிஸ்தவப் பாதிரிகளும் இன்றைய ஞானப்பிரகாசர், தனிநாயகம், தாவீது அடிகள் போன்றவர்களுமே என்பதை தமிழ்வரலாறு எடுத்துக்காட்ட, அதற்கு மதச்சாயம் பூசி மழுப்ப நினைக்கும் ஒருசில நவீன தமிழ் அறிஞர்களின் கூற்றுக்கள் வேண்டப்படாதவை மாத்திரமல்ல வெறுக்கப்படக் கூடியவையுமே.

எனவே அவ்வாறான கருத்துகளால் தாம் கொண்டுள்ள சூழ்நிலையைக் கொண்டு வரலாற்றைப் புரட்டிவிடவோ, கிறிஸ்தவத்தின் தமிழ் நெருக்கத்தை திரையிடவோ முடியாது. ஏனெனில் இன்றும் கிறிஸ்தவத்தின் தமிழ்மீதான பணி நீண்டு சென்று கொண்டே இருக்கிறது.

மேற்படி கட்டுரைக்கு ஆதாரத் தேவைகளுக்காக கீழ்வரும் நூல்கள், கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டன.


1. கிறிஸ்தவமும் தமிழும் - மயிலை சீனி. வேங்கடசாமி 1936
2. தமிழ் இலக்கிய வலராறு - பேராசிரியர் வி.செல்வநாயகம்
3. இலக்கியத்தில் காலமும் கருத்தும் - ஆ.வேலுப்பிள்ளை
4. நெஞ்சே நினை - ச. அடைக்கல முத்து
5. தமிழ்தூது - தனிநாயக அடிகளார் நினைவுமலர்
6. கலைமுகம் - மார்கழி 1993


   கலைமுகம் - ஆடி, புரட்டாதி - 1995
7. தமிழில் இலக்கண இயல்புகள் - பேராசிரியர் சண்முகதாஸ்
8. பண்பாடு - 1993
9. ஈழத்து தமிழ் நூல் வரலாறு - எவ்.எக்ஸ்.சி.நடராசா
10. தமிழ் பண்பாட்டில் கிறிஸ்தவம் - அருட். சந்திரகாந்தன் அடிகளார்
11. தமிழரசு மலர் 11 - இதழ் 1.1.1981
12. திருமகன் - 1994




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Snake - Charmer**
1992 - Wood - Mahogany



**Woman in her Dressing Room**
1995 - Wood - Palu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Nadaswara Concert**
1988 - Wood - Vaahai



**Begger and Dog**
1996 - Wood - Mahogany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Our Parents**
1995 - Wood - Satin



**Our Ancestors**
1990 - Wood 0 Vaahai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Fisher Woman**
1992 - Wood - Maavilangu



**Anantha Ganpathi - in an Ecstatic State**
1995 - Wood - Margosa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Mother and Child with Waterpot**
1993 - Wood - Mahogany



**A Face**
1996 - Wood - Palmyrah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Woman with Water Pot**
1995 - Wood - Mahogany



**Lutist (Yarlppadi)**
1990 - Wood - Satin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Facing the End**
1996 - Wood - Margosa



**Farmer**
1994 - Wood - Kalvaahai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Destroyed by Bomb**
1992 - Wood - Vaahai



**Rice - Pounder**
1995 - Wood - Margosa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க வலைகள்

பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# டாறியோ வோ

## இலக்கும் வழியும்

ஆளும் வர்க்கத்தினர் பொது மக்களின் கலாச்சாரத்தை நசுக்குகிறார்கள் என்ற உண்மையைப் பாட்டாளிகளுக்கு உணர வைக்க வேண்டும்; சுரண்டல்களுக்கு மூலகாரணிகளாய்ச் செயலாற்றும் மத்தியதர வகுப்பினர் முறியடிக்கப்பட வேண்டும்; இத்தகைய வர்க்கப் போராட்டத்தில், பாட்டாளிகள், மாணவர்கள், கைதிகள், பெண்கள் போன்றோரின் உரிமைகளுக்குக் குரல் எழுப்பப்பட வேண்டும். இவைகளை அடைய, ஜுல்லாறே என்று அழைக்கப்படும் மத்தியகாலத்து ஐரோப்பிய பாணர் அல்லது கூத்தாடிகள் கையாண்ட முறையே சிறந்தது. அதைக் கொண்டு கதை சொல்லும் கலையில் சிரிப்பையும் இழையோட வைத்து ஆளும் வர்க்கத்தினரைச் சாட வேண்டும்.[1] இவற்றைத் தமது ஆக்கங்கள் மூலமாக அடைய நாடகாசிரியர் வோ விரும்பினார்.

## கருத்துக் களன்

* காவிய அரங்கு என்பதும் மக்கள் அரங்கு என்பதும் ஒன்றே. ஜேர்மானியப் பொதுமக்கள்சார் மரபுடன் தொடர்புடையதும் விருந்து விடுதிகளில் இடம் பெறுபவையுமான ஆடல்பாடல்களைப் ப்றெஃற் கையாண்டார். இத்தாலியில், அதைவிடப் பெரிய மரபுண்டு: சதுக்கங்களில் நடைபெற்ற அவைக்காற்றும் கலை (அரங்கு), கதை சொல்லும் கலை, பொம்மலாட்டம், சூத்திரப் பாவைக் கூத்து, களரி விளையாட்டுக்கள் இவையனைத்துமே காவிய அரங்குசார் கலைகள்.

* காவிய அரங்கு என்பது முழுக்க முழுக்க அறிவு சார்ந்த கலை என்பது தவறு. உணர்ச்சிக்கும் அங்கு இடமுண்டு. அதில், வாழ்க்கையின் ஒரு நிலையை அல்லது கட்டத்தை அலசி ஆராய்ந்தபின், கோபம் போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் அளிக்கப்படுகிறது.

* உணர்ச்சி என்பது இன்றியமையா மனிதப் பண்பு. அது மக்கள் அரங்கிற்கு அடிப்படையானது. சீனா தேசத்து மக்கள் அரங்கில், மனக்கிளர்ச்சிகளைத் தூண்டுபவைகள் அனைத்துக்கும் இடமளிக்கப்படுகின்றது. அத்துடன், இவ்வுணர்ச்சி வயப்படும் நிலையானது, அறிவுசார் ஆய்வினால் வரையறை செய்யப்பட்டு சமநிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றது.

* நான் இருவகையான அரங்குகளை முன்மொழிய விரும்புகின்றேன். முதலாவது, மத்திய காலத்து நாட்டுப்புறப் பண்பாட்டுடனும், பாட்டாளிகளின் போராட்டம், சமயமுரண்பாடுகள் போன்றவைகளுடனும் இணைந்து நிற்பது. இரண்டாவது, நமது சமூக மெய்மையின் நிகழ்ச்சிகள் பற்றிய மாற்றுச் செய்திகளை வழங்குவது. அது சமூக அமைப்பின் வன்முறையை, காவல்துறையினரின் அடக்குமுறையை வெளிக் கொணர்வது; கோமாளித் தன்மையுடன் வசைத்திறனையும் இணைத்து, பொதுமக்கள் தமது வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைப் படிப்பினை நோக்குடனும் அலசியாராய்ந்து சிந்திக்கும் போக்குடனும் கணிக்க உறுதுணை புரிவது. இத்தகைய அரங்கின் முக்கிய கூறாக விவாதம் அமைகின்றது. ஒரு கருத்து அல்லது செயல்முறை பொதுமக்கள் மீது திணிக்கப்படாது, விவாதிக்கப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, முரண்பாடுகள், விவாதங்கள் முதலியவை உருவாகியபின் அவர்கள்முன் சமர்ப்பிக்கப்படுகின்றது. இப்பின்னணியில், நாடகம் பார்வையாளரின் மெய்மையின் ஒரு பகுதியாக மாறுகிறது. சுவைஞர் நாடக நிகழ்ச்சியில் நேரடியாகக் கலந்து, அதை மாற்றவும் திருத்தவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மக்கள் அரங்கின் நாடகங்கள், பொது அமைப்புக் களாலோ, அல்லது அரசினாலோ ஆதரிக்கப்படக் கூடாதவை. அவைகளை பாட்டாளித் தோழர்கள் அமைக்கும் அரங்குகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.[2]

## மோர்த்தே அச்சிடெந்தாலே டி உன் அனாற்கிக்கோ

1970ல் முதல்முறையாக இத்தாலியில் அரங்கேற்றப்பட்ட இந்நாடகம் 1978 இலண்டனில் பெரும் வரவேற்பைப் பெற்று நீண்டகாலம் அங்கு மேடையேற்றப்பட்டது. கொம்மேடியா டெல் ஆர்த்தே முறையில் கோமாளித்தனமும், எள்ளலும், சிரிப்பும் சேர்ந்த நகைச்சுவை உறுப்புகளுடன் காத்திரமான கருத்துக்களையும் உள்ளடக்கிய நாடகமாக அது அமைந்தது.

1970ல் இத்தாலியில் உள்ள மிலான் நகரில் நடந்த குண்டுவெடிப்பையும் அதனைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சி களையும் அது பின்னணியாகக் கொண்டது. அச்சம்பவத்தில் பதினாறு பொதுமக்கள் உயிரிழந்தனர். பினெல்லி என்ற ஓர் அரசிலிக் கோட்பாட்டாளன் அக்குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப் பட்டான். காவல்துறையினரின் கண்காணிப்பில் இருந்த பொழுதே இறந்தான். அவன் தற்கொலை செய்தான் எனக் காவல்துறையினர் கூறியதை வோ போன்றோர் ஏற்கவில்லை. அவனது கொலை இடதுசாரிகள் பலரைக் கொன்றொ ழித்துக் கொண்டிருந்த வலதுசாரி அரசின் சதியும் சூழ்ச்சியும் என அவர்கள் கருதினார்கள். அரசுக்கெதிராகச் சட்டவரம்பினுள் செயற்பட்டுக் கொண்டிருந்த இடது சாரிகளின் போராட்டங்களால் ஏற்பட்ட குழப்பங்களிலிருந்து மக்களைத் திசை திருப்பும் நோக்குடன் அரசால் கையாளப்பட்ட நாசகாரச் செயல் என வோ போன்றோர் கூறினர். பொது உடமைக்கொள்கைகளை எடுத்துக்கூறி காவல்துறையினரின் காட்டுமிராண்டித்தனம், ஒழுக்கச் சீரழிவு, மக்களால் எதுவும் செய்ய முடியாத நிலை முதலியவற்றைக் காட்டி, அரசுக் கெதிரான குற்றச்சாட்டுக்களை நிரைப்படுத்திக்கூறும் வாய்ப்பினையளிக்கும் மேடையாகவும் இந்நாடகம் உருவாக் கப்பட்டது.

இந்நாடகம் இரு காட்சிகளை மட்டும் கொண்டது: காட்சிக்களம் ஓர் அறை. கதாநாயகன் அமெரிக்காவில் அகதியாகத் தஞ்சம் புகுந்த ஓர் இத்தாலியன். அவன் அரசிலிக் கோட்பாட்டாளன். அவன் காவல்துறையினரின் கண்காணிப்பிலேயே "தற்கொலை" செய்தான் என்பதைக் காவல்துறையினர் விசாரணை செய்து கொண்டிருந்த வேளை, பயித்தியக்காரன் ஒருவன், உளவியல் மருத்துவர் போலும், அரசிலிக் கோட்பாட்டாளனின் சாவைப்பற்றி ஆராயும் நீதிபதிபோலவும் வேடமிட்டு, உள்நுழைந்து காவல் துறையினரிடமிருந்து பல ஆவணங்களைப் பெற்றுப் பார்வையிட்டு அரசிலிக் கோட்பாட்டாளன் உண்மையாக எவ்வாறு இறந்தான் என்பதைக் கண்டறிகிறான். அவனது கண்டுபிடிப்பு, காவல்துறையினர் சோடித்து வெளியிட்ட செய்திக்கு முரணானதாக இருந்தது. "குற்றவாளி" மாடிச் சன்னலிலிருந்து கீழே குதித்து இறக்க உந்துவிக்கப்பட்டது காவல்துறையினராற்றான் என்பதை எண்பிக்கின்றான்.

## லி ஆர்க்காஞ்ஜெலி நொண் ஜோக்கனோ ஆ வ்ளிப்பேர்

1959ல் மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தின் மொழி பெயர்ப்பு: தலைமை வானதூதர் குண்டுசிப்பந்து விளையாடு வதில்லை.

சோம்பேறிகள் சிலர், லூங்கோ என்னும் தமது முட்டாள் நண்பனை, அவன் ஆஞ்செலா என்னும் அழகிய இளம் பெண்ணை திருமணம் செய்துவிட்டான் என நம்ப வைக்கின்றனர். உண்மையில், லூங்கோவுக்கும் ஒரு விபச்சாரிக்கும் மணமுடிச்சு போட்டுவைக்கின்றனர். லூங்கோ, தான் கண்டது கனவு அல்லாது வேறு எதுவும் அன்று என்பதை உணர்ந்து, அழகிய ஆஞ்செலாவை இழந்து விட்டேன் என வருந்தி வானதூதர் தன்னுடன் குண்டுசிப்பந்து விளையாடுகிறார்கள் என முறையிடுகின்றான். இறுதியில் அவனது கனவு நனவாகி ஆஞ்செலாவையே திருமணம் செய்து கொள்கின்றான்.

இந்நாடகத்தில், கனவுக் காட்சிகள், கோமாளிக் கூத்துக்கள், நாடகத்துள் நாடகம், ஆள்மாறாட்டம், ஒருசெயலைப் பலரும் ஒரேவிதமாகச் செய்தல் போன்ற நாடகச் செயல்முறைகள் கையாளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மருத்துவர் ஒருவர் லூங்கோவின் நெஞ்சில் காதை வைத்து அவனின் இதயத்துடிப்பை எடைபோட முயல்கிறார். அங்கு நிரையில் நிற்கும் அனைவரும் மற்றவர்களுடைய நெஞ்சில் காதை வைத்து மருத்துவரின் செயலைப் பின்பற்றுகிறார்கள். இந்நாடக்கத்தின் மூலம் சமூக அநியாயங்கள், அரசுப்பணி புரிபவர்கள் தமது கடமையை செய்வதற்கு இழுத்தடிக்கும் மோசமானநிலை முதலியன சுட்டிக்காட்டப்படுகின்றன. ஒரு கட்டத்தில், லூங்கோ தனது ஓய்வூதியப்பதிவைச் செய்ய அதற்குரிய அரசுப்பணிமனைக்குச் செல்கிறான். அங்கு பணிபுரிபவர்கள் ஒவ்வொருவராக கதவு பலகணிகளில் நழுவடைப்புச் சட்டத்தைப் போட்டு மூடுகிறார்கள். இறுதியில், ஒருசில பதிவக அலுவலரை அவர்களது கைப்பொறிப்பு முத்திரைகள் கழுத்தில் தொங்க, பொறிக்குள் பிடித்து வைக்குமாப்போல் அடைத்துவைத்து, தனக்குத் தேவையான ஆவணங்களில் அவர்களைக் கொண்டு முத்திரைப் பதிக்கச் செய்கின்றான் லூங்கோ. ஆள் மாறாட்டத்தின் இருகட்டங்கள்: ஒரு நாயாகத் தரப்படுத்தப்பட்ட லூங்கோ கூட்டில் அடைபட்ட நாய்போலவும், வேடிக்கை விளையாட்டுக்களையும், வித்தை களையும் தனது உடைமையாளனின் ஆணைப்படி செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் போலவும் நடிக்கிறான். அமைச்சர் ஒருவரைப் போலும் பாசாங்கு செய்கிறான்.

சமூக ஊழல்களைச் சாடும் இந்நாடகம் நடுத்தர வகுப்பினர் பார்த்துச் சுவைக்கும் முறையிலேயே எழுதி அரங்கேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மிஸ்ரேறோ புவ்வோ

மறை பொருளான நகைச்சுவை என்னும் பொருள் தரும் இந்நாடகம், உரையாடல்களுக்கிடையில் பார்வையாளர்களைப் பார்த்துக் கூறும் பல தனி உரைகளை அடக்கியது. மதம் சார்ந்த கதைகள் இதன் கரு: நாடகம் வெவ்வேறு நிகழ்வுகள் அல்லது பாகங்கள் அடங்கிய ஒரு மாலைபோல் பின்னப்பட்டது. இந்நாடகம் மூலம் இத்தாலியில் பரம்பரை பரம்பரையாக இருந்துவந்த அரங்கக்கலையின் ஒரு வடிவத்துக்குப் புத்துயிர் அளித்ததுடன், நாடகப் பிரதியில் உள்ள சொற்களுக்கு அப்பாலும் செயற்படும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார் வோ.

இந்நாடகத்தில் இடம்பெறும் நிகழ்ச்சி ஒன்றின் மாந்தர்: ஒரு வேலைக்காரி, வரி சேர்ப்போன். இருவரும் தாம் உயர் குலத்தைச் சேர்ந்தவர் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர். நாடகத்தொடக்கத்தில், அடிமட்ட மக்கள் மிகவும் விருப்புடன் பாடிவந்த காதற்பாடல் ஒன்றை ஆளும் வகுப்பினர் தமதாக்கிக் கொண்டனர் என்பது காட்டப்படுகின்றது. காதலைப் போற்றுவது அன்று அப்பாடலின் பொருள். அது, பணக்காரர், பிரபுக்கள், ஆளும் வர்க்கத்தினர் எவ்வாறு கொலை, கற்பழிப்பு முதலான சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டனர் என்பதையும், அவர்கள் சட்டத்தின் கரங்களுக்குள் அகப்பட்ட போதும், சிறிய தண்டம் ஒன்றைச் செலுத்தித் தப்பி விடுகின்றார்கள் என்பதையும் முன்வைத்து, பாட்டாளி மக்கள் மற்றையோராற் சுரண்டப்படுகிறார்கள் என்பதை வலியுறுத்துகிறது. இந்நாடகத்தின் இன்னும் ஒரு கட்டத்தில், திருவிழாக்கள், திருமறை நாடக மேடையேற்றங்கள் முதலியவைகளை ஒட்டி மக்கள் திரள்திரளாக ஒன்று கூடும் இடமாகிய கோவில்களில் மத்திய காலத்தைய கோமாளிகள் எவ்வாறு சமயக் குரவர்களைக் கிண்டல் செய்து அவர்களின் கோபத்தைச் சம்பாதித்தனர் என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

இந்நாடக நிகழ்ச்சிகளிற் கையாளப்படும் சமயக்கதைகளில், தெய்வீகப் பிறவிகளைப் பற்றிப் பேசப்பட்டாலும், மனித மாண்புக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. திருமறை நூலிற் காணப்படும் மாசற்ற சிறுவர்களின் கொலை, நாடகாசிரியரின் கண்ணோட்டத்தில், யுத்தத்தின் கொடூரத்தைச் சித்தரிக்கின்றது. வோ, இயேசு புரிந்த அருஞ்செயல்களைக் காட்டி, அவை மனித உடல் உறுப்புக்கள் குணம் பெறுவதை அன்று, ஒரு மனிதன் மேல் வேறொருவன் அதிகாரம் செய்யாது இருப்பதுவே மனித குலத்தின் மாண்பு என்பதைக் குறிக்கின்றது, என்ற கருத்தை முன்வைக்கின்றார்.

இன்னும் ஒரு நிகழ்ச்சி: தனது சொந்த முயற்சியால் பொருளீட்டி முன்னேற்றம் காணும் கோமாளி ஒருவனுடைய காணி பூமியையும், பயிர் பச்சையையும், பெருநில உரிமையாளன் நாசம் செய்து அவனது மனைவியையும் கற்பழிக்கிறான். ஏழ்மையின் சாயல் கொண்ட "புரட்சி" இயேசு, அவனுக்குத் தோன்றி "சொல்லாடும்" திறத்தை அவனுக்கு அளிக்கிறார். இவ்வரத்தை ஆயுதமாகத் தாங்கி, அதிகார வர்க்கத்தில் உள்ளோர் அனைவரையும் கிண்டலும் கேலியும் செய்கிறான் கோமாளி.

இந்நாடக நிகழ்ச்சிகளில் பழங்கதைகளுடன் சமகால நிகழ்வுகளும் நினைவுக்குக் கொண்டு வரப்படுகின்றன. எடுத்துக்காட்டு: முந்திய காலத்துப் பாட்டாளிகள் நேரத்தை வீணாக்காது சிறுநீர்கழிப்பதற்கென காற்சட்டைகளிலேயே சிறுநீர் கழிக்கும் இடம் ஒன்றையும் தைத்து வைத்திருந்தனர். இன்றைய காலத்தில் மிலான்நகரத் தொழிற்சாலை சிலவற்றில் மலசலம் கழிப்பதற்குத் தொழிலாளி ஒவ்வொருவனுக்கும் ஒதுக்கப்பட்ட நேரம் இரண்டு நிமிடங்களும் முப்பது வினாடிகளும் மட்டுமே.

## சிறப்புகள்

ஈற்றில், நாடகத்துறையில் வோ வின் சிறப்புப் பண்புகளைப் பற்றி, கீழ்கண்டவற்றைக் குறிப்பிடலாம்:

* பொது உடைமைக் கொள்கைகளைத் தமது ஆக்கங்களின் அடிநாதமாகக் கொண்டிருந்த வோ, உலக அரசியல் மாற்றங்கள் காரணமாக எவ்வித "குத்து கரணமு"ம் போட மறுத்து - ஒருவகைக் "கொள்கை அரங்கினையே" செயல்படுத்தி வந்தார்.

* மக்களின் அரங்கு என்பது சமுதாயத்தில் அடித்தள மக்களின் வாழ்வையும் பண்பாட்டையும் பிரதிபலிக்க வைக்கும் அரங்கு என்று பொருள்படும் என ஆணித்தரமாகக் கூறி அதைச் செயல்படுத்த முனைந்தார்.

* ப்றெஃஸ்ற் (காவிய), போஅல்(விவாத) போன்றோரின் அரங்குகளின் பல கூறுகளுடனும் ஒத்த பண்புகளைக் கொண்டிருந்தது வோ வின் மக்களின் அரங்கு.

* இத்தாலிநாட்டுக் கலைபண்பாட்டின் "அடிவேர்"களுக்குச் சென்று அவற்றை நவீன காலத்துடன் இணைத்து அவற்றுக்குப் புத்துயிர் அளித்தார். இந்தப் பின்புலத்திலே தான் "கேலி"யும், "எள்ளலு"ம் பொருள் உடையனவாக மாறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "மக்கள் அரங்கு", ஒடுக்கப்பட்ட வகுப்புக்களுக்குள் அடங்கும் அனைவரினதும் உரிமைகளுக்கும் குரல் கொடுக்கும் தளமாக விளங்கியது.

வோவின் நாடக ஆற்றலை மதித்து, பார்பாவின் நாடக ஆய்வு நிறுவனம் உட்பட பல்வேறு நாட்டு நாடக அமைப்புக்கள் கருத்தரங்கு, களப்பயிற்சி, நெறிப்படுத்தல் போன்றவற்றுக்கு அழைத்து அவரது சேவையைப் பயன்படுத்தியதில் வியப்பேதும் இல்லை.

அடிக்குறிப்புகள்:

1. பார்க்க, ருவென்ரியெத் செஞ்சரி யூறொப்பியன் ட்றாமா, பக். 203 - 204
2. பார்க்க, சோஸ்புக், ருவென்ரியத் செஞ்சரி தியேட்டர், பக். 204 - 207

---

# யாழ்ப்பாணக் கணனி

கவலையில்லை
எங்கள்
கணனி
கச்சிதமாய்
தேர்வு செய்யும்
வாழ்க்கைத்
துணையை
வகையாகத்
தேர்ந்தெடுக்கும்.
என்ற
நம்பிக்கை.
பட்டம்
படிப்பு;
நிறம்
குணம்;
ஊர்
பேர்;
உயரம்
பருமன்;
வயது
வடிவு;
ராசி
லக்கினம்;
இருவர்
தரவும்
இன்புட்
மூலம்
இனிதே
தீத்தி;
பொருத்தம்
கேட்டு
பொத்தானை
அமுக்க;
தரவில்
குறையாம்.
தரவில்லை
பதில்.
சாதி
சமயம்
சீதனம்
ஆதனம்
தா
எனக்
கேட்குது.
ஓ!
மறந்துவிட்டேன்
இது
எங்கட........

"அல்வி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுகமே உனக்கோர் கடிதம்

கலை முகமே!

கடந்து போன
சித்திரையில்
ஒரு சோகச் சிற்பமென
வந்த - உன்
சிந்தனை முகம்
கனடா வாழ்
தமிழர்களின்
க(வ)லை முகமாகவே
கனத்துக் கிடந்தது
கண்டேன்

உன்
இதழ்கள் சிந்திய
ஒவ்வொரு
எழுத்துக்களையும்
தொட்டுச்
சுவைத்துப் பார்த்தேன்.

அலைகள் கூட
உப்புக் கரித்ததே
ஏன்...?

தமிழர்களின்
கண்ணீராலேயே
எழுதப் பட்டுவிட்ட
காரணத்தினாலா...!

புலம் பெயர்ந்து
போகும் போதே
மனிதன்
பலமும் பெயர்ந்துதான்
போகிறானா...

கனவுகளுக்குப்
பஞ்சணை விரித்து -
கண்களிலே
காவித் திரிந்து -
காத்துக்கிடந்து;

"வசந்தங்கள் பூக்கும்"
என்று -
வாழ்க்கையைத் தேடி
ஓடிய
இடங்கூட

வழுக்கும் நிலமாய்
வீழ்த்தி
மனங்களை
வலியெடுக்க வைக்கிறதா....?

சொந்த மண்ணில்
மதிமுட்டிச்
சிறந்த வாழ்வில்
விதிமுட்டிச்
சிதைத்ததாலே -

ரத்தச்
செந்நீரைக் கரைத்து
சேர்த்த
பணத்தைக் கொட்டி

மீண்டும் மீண்டும்
கண்ணீரில்
விழுந்து
கரைந்து போகவா
இங்கிருந்து
கலைந்து போகிறார்கள்....?

ஒன்று மட்டும் உண்மை.
மனமே
மனிதனுக்குச்
சுமையாகிப் போனால்

சொந்த மண்
மட்டுமல்ல -
எந்த மண்ணுமே
அவனுக்குச்
சுமையாய்த்தான் மாறும்.

கலைமுகமே!
உன்
விழிகள் நனைத்த
வேதனைகளை
வழித்து எறிந்துவிடு!

தேவன்
வகுத்த வாழ்வில்
வேதனை கலக்காத
வெற்றிடங்கள்
எங்குமே இல்லை
என்பதை
அவர்களுக்குக் கூறு!

மறக்காமல்
"வசந்தங்களைத் தேடித்
தொடுவதற்கு
முன்னால்
வாழ்க்கையைத்
தொலைத்துவிட்டு
வருந்தாதீர்கள்"
என்பதையும் கூறி
வாழ்த்துக்களையும் சொல்வாயா?
வணக்கம்

இப்படிக்கு

நீர்கொழும்பு
தருமலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளி கொண்டெழுதிய கவிதைகள்

மொழியால் கலை புனைந்து மனித உணர்ச்சிகளை கவிதைகளாய் வடிப்பர் கவிஞர். ஆனால் இங்கு, உளியால் மரக்குத்திகளில் கவித்துவமாக மன உணர்ச்சிகளை வடிக்கின்றார் சிற்பக் கலைஞர் ஏ. வி ஆனந்தன். வேம்பு, பனை, மகோகனி, முதிரை, வாகை எனப் பல்வேறுபட்ட மரங்களில் தனது கை வண்ணங்களைகாட்டி மனதின் எழுச்சிக்கும் வித்திடுகின்றார்.

ஏப்ரல் 24, 25, 26, திகதிகளில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் திருமறைக் கலாமன்றக் கலைஞர் திரு. ஏ. வி. ஆனந்தனின் சிற்பக்கண்காட்சி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. பெருந்திரளான பாடசாலை மாணவ, மாணவியர் பங்கு கொண்ட இக்கண்காட்சி கலை பற்றிய பிரக்ஞையும், விழிப்புணர்வையும் மக்கள் மத்தியிலும், மாணவர் உலகிலும் ஏற்படுத்த ஏதுவாக அமைந்தது என்றால் மிகையாகாது.

முப்பரிமாணக் கலைவடிவாகவும், வெளிச்சார்ந்த கலையாகவும், கட்புலக் கலையாகவும், ஆக்கும் கலையாகவும், மிளிரும் சிற்பக்கலைக்கு கிழக்கு, மேற்கு என்ற உலகின் பலபகுதிகளிலும் சிறப்பான வரலாறும் இடமும் உண்டு. பொதுவாக கீழைத்தேச இந்தியக் கலைக்கு ஆத்மீகம் சார்ந்த பங்கு உண்டென்பது யாவரும் அறிந்ததே. கலைகளினூடு ஆத்மீக பலம் கொள்ளல், இறைவனை வழிபடுதல், ஆராதித்தல் என்பன பொதுவாக மக்கள் மனதினை ஆற்றுப்படுத்தும் சாதனங்களாகவே கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் ஏ.வி. ஆனந்தனின் சிற்பக்கண்காட்சி பார்ப்பவரின் மனோநிலையை ஒருவித மோன நிலைக்கு இட்டுச் சென்றது என்பது அனுபவ உண்மையாகும்.

ஆனந்தக்கணபதியின் ஆனந்த நடனம்; தும்பிக்கையை மேலெறிந்த நிலையில் ஆட்டத்தின் கதியை இயம்பி நின்றது. பாம்பாட்டியின் வாய் குழலை ஊதியபோதும் அவனது கண்களின் கவனம் சுற்றியுள்ளோரை நோக்குவது போலே உள்ளது (பணத்தை எதிர் பார்த்து?); மண்வெட்டியும் கையுமாக வானம் பார்க்கும் உழவனது உழைப்பின் ரேகைகள் அவனது உடம்பில் தெட்டத் தெளிவாகவே காணப்பட்டன; ஒளவைக் கிழவிக்கு முருகன் நாவல் மரத்திலிருந்து சுட்ட பழம் உதிர்த்தானா; கிழவி அதனை ஊதி உண்ணுகிறாளா? நாதஸ்வர நாயகர்கள் வாசிப்பது புன்னாகவரளியா, தில்லானாவா? உண்மையில் கேட்காத சங்கீதம் கேட்ட சங்கீதத்தினை விட இனிமை கூட என்று சொன்ன ஆங்கிலக் கவிஞர் ஜோன் கீற்சை நினைக்க வேண்டியிருந்தது; நாதஸ்வர நாயகர்களின் பாவங்கள் ஏ.வி. ஆனந்தனின் கைகளூடாக முகங்களில் ஜொலித்தன. அதே வேளையில் பறை வாசிப்போரின் வறுமையை அவர்கள் முகங்கள் பறை சாற்றிநின்றன.

அது என்ன? சமாதானப்புறாவை சிலுவையில் அறைந்தது யார்? கிறிஸ்தவ ஐதீகம் சமகாலத்து அவலத்தை வெளிப்படுத்தி நின்றது. அகதிவாழ்வும், இடப்பெயர்வும் கூட ஆனந்தனின் சிந்தனையிலிருந்து தப்பவில்லை. பாலன் பிறப்பு, சகுந்தலை, தமயந்தி, மீன்காரி, பெண்களின் மெய்ப்பாடுகள், சரணாலயம் என்று பல்வேறு கருக்களைத் தாங்கி நின்றன சிற்பங்கள். பிரபல சிற்பக்கலைஞர் விசுவலிங்கம் அவர்களது சிற்பங்களையும் நினைவுக்கு கொண்டு வரமுடிந்தது.


வாழ்வின் அர்த்தமுள்ள பதிவுகளாக கலை இலக்கிய ஆக்கங்கள் மிளிர்கின்றன. இதன் மூலம் மக்களின் மனத்துடிப்புகளை ஒன்றுபடுத்த முனையும் கலை இலக்கிய கர்த்தாக்களின் தாகம் அனைவராலும் வரவேற்கப்பட வேண்டியதே. இன்று உலகெங்கும் தலைவிரித்தாடும் மதவாதம், இன வாதத்துக்கு எதிராக Religion of Humanism எனும் கருத்து மேற்கில் பேசப்படுகிறது. அதாவது மனிதநேயம் ஒரு சமயமாகினால் எல்லோரும் ஒன்றுபடலாம் என கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நமது ஈழத்துக்கவிஞர் மு.பொ. கூட அண்மையில் ''மனிதம் இனிதமாகவேண்டும்'' என கவிதை புனைந்துள்ளார். இந்த அடிப்படையில் கலை இலக்கியவாதிகள் மனித நேயத்துடன் கூடிய செயற்பாடுகளையும் படைப்புகளையும் ஆக்கி அளிக்க வேண்டும் என்பது அனைவரது அவா ஆகும்.

**கந்தையா ஸ்ரீகணேசன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொழும்பு திருமறைக் கலாமன்றம் நடத்திய சிற்பி ஆனந்தனின்

சிற்பக் கண்காட்சியில் ஒரு சில கட்டங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுகதை

- பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் -

மன்னர் சாஜஹானின் மனதில் அமைதி வெளியேறி விட்டிருந்தது. மன்னரின் மனம் சீர் குலையும் போது ஆறுதல் சொல்ல வேண்டிய மதிமிகு அமைச்சரோ பாரசீகம் சென்றிருந்தார்.

சலனமற்ற நீர் போலிருந்த மன்னர் சாஜஹானின் மனதில் சிந்தனை கல்லெறிந்து, அமைதியை தன்னோடு கைப்பற்றிச் சென்றிருந்தார் அமைச்சர்.

அமைச்சர் நிச்சயம் திரும்புவார்... ஆனால் தன் மனதுக்கு ஆறுதல் தர வேண்டிய அந்த அமைதி தரவல்லவனை அமைச்சர் உடன் அழைத்து வருவாரா...? அப்படி அவர் வந்து விட்டாலும் தனக்குத் தேவையான அமைதி அவருடன் வருமா...? இப்படியான சிந்தனைகள் மாறி, மாறி மன்னரின் மனதை அலைக்கழித்து, புரட்டி எடுத்துக் கொண்டிருந்தன.

யார் அவன்...! அவன் யார்...?

அவன் தான் ...

பாரசீக புகழ்மிக்க சிற்பி, அமானத்கான்.

அமானத்கான்!

இந்த 'அமானத்கான்' என்ற சர்வ சாதாரணமான மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட சிற்பங்களும், கட்டிடங்களும், பாரசீகத்தில் அற்புதமானவை, மதியை பறித்து எடுப்பவை, கண்களை அகல விரியச் செய்பவை, பார்வையை, மதியை மழுங்கச் செய்பவை.

அவ்வளவு மகத்தானவை அவனது கைவண்ணங்கள்!

மன்னரின் மனம் கடந்த பல ஆண்டுகளாக அமைதியின்றி தவித்ததற்குக் காரணம், அவரின் வாழ்வை பகிர்ந்து கொண்டு ஆருயிர் துணைவியாக கடந்த பதினாறு ஆண்டுகளாக வாழ்ந்து, திடீரென்று அவரை நிர்க்கதியாக கைவிட்டு, இறைவனடி சேர்ந்துவிட்ட அவரின் பட்டமகிஷி மும்தாஜ் பேகத்தின் பிரிவு தான்.

மறைந்து போன தன் மனைவியின் பேரால் என்றும் நிலைக்கக்கூடிய ஒரு மஹாலை நிர்மாணிக்க வேண்டும் என்ற தீராத எண்ணமொன்று மன்னரின் மனதினுள் நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருந்தது. அதற்கேற்றவாறு அந்த மஹாலுக்கான தனது சிந்தனை வடிவத்தை நீண்டகால முயற்சியின் பயனாக அவர் துணியில் வரைப்படமாக வரைந்தும் இருந்தார்.

இருந்தும் என்ன பயன்...?

தன்னால் வரையப்பட்ட அந்த அற்புத மஹாலை நிர்மாணிக்கக் கூடிய மகா சக்தி வாய்ந்த கலைஞன் ஒருவனை இது காலம் வரை அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை... இயலவில்லை.

தன் கனவை மதிநுட்ப அமைச்சரிடம் சொன்னார் மன்னர்.

தான் பாரசீகம் சென்றிருந்த போது, அங்கு பல அற்புத மஹால்களைக் கண்டதாகவும் அந்த மஹால்களின் வடிவமைப்பில் தான் மனதை பறிகொடுத்து விட்ட எக்கத்தினால், அவைகளை நிர்மாணம் செய்த சிற்பியை பற்றி விசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரித்ததாகவும் அவன் பெயர் அமானத்கான் என்றும் அவனால் மட்டுமே மன்னரின் கனவை நனவாக்க முடியும் என்று தான் உறுதியாக நம்புவதாகவும் அமைச்சர் மன்னரிடம் பகர்ந்தார்.

தன் எண்ணக் கனவுகளை நிர்மாணிக்க வழிவகை தெரியாது மன அலைகடலில் மூழ்கிக் கொண்டிருந்த மன்னருக்கு, அமைச்சரின் வார்த்தை துரும்பாகக் கிடைத்து விட்டது.

இனி விடுவாரா மன்னர்...!

உடனடியாக மன்னர், அமைச்சரை சகல ஏற்பாடுகளுடனும் பாரசீகம் அனுப்பி வைத்துவிட்டார்.

திட்டத்தின்படி அமைச்சர் நேற்று முன்தினம் வரவேண்டியவர்.

இன்று, இந்த நாழிகை வரை அவர் திரும்பவில்லை. எனவே மன்னரின் அமைதி, அமைச்சரின் வரவு தாமத மாகியதின் காரணமாகவே அமைச்சரை நாடிப் பறந்து விட்டது.

எனவே...

அமைச்சர் திரும்பினால்தான் மன்னருக்கு மனஅமைதி என்பதற்கில்லை. அற்புத கலைநிர்மாண சிற்பி அமானத்கானும் வந்தாலே மன்னரின் மனதுக்கு அமைதி ... சாந்தம்... நிம்மதி...!

''வருவாரா... வருவாரா... அமானத்கான் என்ற மகா சிற்பி அமைச்சருடன் இந்த முகலாய சாம்ராஜ்யத்துக்கு வருவாரா...?'' இந்தக் கேள்விகள் மன்னரின் மனச்சுனையில் சலனத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தன.

''என்ன மன்னா... இன்னும் எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படிக் கடுமையான சிந்தனை?'' குரல் கேட்டு திகைப்புடன் திரும்பிய மன்னவன் சாஜஹானின் முகத்தில் திடீரென்று ஒளி பரவியது.

காரணம் ...!



மதியூக அமைச்சரின் அருகில் புதிய அழகிய இளைஞன் ஒருவன் நின்றிருந்தான்.

அவனே புகழ்பூத்த சிற்பி அமானத்கானாக இருக்கவேண்டும்! என்ற திடமான முடிவுக்கு வந்துவிட்ட மன்னர், ''வந்துவிட்டீர்களா அமைச்சரே...!'' என்று மிக அமைதியாக கேட்டாலும் அவரின் பார்வை அமைச்சரின் அருகே நின்ற புதியவனின் மேனியிலே பதிந்து நிலைத்தது.

''ஆமாம் மன்னவரே! நாம் தேடிப் போன அந்த மகா அற்புத சிற்பி அமானத்கான் இவர் தான்!'' என்றார் அமைச்சர்.

''ஊகித்தேன்.... அமருங்கள் என் மதிப்புக்குரிய சிற்பி அவர்களே...!''

மன்னரின் அளவு கடந்துவிட்ட ஆனந்தம் அமானத்கானுக்கு அளவற்ற வரவேற்பைக் கொடுத்ததைக் கண்டு அமைச்சர் புன்னகை பூத்தார்.

''நன்றி மொகலாய சாம்ராஜ்ய சக்ரவர்த்தி அவர்களே!'' என்றவாறே மன்னருடன் சரியாசனத்தில் அமர்ந்தார் சிற்பி.

மன்னர் சிற்பியை தன் அனுபவ அறிவுக்கண்களால் எடை போட்டார். சிற்பியோ தன் இளமையை மனதிற் கொண்டு அவர் இலட்சியக் கனவை, தன்னிடம் ஒப்படைப்பாரா என்பதை மன்னரின் விழிகளில் தேடலானான்.

இரவு விருந்துபசாரம் முடிந்தது. மன்னரும் சிற்பி அமானத்கானின் முன்னைய நிர்மாணங்களைக் கேட்டு அவன் மீது பெருமதிப்பும் மரியாதையும் கொண்டார். அதை செயலிலும் காட்ட அவர் அவனோடு சரிசமமாக மிகச் சரளமாகப் பழகினார், அளவளாவினார்.

மன்னர் தன் மனதில் பதிந்த தன் அன்புக்கினியவளுக்காக தன் ஞாபகச் சின்னமாக நிர்மாணிக்கவிருக்கும் மும்தாஜ் மஹாலை தூரிகை கொண்டு வடித்த துணியை சிற்பியிடம் காட்டினார்.

அதை மிக நன்றாக ஆராய்ந்து அமானத்கான் சொன்னதைக் கேட்ட மன்னர், ''உங்கள் முடிவு இதுதானா அமானத்கான் அவர்களே!'' என்றார்.

''ஆமாம் அரசே! தீர்க்கமாகத் தான் கூறுகிறேன். அதுவும் இடைவிடாது இருபதினாயிரம் பேர் உழைத்தால் மட்டுமே இந்த மஹாலை சுமார் பதினெட்டு ஆண்டுகளில், அதாவது இன்றிலிருந்து 1648 ஆம் ஆண்டின் இறுதியில் தான் நீங்கள் உங்களின் இந்தக் கனவை நனவாகக் காணலாம்!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர் கடுமையாக சிந்தனை வயப்பட்டார்.

அமானத்கான் மன்னனை நோக்கி மிகவும் அமைதியாக கேட்டார். ''மன்னர் சிந்திப்பதை பார்த்தால்....''

''இல்லை! இல்லை!! நீங்கள் இளைஞராக இருந்தாலும் மகா சிற்பி என்பதை நான் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டுவிட்டேன். உங்கள் திறமையில் எனக்கு முழுமையான நம்பிக்கையுண்டு. ம்...''

''மன்னரே! நீங்கள் எனக்களித்திருக்கும் பணி விரைவாக முடிக்கக் கூடிய காரியமொன்றல்ல... சில வேளை அது உலக அதிசயங்களில் ஒன்றாக மாறினாலும் வியப்பதற்கில்லை. ஒவ்வொரு மணலையும் நான் ஆராய்ந்தே இதற்கு பயன்படுத்த வேண்டும்! ஏனென்றால் அதற்கு நாளை ஏதாவது குறை நேர்ந்தால் அதனை நிர்மாணித்த சிற்பியையே குறை கூறுவார்கள். சிற்பியின் பணி மகத்தானது... என் சகல திறமைகளையும் நான் இதற்காக அர்ப்பணிக்க சித்தமாயிருக்கிறேன் அரசே...''

அமானத்கானின் வார்த்தைகளை கேட்ட மன்னர் பேசவில்லை. சிற்பியின் இரு கரங்களையும் பற்றி முத்தமிட்டார். அவனை தன் பரந்த மார்பினிலே அடைக்கலமாக்கிக் கொண்டார். கலைஞனும் காவலனும் சங்கமமாகினர்.

காலம் நகர்ந்தது.

தாஜ்மஹால் எழுந்தது!

மன்னர் தன் வாழ்வினிலே இன்றுதான் மகிழ்ச்சியாக இருப்பதை அமைச்சர் உணர்ந்தார்.

''ஆஹா... அமைச்சரே அற்புதம்... அற்புதம்... நான் நினைத்ததை விட எதிர்பார்த்ததை விட, பல கோடி மடங்கு சிறப்பாக அமைந்துவிட்டது என் தாஜ்மஹால்!'' மன்னர் மகிழ்ச்சியின் எல்லையின் விளிம்பிலிருந்து பேசினார்.

''நானும் நினைக்கவில்லை மன்னரே! உங்களின் நினைவாலயம் இப்படி புத்துயிர் பெறும் என்று ... கலைஞர் அமானத்கான் பாராட்டுக்குரியவர்!''

''அமைச்சரே! அந்த அற்புதமான சிற்பி பாராட்டுக்கு மட்டுமல்ல... என் இதயத்தின் ஆட்சிக்கும் உட்பட்டவர்! இப்படிப்பட்ட இந்த மகா சிற்பிக்கு என்ன பரிசு வழங்கலாம் அமைச்சரே... சொல்லுங்கள்! ம்... விரைவாகச் சொல்லுங்கள்!''

அமைச்சர் மன்னரைப் பார்த்து புன்னகைத்தார்.

அதைக்கண்டு மன்னருக்கு எரிச்சலாக வந்தது... ''நான் பரிதவிக்கிறேன்.... நீர் என் கேள்விக்கு பதில் சொல்லாமல் புன்னகைக்கிறீர்''... என்று அலுத்துக் கொண்டார்.

'' நீங்கள் விரும்பும் பரிசை அவர் ஏற்கமாட்டார். அவர் விரும்பும் பரிசையே அவர் ஏற்பார்!'' என்றார் அமைச்சர்.

''அமானத்கான் விரும்பும் எதையும் நான் கொடுக்க சித்தமாக இருக்கிறேன்!''

''மன்னவா! கலைஞர் அமானத்கான் விரும்பும் பரிசு நம் இத்ரிஸின் தங்கை பத்ருன் நிஸா!''

''எந்த இத்ரீஸ், சதா களவும், குடியுமாக திரிகிறானே... அந்த இத்ரிஸின் தங்கை, என் வளர்ப்பு மகள் பத்ருன் நிஸாவா?''

''ஆமாம்...!''

''உண்மையிலேயே மும்தாஜுக்குப் பிறகு சிறந்த ஒரு பெண் முகலாய சாம்ராஜ்யத்தில் இருப்பாள் என்றால், அவள் இந்த பத்ருன் நிஸா தான்! அமானத்கானை மணக்க பத்ருன் நிஸா விரும்புவாளா...?'' ஏக்கம் மன்னரின் குரலில் தொனித்தது.

''பத்ருனும்... அமானத்கானும் ஒருவரை ஒருவர்...'' மேற்கொண்டு பேசாமல் மன்னரை ஏறிட்டு புன்னகையோடு பார்த்தார் மதியூக அமைச்சர்.

அமைச்சரின் பார்வையை புரிந்து கொண்ட மன்னர், ''அப்படியா! அந்த மகா சிற்பிக்கு இது மிக மிக அற்பப் பொருள்...'' என்றார் மன்னர்.

''உங்களுக்கு தாஜ்மஹால் எப்படியோ அப்படியே அமானத்கானுக்கு பத்ருன் நிஸாவும்...!''

''அமைச்சரே நாளை தாஜ்மஹால் திறப்பு விழா! அந்த மகிழ்ச்சி வேளையிலேயே இவர்களின் திருமணத்தை நாம் செய்து வைப்போம்... இதனை மிகவும் இரகசியமாகவே வைத்திருங்கள். குறிப்பாக, பத்ருனுக்கும், அமானத்கானுக்கும் கூட இது தெரிய வேண்டாம்!''

''ஆகட்டும் மன்னரே!''

மன்னரும், அமைச்சரும் அந்த மகா சிற்பிக்கு ஆற்றவேண்டிய பிரமாண்டமான திட்டங்களுடன் பிரிந்தனர்.

பத்ருன் நிஸாவும், அமானத்கானும் வழமையாக தாஜ்மஹால் தோட்டத்திலேயே சந்திப்பது வழக்கம்.

இன்றும் இங்கேயே சந்திக்க திட்டமிட்டிருந்தனர்.

குறிப்பிட்ட வேளை தாண்டி வெகு நேரமாகியும் இன்னும் அமானத்கான் வரவில்லை.

காரணம்!

நாளை தாஜ்மஹால் திறப்பு விழா என்பதால் அவசரமான கூட்டம் கூடியது. கலந்தாலோசிப்பதற்காகவே மன்னர் கலைஞர் அமானத்கானை அக் கூட்டத்துக்கு அவசரமாக வரவழைத்திருந்தார்.

எனவே அமானத்கான் வெகு நேரமாகியும் பத்ருனை சந்திக்க வர முடியவில்லை.

அவர் இனி இங்கு வரமாட்டார் என்ற தீர்மானத்துடன் பத்ருன் நிஸா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு திருப்ப எண்ணிய போது, தாஜ்மஹால் பக்கம் இருந்து இருவர் ஓடிவருவதை மங்கிய இருளில் கண்டு மரத்தின் பின் மறைந்து கொண்டாள்.

வந்தவர்களும் அந்த மரத்தடிக்கே வந்தனர். மிகவும் இரகசிய குரலில் உரையாடினர்... அந்த உரையாடலில் ஒரு குரல் தன் உடன்பிறந்த சகோதரன் இத்ரீஸின் குரல் என்பதால் அவர்கள் உரையாடலுக்கு தன்னையறியாமலேயே செவி கொடுத்தாள் பத்ருன்நிஸா.

''ஒரு மாதிரியாக தாஜ்மஹாலிலுள்ள மகாராணியின் கல்லறையிலிருந்து நல்ல பெறுமதியான மாணிக்க, ரத்தினங்களை எடுத்து வந்துவிட்டோம்... இனி இவைகளை விற்று நாம் பெரும் பணம் சம்பாதிக்கலாம் ஜமால்!'' என்றான் இத்ரீஸ்.

''என் குறையும் தீர்ந்தது இத்ரீஸ்! நான் இன்று இரவே பீஜப்பூர் சென்று விடுவேன்!''

''கோட்டை காவலர்கள் வருமுன் நீ இந்த வழியாகப் போ ஜமால்... நான் இப்படியே போகிறேன்... பிறகு ஒரு நாள் சந்திப்போம்.!'' என்ற இத்ரீஸ் கொஞ்ச தூரம் போனதும்....

''என் அருமை சகோதரனே நில் ! என்ற பத்ருனின் குரல் கேட்டு கதி கலங்கி திரும்பி பார்த்தான் இத்ரிஸ்.

''பத்ருன் நீயா! நீ எங்கே... இங்கே?'' இத்ரீஸ் திகைப்படைந்து கேட்டான்.

''என் ஒளிமயமான எதிர்காலத்தை நிர்மாணிக்கத்தான் நான் இங்கே வந்தேன்!'' ஆனால் இருண்டு விட்ட என் கண்களை என்னாலேயே இப்போது நம்ப முடியவில்லை சகோதரனே!''

'' பத்ருன் நீ என்ன சொல்கிறாய்?''

'' கதை சொல்ல நேரமில்லை... உன் நண்பனையும் அழைத்து கவர்ந்த ரத்தினங்கள் எல்லாவற்றையும் மகாராணியின் கல்லறையில் வைத்து விடு...!''

'' நான் அப்படி செய்ய மாட்டேன்!'' கலக்கமான குரலில் சொன்னான் இத்ரீஸ்.

''அதுவரை நானும் உன்னை விடமாட்டேன்!'' திடமாகச் சொன்னாள் பத்ருன்.

''யாராவது பார்த்து விடப் போகிறார்கள் .... நான் விரைவாகப் போக வேண்டும்!'' ஓரடி எடுத்து வைத்தவனைக் கெட்டியாக பிடித்துக் கொண்ட பத்ருன் ''ஓரடி முன்னேற நான் உன்னை விட மாட்டேன்!'' என்றாள்.

திமிறினான், கெஞ்சினான், குமுறினான் இத்ரீஸ். ஆனால் பத்ருனின் பிடி வர வர இறுகியதே ஒழிய இளக வில்லை.

காவலர்கள் வரும் அரவம் கேட்டது.

துர்க்குணனான இத்ரீஸ் தன்னிடமிருந்த பிச்சுவாவை எடுத்து தன் உயிரைக்காத்துக் கொள்வதற்காக அவன் தன் உடன்பிறப்பையே குத்தினான்.

தன் வயிற்றினுள் பதிந்த அந்த பிச்சுவாவை எடுத்து மின்னல் வேகத்தில் தன் சகோதரனின் வயிற்றில் பாய்ச்சினாள் கடமையின் சின்னமான பத்ருன் நிஸா.

முதலில் சாய்ந்தவன் இத்ரீஸ். அவன்மேல் அடுத்து சாய்ந்தாள் பத்ருன்.

மறுநாள் காலை தாஜ்மஹால் திறப்பு விழா நிகழ்ந்தது. அதனை நிர்மாணித்த மாபெரும் சிற்பி அமானத்கானை தன்னருகில் அழைத்து அணைத்துக் கொண்ட மன்னர், ''மாபெரும் கலைஞரே! பத்ருனின் மரணம் எனக்கும் அளப்பரிய வேதனையை தருகிறது... உங்களுக்கு இந்த முகலாய சாம்ராஜ்யத்தில் தாஜ்மஹாலைத் தவிர என்ன வேண்டும் கேளுங்கள் கலைஞரே! தங்கள் காலடியில் சமர்ப்பிக்க காத்திருக்கிறேன்!'' என்றார் மன்னர்.

தான் எதிர்பார்த்த, விரும்பிய, ஒரேயொரு பொருளான பத்ருன்நிஸா இன்று உயிரோடு இல்லை! சற்று நேரத்துக்கு முன்னர் தான், தான் நிர்மாணித்த தாஜ்மஹாலின் முன் வாசலில் பத்ருன் நிஸா சகல ராஜ மரியாதைகளுடனும் நல்லடக்கம் செய்யப்பட்டாள்.

இனி என்றுமே அமானத்கான் அவளை மணக்க முடியாது!

இந்த உலகில் அந்த மகா சிற்பி மனமார, உளமார விரும்பிய பொருள் இன்று இந்த மண்ணின் மேலில்லை.

மன்னரின் இலட்சியத்தை நிறைவேற்றிய அற்புதக் கலைஞனுக்கு தேவையானதை கொடுக்க மன்னரால் முடியவில்லை.

என்றாலும் மன்னர் மீண்டும் கேட்டார்.

''அமானத்கான்! உங்களுக்கு என்ன வேண்டும்.... இந்த சாம்ராஜ்யம் வேண்டுமா...?

''வேண்டாம் எனக்கு என் பத்ருன் வேண்டும்!''

''...............'' மன்னர் அந்த கலைஞன் கேட்டதைக் கொடுக்க முடியாமல் தவித்துப் போனார்.

''அவள் தான் இன்று உயிரோடு இல்லையே... அதை விட வேறொரு பெண்ணை...

மன்னர் முடிக்கவில்லை... அமானத்கான் குறுக்கிட்டு கேட்டான் ''மன்னரே உங்கள் தாஜ்மஹாலும் மசூதியும் ஒன்றாக முடியுமா...?''

மன்னர் வாயடைத்துப் போனார்!

அமைச்சர் கேட்டார் ''மகா சிற்பியே! உங்களுக்கு என்ன பரிசு வேண்டும்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு என் பத்ருன் வேண்டும்!'' அழுகை கரைபுரண்டது.

நிர்மலமான மனதோடு முகலாய சாம்ராஜ்யம் வந்த சிற்பி அமானத்கான் நெஞ்சில் துன்பச் சுமையோடு தன் தாய் நாடாகிய பாரசீகம் நோக்கி பயணமானான்.

பாராளும் சக்கரவர்த்தி என்றால் எதையும் தன்னால் சாதிக்க முடியும் என்ற திடமான நம்பிக்கையுடன் வாழ்ந்த சக்கரவர்த்தி சாஜஹான், தன் கனவை நனவாக்கிய அந்த மகா சிற்பி கேட்ட அற்ப பரிசை கொடுக்க முடியாமல் குற்றம் செய்தவரைப் போல் கையாலா காதவராக, கைகளைப் பிசைந்து கொண்டு கண்ணீர் மல்க, தலை குனிந்து நின்றார்.

# ஒப்புக்கு....

சுழலும் பந்துப் பூமியில்
நான்கில் மூன்று தண்ணீர்ப்பங்கு
நான்கில் ஒன்று நிலத்தின் பங்கு
நினைத்திடு அதுபோல் வாழ்க்கைத்தளத்தில்
வலிமை மிக்கதாய் விழிப்புடன் அநீதி
மெலிவு உற்றதாய்க்குற்றுயிராக
வீதியோரம் கிடக்கிறது நீதி.

வீடுகள் எரிந்ததும் கோவில்கள் இடிந்ததும்
வெட்டிய தலைகளைக் காட்சிக்கு வைத்ததும்
கற்பை அழித்ததும் கன்னிமை கெடுத்ததும்
பச்சைக் குழந்தையை நதியில் எறிந்ததும்
உடலைச் சிதைத்து நரம்புகள் உருவி
உயிருடன் சிலுவை மரத்தில் அறைந்ததும்
இனத்தை அழித்ததும் நாட்டைப் பிடித்ததும்
கலிங்கப் பரணியில் கொட்டிய இரத்தமும்
வீதியில் பிணங்கள் வீழ்ந்து கிடந்ததும்
நாலந்த பல்கலைக் கழகம் எரிந்ததும்
சமணரைக் கழுவில் ஏற்றி மகிழ்ந்ததும்
அன்று நடந்த சரித்திரமல்லவா?
இன்று மட்டும் என்னடா புதுமை
மனிதம் செத்ததாய் சலிப்பெதற்கு?

வதையும் கொலையும் முரணும் மோதலும்
முன்பைவிட தொட்டு வளர்வதும்
வதையின் ஏட்டில் பரிணாமந்தான்
மனிதம் வதைபடாச் சரித்திரம் உண்டோ?

பிணங்கள் மிதித்து யுகங்கள் கடந்த
கொலைக்கலா சாரத்தடங்கள்
நிலைத்திட இங்கு காரணம் என்ன?
காரணம் இன்றிக்காரியமில்லை
காரணம் தேட நாதியுமில்லை
காரணம் கண்டோர் பாதியில் வீழ்ந்த
கதைக்கு இங்கே பஞ்சமும் இல்லை.

ஒப்புக்கு மார்பில் அடிக்கும் கூட்டம்
தப்புக் கணக்குப் போட்டதனாலோ
மானும் செத்ததாய் அழுது வடிகிறார்?
மரத்தை அறியா மனிதருக்கா இவர்
இலையைப் பிடுங்கிக் காட்டுகிறார்?

இன்பராஜன்

# வெளியும் உருவமும்

## சிற்பத்தின் மொழி பற்றிய அறிமுகம்

உருவம், வெளி பற்றிய எமது சிந்தனை அடிப்படையில் தத்துவார்த்தமானது. நாங்கள் வெளியில் சஞ்சரிப்பவர்கள். எங்களுடைய உலகம் வெளியாலும், உருவங்களாலும் நிரப்பப் பட்டுள்ளது. எல்லாத் தோற்றப் பாடுகளும், இந்த வெளிக்குள் இருந்து கிளர்ந்து, இந்த வெளிக்குள்ளேயே சென்று முடிகின்றன.

வரலாற்றின் எல்லாக் கணங்களும் இவ்வாறுதான் வெளிக்குள் இருந்து கிளர்ந்து வெளிக்குள்ளேயே சென்று முடிந்தன. இந்த நிரந்தரமற்ற கணங்களை மனிதன் நிரந்தரப்படுத்திக் கொள்ள விரும்பினான். காலங்காலமாக நிரந்தரமின்மையோடு மனிதன் கொண்ட மோதலின் ஒரு பகுதியாகவே கலைகள் உருவாகின.

**பா. அகிலன்**

சிற்பங்கூட வெளி, உருவம் பற்றிய மனிதப் பிரக்ஞையின் விளைவாகவே உருவாகியது. வெளியும், உருவமும் கொள்ளும் ஊடாட்டத்தின் சார்பாகவே சிற்பத்தின் மொழி உருவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பற்றிய எமது உடனடி விளக்கம் மிகக் குறுகலானது.. அது பேச்சு மொழியை மட்டுமே பெரும்பாலும் மொழியாக முடிவெடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால மொழிபற்றிய பிந்திய கால விளக்கம் விரிவானதும், ஆழமானதுங்கூட. நாங்கள் வாய்திறந்து பேசாத கணங்களிலும் பேசுகின்றோம். உடையால், சுமந்துள்ள பொருட்களால், அசைவால், எல்லாவற்றிற்கூடாகவும் பேசுகின்றோம். எம்மைச் சுற்றியுள்ள எல்லாமே பேசுகின்றன. எமக்கும், எம்மைச் சூழவுள்ளவற்றிற்கும் இடையே, இடையறாத உரையாடல் ஒன்று நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

இவ்வாறு எம்மோடு உரையாடும், கருத்தைப் பரிமாற்றும் எல்லாமே மொழிதான். அவைகள் தமக்கான குறியீடுகள் மூலமான மொழிக் களஞ்சியத்தை வைத்துள்ளன.

இந்த அர்த்தத்தில் தான் கலையும் மொழியாகிறது. அதன் மொழி அதன் கலைமுதற் பொருட்களின(Materials) அடியாக எழுவதாகும். இதனால் குறிப்பிட்டவொரு கலையின் இயல்பினை இந்தக் கலை முதற் பொருட்களே அதிகபட்சம் உருவாக்குகின்றன. ஓவியம் வர்ணங்களினாலும், இசை ஒலிகளினாலும் கட்டமைக்கப்பட்டுள்ளது போல.

**திரு.A.V. ஆனந்தனின் சிற்பக் காட்சியின் இறுதிநாளான 28.01.97 அன்று படிக்கப்பட்ட கட்டுரையின் மீள் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம்.**

அடிப்படையில் கலைமுதற் பொருட்களால் உருவாவதும், ஆனால், அதனைக் கடந்தவொரு அனுபவத்தைப் பரிமாற்றுவதுமாகவே கலைகள் இருக்க வேண்டும். இலக்கியம் ‘சொற்களால் சொல்கடந்த அனுபவத்தைத்’ தருவது போல, நடனம் அசைவாலும் அதன் பரிமாணங்களாலும் அதனைக் கடந்தவொரு அனுபவத்தைத் தருவது போலவும் – இருப்பதால் அல்லது இருப்பதை ஊடறுத்துக் கொண்டு, அதனைக் கடந்தவொரு அனுபவத்தை உசுப்பி விடுவனவாகவே கலைகள் இருக்க வேண்டுமென்பார். இந்தக் கட்டத்தில்தான் கால வரம்புகளைக் கடந்து, கலை அனைத்துக் காலத்திற்குமான சாட்சியாகி விடுகிறது. ‘‘கலையென்பது ஒருவகைச் சாட்சி’’ எனத் தன்னுடைய கட்டுரையொன்றில் அனித்தா சங்கரோய் எழுதியிருந்தார்.

சிற்பத்தின் மொழி என்பது பிரதானமாகக் கட்புலனுக்கே உரியதாகும். எனவே அதன் மொழிக்கிடங்கு பார்த்தலுக்கான கூறுகளால் நிரப்பப்பட்டிருக்கிறது.

உருவம் மற்றும் வெளி பற்றிய விளக்கத்தில் வெளிகாரணமாகப் பொருளும், பொருள் காரணமாக வெளியும் அறியப்படுகின்றன என்பார் நிலாந்தன். வெளியின் திரட்சி பொருளாகவும், பொருளின் கரைவு வெளியாகவும் கூடப் பார்க்கப்படலாம். ஆழமான அர்த்தத்தில் ஒருமையில் சார்புடைய இருமைகளே பொருளும், வெளியுமாகும். வெளிக்கு எல்லைகள் இல்லை. பூமி சார்பாகப் பார்த்தால் அதற்கு எல்லைகளுண்டு. அதனால் நீள, அகல, ஆழ அளவுப்பரிமாணங்களிற்கு அது உட்படுகிறது. ஆழமான வெளியில் முப்பரிமாணமுடியை பிண்டம் (Mass) அல்லது திரளுருக் (Volume) காரணமாகவே சிற்ப் அனுபவம் மேற்கிளம்புகிறது. அண்டம், பிண்டம் தொடர்பான ஓரனுபவப்பகிர்வே சிற்பத்தின் அழகியலாகும்.

ஒவ்வொரு திரளுருவும் தனக்கான Shape உடையது . எடுத்த எடுப்பில் Shape, Form ஆகியவற்றை ஒன்றாக நாம்கருதுகின்றோம். Rodolf Arnheim Shape, Form ஆகிய வற்றை நுட்பமாகப் பிரித்தாராய்கிறார். Shape என்பதைப் பொருளின் தூல (Physical) அம்சமாகவும், Form என்பதை Shape மீதான கருத்து நிலையும் உட்கொண்டதாகவும் அவர் எடுத்துக் கூறுவார். அதாவது பொருளொன்றின் Shape ம், கருத்து நிலையும், சேர்ந்தே Form ஆகிறது. இதனாற்தான் ‘‘மக்கள் பொருட்களைப் பார்ப்பதில்லை. பதிலாக படிமங்களையே பார்க்கிறார்கள். (“People see images, not things “) எனச் சொல்ல வேண்டி ஏற்படுகிறது.

இதனால் ஒரு சிற்பத்தின் Shape என்பது பொதுமைப்படுத்தப்பட்டதாகவோ, கூம்பாகவோ, சதுரத் தன்மையுடையதாகவோ இருக்கலாம். ஆனால் அதனுடைய Form என்பது இதுமட்டுமல்ல. பண்பாடு, காலம், தனிமனித வாழ்வனுபவங்கள் சம்பந்தப்பட்ட அதன் மீதான நுகர்வோரின் கருத்து நிலையும் சார்ந்ததாகும்.

இதனால்தான் ஒரே பொருள் நுகர்வோருக்கு நுகர்வோர் மாறுபட்டதாகிறது. இதுவே ரசனையைக் கூடப் பிரத்தியேகமானதாக்குகிறது.

ஒவ்வொரு Shape க்கும் அதற்கேயான அளவு (Size), நிலை (Posture), கோடு (Line), மேற்பரப்புத்தன்மை, (Texture), வர்ணம் (Colour), தொனி (Tone), லயம் (Rhythm) ஆகியவையுண்டு. இவை கலைமுதற் பொருட்களால் ஆனதும், அதனை வெளிப்படுத்திய திறன், படைப்பாக்க வல்லமை காரணமாகவும் உருவாகியதாகும்.

இந்தியக்கிராமங்களில் இருக்கும் எல்லைப்புறக் கடவுளர்கள் முறுக்கு மீசை, தொப்பை வயிறு, கத்திகளோடு பிரமாண்டத்தின் பிரதிநிதிகளாக அமர்ந்திருக்கிறார்கள். பரீசிலுள்ள ஈபில் கோபுரங்கூட இந்தப் பிரமாண்டத்தின் சார்பானதாகவே இருக்கிறது. இந்த அளவிற் பெரிய சிற்பங்கள் உருவாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். 'ஓரவுணர்விற்கும்' அளவிற் சிறிய சிற்பங்கள் உருவாக்கிவிடும் 'ஓரவுணர்விற்கும்' இடையில் வித்தியாசங்கள் உண்டு.

இந்த அளவென்பது நேரடியாக வெளியோடு சம்பந்தமுடையது. பெரும் வெளிக்குள் இருக்கும், பிர மாண்டமான சிற்பங்கள் கூட வெளியால் விழுங் கப்பட்டு, சிறுத்துப் போவதும் சிறிய வெளிக்குள் இருக்கும் சிற்பங்கள் தூக் கலாக அளவிற் பெரிதானதுப் போலத் தெரிவதும் வெளியால் உருவ அளவு தீர்மானிக்கப்படுவதையே காட்டுகிறது.

ஒவ்வொரு உருவமும், தனக்கான நிலைகளால் (Posture) ஆனது. அந்த நிலைகள், அதனிருப்புநிலை, செயல் நிலை ஆகியவற்றோடு சம்பந்த முடையதாகும். உண்மையில் ஒவ்வொரு நிலையும், ஒவ்வொரு மனநிலைகளால் ஆனது.

கோடுகள் அசைவு சம்பந்தப் பட்டனவாகும். எனவே அவற்றிற்கு இயங்கு வலு (Dynamic Force) உண்டு. கண்ணுக்கு உடனடியாகப் புலப்படும் கோடுகள் தொடக்கம் புலப்படாது உள்ளியங்கும் கோடுகள் வரை சிற்பத்திற் செயற்படுகின்றன. அவை சிற்பத்தின் மேற்பரப்பை உரு வாக்குவதிலும் முக்கிய இடம் பெறுகிறது.

சிலவேளை கோட்டோவியங்கள் போல, கோட்டுச் சிற்பங்களைக் கூடக் காணமுடிகிறது. கம்பிகள், வயர்கள் ஆகியவற்றால் செய்யப்படுகின்ற சிற்பங்களில் இந்த இயல்பு தூக்கலாகத் தெரிகிறது.

மேற்பரப்பாக்கமென்பது அடிப் படையில் இரண்டு முறைகளில் உருவாகலாம்.

A. கலை முதற் பொருட்கள் சார்ந்து – கல் – மாபிள் அல்லது கருங்கல் – உலோகம்.

B. செதுக்கு முறை அல்லது வார்ப்பு முறை சார்ந்தது.

ஒரு கலை முதற் பொருளை, இன் னொரு கலை முதற்பொருள் போலத் தோன்றச் செய்யும் நுட்பமும், சிற்ப மொழி ஆக்கத்திற் காணப்படுகிறது. மரமொன்றை செதுக்கு நுட்பத்தால் களிமண் போல ஆக்குதல் இந்த வகைப்பட்டதாகும். இதை மறைமுக ஊடக மாற்றம் என பெயரிடலாம். விரும்பியதை நோக்கிப் பாய்தலாக இந்த நடைமுறை இருக்கிறது. இந்த மறைமுக ஊடக மாற்றத்தினை வர்ணப் பிரயோகத்தினாலும் சாதிக்கலாம். ஒரு மரத்தாலான சிற்பத்திற்கு வெண்ணி றத்தைப் பூசுவதன் மூலம் மரத்தை மறைத்து மாபிளை (Marble effect) உருவாக்கலாம்.

எனவே சிற்பத்தில் வர்ணப் பிர யோகம் என்பது கலைமுதற் பொரு ளின் நேர்வர்ணமாக அல்லது தெரிந்து பிரயோகிக்கப்படும் நேரில் வர்ண மாகவோ இருக்கலாம். வர்ணம் பற்றிய முடிவென்பது நிறத்தைக் கையாளும் நுட்பம் சார்ந்ததாக இருக்கிறது. எங்களுடைய பண்பாட்டில் வாகனமரபுச் சிற்பங்களில் பல வர்ணப் பிரயோகத்தின் அழகியலைக் காணலாம்.

இந்த வர்ணப் பிரயோகமென்பது சிற்பத்தைச் சூழ்ந்த வெளியின் வர்ணத் தோடும் இடைத்தாக்கம் புரிவதன் வாயிலாக எழுவதாகும். சிலவேளை நேரத்திற்கு நேரம் புறவெளியின் வர்ணங்கள் மாறும். மாறுந்தோறும் மாறும் உணர்வுகளின் வெவ்வேறு உணர்ச்சிகள் மேற்கிளம்பும்.

ஒவ்வொரு பொருளுக்குள்ளும் உள்ளியங்கும் ஒரு அலை நீளமுண்டு. அது, அந்தப் பொருளின் அளவு, பருப்பம், வர்ணம் ஆகியவற்றோடு தொடர்புடையது. தொனி என்பது இவற்றின் சார்பாக வருவதுதான். பார்க்கப்படுகின்ற தொனியும், லயமும் சிற்பத்தையொரு "உறைந்த இசை" ஆக்கிவிடும். இந்தத் தொனியும், லயமும் சிற்பத்தின் உள்ளியக்கம் சார்பானது மாத்திரமின்றி, அதனைச் சூழ்ந்த வெளியின் சார்பானதுமாகும்.

சிற்பமொரு உறைவுப் பொருளே ஆயினும் படைப்பாக்கத்திறனுடைய சிற்பியிடம் அது தன் உறையை பிளந்து கொண்டு உயிர்பெற்று அசையும். அதனை சோழர்கால நடராஜர் சிற்பங் களில், தனபாலின் அவ்வையார் சிற்பத்திலெல்லாம் காணலாம்.

சிற்பத்தின் விழிநிலைத் தொடர் பாடலுக்கு அப்பால் அது ஸ்பரிச நிலைத் தொடர்பாடலையும் உடையதென்பது அதன் மொழியமைப்பில் முக்கிய மானதாகும். மாபிளை, கருங்கல்லை, பஞ்சவுலோக சிற்பங்களைத் தீண்டும் போது ஏற்படும் உணர்வு பரிமாணங்கள் வேறு வேறானவை. மேலும் ஒரு பொருளைத் தீண்டுகிறோம் என்பது அதன் மேற்பரப்பை மட்டும் தீண்டு வதல்ல. அதன் Shape பிற் தீண்டு தலாகும். இதேவேலை தீண்டுதல் என்பதில் சிற்பத்தின் தேகநிலை எங்களின் தேகநிலையோடு தொடர் பாடுகிறது. உச்சமான உணர்வில் எமது தேகத்தின் பகுதியாக சிற்பம் ஒன்று பட்டுவிடுவதுமுண்டு.

சிற்பத்தின் முப்பரிமாணமென்பது அதனை எல்லாத் திக்குகளிலிருந்தும் பார்ப்பதற்கான வாய்ப்புக்களைக் கொடுக்கும். பார்க்கப்படும் கோணங் களின் எண்ணிக்கையால், ஒரு சிற்பம் பல சிற்பங்களாக விரிவடைவதும், ஒன்றை அதன் முழுமையில் புரிந்து கொள்வதற்கான வாயில்களைத் திறந்து விடுவதாகவும் அது இருக்கிறது.

கென்றி மூரின் சிற்பங்களில் வெளி உருவத்தைச் சூழ்ந்து மட்டும் நிற்ப தில்லை. பதிலாக உருவகங்களின் உள்ளேயும் புகுந்து வெளியேறும்.

சில சமயம் சிற்பத்தின் பின்புல வெளியை, அதன் வடிவத்தை சிற்பிகளே தீர்மானிக்க விளையுமொரு முயற்சியின் சார்பாகவே திருவாசிகள் போன்ற தமிழ்பண்பாட்டுச் சிற்பப் பகுதிகள் உருவாகின.

இதே சமயம் சிற்பத்தின் புற வெளிக்கு ஒரு சட்டகம்இடப்பட்டாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சட்டகத்துக்கு வெளியே இயல்பாக உள்ள வெளியும் நிற்கும். இந்த இரட்டைவெளி சார்ந்ததாக அப்போது சிற்ப அழகியல் உருவாகும்.

சிற்பங்கள் உருவாக்க முறமையினால், சிற்பப் பரிமாணத்தைக் கடந்து கட்டடப் பரிமாணத்தைப் பெறுவதுண்டு. தாதுகோபங்கள் இத்தகைய கட்டடத்தன்மையான சிற்பங்களே. இதேபோல சிற்பங்கள் கிட்டிய ஓவியத் தன்மையைப் பெறுதலுமுண்டு. புடைப்புச் சிற்பங்கள் ஒருவகையில் ஓவியத் திற்கும், சிற்பத்திற்குமான இடைமாறுகால கட்டடத்தன்மையுடைய ஓவியத்தனமான சிற்பங்களாகும் எனலாம்.

**வாழ்த்துக்கள் நூறு....**

சபாஷ்! இது இறைவன் அவருக்கு கொடுத்த கொடை.

– டி.ஜி.அல்பிறட், றெட்பானா, யாழ்.

ஆனந்தன் அவர்களின் சிற்பப்படைப்புக்களை நான் மிகவும் நுணுக்கமாகப் பார்த்தேன். மிகவும் அற்புதம் . எல்லாக் கலைஞர்களும் இதைப் பார்வையிட வேண்டும். மாணவ மாணவியருக்கு இது ஒரு கலைப் பொக்கிஷம்.

– க. பரமலிங்கம், பிரதம ஜெயிலர், யாழ்.

ஈழத்து மைக்கல் ஆஞ்சலோவாகப் புகழ் பெற்று நிற்கும் ஏ.வி.ஆனந்தன் அவர்களை வாழ்த்துகிறேன். கலைஞனின் கருத்தாழம் மிக்க படைப்புக்களை உளமாரப் பாராட்டுகிறேன்.

– துரை ஆரோக்கிய தாசன் அதிபர்.ஆசிரியப்பயிற்சிகலாசாலை, பலாலி

நீண்டகால இடைவெளியின் பின் நாம் கண்ட கண்காட்சி! அதுவும் யாழ் நகரில் பார்த்தமுதலாவது சிற்பக் கண்காட்சி. கலைஞரின் திறமையைப் பாராட்டுகிறோம்.

சென்யேம்ஸ்,
மகளிர் கல்லூரி ஆசிரியர்கள், யாழ்

இவ்வளவு சிற்பங்களையும் படைக்க கலைஞர் பொறுமையுடன் செலவு செய்த பொன்னான நேரத்திற்குரிய சன்மானம் கிடைக்க வேண்டும்

– கலாநிதி சற்குணராசா
யாழ். பல்கலைக்கழகம்

ஆனந்தனின் கைவண்ணங்களைப் பார்த்தேன், சுவைத்தேன், பாகாய் உருகுகின்றேன், படைப்புப் பார்த்து.

– அருட்தந்தை மொன்பேட்,
ஆயர் இல்லம், யாழ்.

உயிர்ப்பற்ற பொருள்களிலும் உயிரை ஊட்டிவிடும் திறமை உண்மைக் கலைஞனிடம் உண்டு என்பதைக் கண்டோம். கண்களால் காண்பவை களை விடக் காணாதவைகளையும் கற்பனைக்கு அப்பாலும் சென்று படைத்துள்ளதைப் பாராட்டுகின் றோம்.

– மருத்துவப்பீட மாணவர்கள்,
பல்கலைக்கழகம், யாழ்.

கண்களால் பார்த்தேன் நெஞ்சோடு எடுத்துச் செல்கின்றேன். உளிவெட்டுக் களெல்லாம் வெறும் வெட்டுக்களல்ல கலைக் கருத்தோடிய வெட்டுக்கள்.

– சு.மருசுலின்
பிரதி அதிபர், சென். சாள்ஸ் ம.வி.யாழ்

இதற்கீடாகச் சொல்வதற்கு இங்கொன்றுமில்லை. போர் நடந்து கொண்டிருக்கும் மண்ணில் இப்படியும் ஓர் கலைக் கண்காட்சியா! கலைஞனா!

– கார்த்திகா, மானிப்பாய்.

யாரப்பா இந்த ஆனந்தன்! இவ்வளவு நாட்களாக எங்கேயிருந்தார்? தனி மனிதனால் எப்படி இச்சாதனையை செய்ய முடிந்தது. மக்களை வியப்பில் ஆழ்த்திவிட்டார்.

– விக்ரர் பூபாலன், ஈச்சமோட்டை.

இதுவரை நாம் கண்டிராத கண்காட்சி. எவ்வளவு பொறுமை, தன்னம்பிக்கை, அடக்கம், எளிமை, முயற்சி, பணிவு, துணிவு. நேரில் சந்தித்து பேசியதில் இவைகளைக் கண்டு பெருமையடைகிறேன்.

– கலைச்செல்வி, ஆசிரியை,
பருத்திதுறை.

சிலைகள் என்னுடன் கதை பேசின. சில மௌனமாய் நின்று மெய்யுணர்த்துகின்றன. ஏழு ஸ்வரங்களில் எழும் இராகங்கள், சமாதானப்புறா, வயோதிபரின் வாழ்வுக் கோலம், இடம்மாறிய உறுப்புக்கள் முதலியன என்னைக் கவர்ந்தன.

- ஸ்ரீதயாளன்
ஆசிரியர் யாழ்.கல்வித்திணைக்களம்.

கலைஞனின் ஆழ்ந்த நுணுக்கமான கருத்துக்களைக் கொண்டிருக்கும் சிற்பங்கள் அனைத்தும் மிகப் பிரமாத மானவையாகும். நல்வரவு பகரும் நங்கை, இடம்மாறிய உறுப்புக்கள், பெண்ணின் இரு பக்கங்கள், கலைஞர் குழு, ஏசுபிரானின் பிறப்புக் குடில் போன்றன என் மனதைத் தொட்டு நின்றன.

– சந்திரசேகர சர்மா,
யாழ். தேர்தல் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூல்:

"நாடகமணி வி.வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்"

ஆக்கியோன்:

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

இந்நூல் இரண்டு விடயங்களை எமக்கு எடுத்து விளக்கு கின்றது. ஒன்று நடிகமணி வி.வி. வைரமுத்துவின் வாழ்க்கை; மற்றையது அவரோடிணைந்த இசை நாடக அரங்கு. இவற்றை ஒத்த இரண்டு நூல்களை வாசகர்கள் ஏற்கனவே படித்தி ருக்கக் கூடும். ஒன்று கலையரசு சொர்ணலிங்கம் பற்றியது. மற்றையது பூந்தான் யோசேப் பற்றியது. ஆனால் நிச்சயமாக இந்நூல் ஒரு தனி மனித வாழ்வின் விபரங்களை மட்டும் தராமல், அந்தக் கலைஞனோடு இணைத்து ஒரு அரங்கியல் ஆய்வினையும் தருகின்றது. இது இன்றைய காலத்தின் தேவையும்கூட. அந்த வகையில் காரையின் எழுத்து, சாதாரண கலைஞர்களுடனும், ஆர்வலர்களுடனும், நாடக வியலாளருடனும், அரங்கியல் ஆய்வாளர்களுடனும், அரங்கி யல் மாணவர்களுடனும் ஏதோ ஒருவகையில் பேசுகிறது. ஒரு எழுத்தாளரும், கவிஞரும், நாடக ஆசிரியரும், கலை ஞரும், சாஸ்திர சங்கீத வடமொழிப் புலமையும் கொண்ட ஒருவரால் மட்டுமே இந்த முறையில் இந்நூலை ஆக்க முடியும் என்பது இங்கு நிரூபணமாகியிருக்கின்றது.

**வைரமுத்து** என்ற ஒரு தனிமனித கலைஞனின் ஆற்றலும், தனித்துவமும் இசை நாடக அரங்கை மக்கள் வயமாக்கு கின்றன; நவீனப்படுத்துகின்றன; செழுமை பெறவைக் கின்றன; புதுப்பரிமாணத்திற்கு மாற்றுகின்றன; ''பாடலே அரங்காய்'' என்று படித்தவர்களைக் கூறவைக்கின்றன; என்பதனையெல்லாம் இந்நூலைப் படிப்பதன்மூலம் நாம் அறிய வருகின்றோம். அத்துடன் இன்னொன்று, அதாவது ஒரு கலைஞன் பிறக்கிறானேயொழிய, அவனை பாடசாலையோ, பல்கலைக் கழகமோ எளிதில் உருவாக்கிவிட முடியாது என்பதையும்; ஆனால் புத்திஜீவிகளும், அத்துறைசார் விற்பன்னர்களும் அவனை இனம் கண்டு, ஊக்குவித்து ஆதரவு நல்கும் போது அவன் புதியன படைத்து சாதனை புரிவான் என்பதையும் நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் அழகுற வெளிப்படுத்துகின்றது.

தொடக்கம் தொட்டு முடிவு வரை ஒரு நாவலுக்குரிய சுவை இழையோடுகின்றது. இயல் 12 இல் இருந்து இயல் 21வரை இசை நாடக அரங்குக்குள் நுழைந்து வெளிவரு கின்றோம்; ஆனால் அங்கே ஒரு தேடல் நடந்திருக்கிறது. ஒரு சிலருக்கு அது முற்றுப்பெறாத ஒன்றாகக் கூட இருக்க லாம். இருப்பினும் அவருடைய முயற்சி பலனுள்ளது; பாராட்டப்பட வேண்டிய பெரும் முயற்சியேதான். நாடக அரங்கியல் கற்கை நெறிக்கு நல்லதொரு உசாத்துணை நூல். ஐயா! எதையும் பேசலாம் ஆனால் அரசியல் பேசும் பொழுது சற்று அவதானம் வேண்டும் என்பார்களே...! இங்கே நூலின் 63ம் பக்கத்தில் மூன்றாவது பந்தியின் முதலாவது வசனத்தைப் பார்க்கும் பொழுது ......? ஆசிரியரின் துணிவை.....!

''அரங்கக் கூத்தன்''

நூல்:

**Jaffna : The Land of the Lute**

யாழ் நாடு

எழுதியவர்: நீ. மரியசேவியர்

வெளியீடு: திருமறைக் கலாமன்றம்

ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல், கனடாவில் ரொறன்றோ மாநகரத்தில் 1996ம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளது. இந்நூல் எழுதப்பட்டிருக்கும் முறையிலும், ஆசிரியரின் முன்னுரையிலும் இருந்து முழுக்க முழுக்க வெளிநாட்டவரின் தகவல்களுக்காகவும், அவர்களில் சிலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளுக்காகவுமே எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் இந்த யாழ் மண்ணில் எத்தனை பேருக்கு இத்தகவல்கள் தெரிந்திருக்கும் என்பது இதனைப் படிக்கும்பொழுது அடிக்கடி நம்மனதில் எழும் என்பது நிச்சயம். எத்தனையோ நூல்களைப் புரட்டி, எத்தனையோ பழைய ஏடுகளைக் கிளறி நாம் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை ஆசிரியர் ஒரே பார்வையில் நமக்கு தந்து விடுகின்றார். நிச்சயமாக இது ஒவ்வொரு யாழ்ப்பாணத் தமிழனுக்கும் தெரிந்திருக்கவேண்டிய விடயம். தெரியாவிட்டால் நிச்சய மாக இந்நூலைப் படித்துத்தான் ஆகவேண்டும். படிக்கும் பொழுது வியப்பு வரும்; திகைப்பு வரும்; சிரிப்பும் வரும்; சிந்திக்கவும் வரும். எமது ப்ழைமைகள்; திறமைகள்; வழமைகள்; சிறுமைகள்; ஏன் மடமைகள் கூட எமக்குத் தெரியவரும். முற்றிலும் உண்மைத் தகவல்கள் தான் தர்க்கமோ, விளக்கமோ; விமர்சனமோ; கிடையாது; இதுதான் இந்நூலில் உள்ள சிறப்பும் கூட. ஆங்கிலத்தில் எழுதப்பட்டி ருந்தாலும் மிகவும் எளிய இலகுவான நடையில், எவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. ஆனால் பதின்மூன்று கட்டுரைகளை தாங்கி வருவதால்; அதிஸ்டமற்ற எண் என்பதாலோ என்னவோ பதின்கான்கா வது கட்டுரையாக ''இன்றைய யாழ்நாடு'' என்ற கட்டுரை யொன்று தேவைப்படுவதாக தோன்றுகின்றது. இன்று தாழ்த்தப்பட்டவர் எனப்படுவோருக்கு கோயில்கள் உண்டு, அங்கே பிராமணப் பூசாரிகள் பூஜை செய்கிறார்கள். தேனீர்க் கடைகளும் உண்டு. அங்கே உயர்ந்த சாதியினர் எனப்படு வோர் ஊழியராகவும் நிற்கிறார்கள். இன்னும்.... இன்னும்.... ஏனென்றால் காலமாற்றத்தில் நாமும் இணைந்து கொள்கிறோம் என்பதைக் காட்டலாம் அல்லவா?


நாடகம்:

*சத்ய வெமி -''சத்தியமே வெல்லும்''*

(யேசுவின் திருப்பாடுகளின் காட்சி)

30 - 03- 97 உயிர்த்த ஞாயிறு அன்று ஜா - எல கப்புவத்தை கள எளிய கிராமத்தின் வலய பங்குத்தந்தை அருட்திரு. ஸ்ரனிஸ்லோஸ் பெரேரா அவர்களின் கடின உழைப்பின் தலைமையில் திரு. W. ஆதர் சோவிஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் உருவானதே ''சத்திய வெமி'' என்னும் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட யேசுவின் திருப்பாடு களைக் கொண்ட நாடகம்.

இந்நாடகம் 90க்கு மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு மூன்றுமாத ஒத்திகையின் மூலம் களஎலிய புனித சேவியர் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமான மேடை அமைத்து பலரது மனித உழைப்பைக் கொண்டு உருவானது.




வித்தியாசமான அரங்கு. நாடகத்திற்காக அமைக்கப்பட்ட மேடையின் வடிவம்

மேடை நில மட்டத்தில் இருந்து 8 அடி உயரம்

பார்வையாளர் பகுதி

A - காட்சிகள் நடைபெறும் இடம் [ Acting Area ]

B - பத்துக்கட்டளை கொடுபடும் சீனாய் மலை

C - யூதாஸ் இறக்கும் இடம்

பிரமாண்டமான மேடையினை அமைத்தவர்கள் நடு மேடைப்பகுதியை (A) காட்சிப் பொருட்களுடன் கூடிய நடிப்புப் பகுதியாக (Acting Area) மட்டும் பயன்படுத்தினர். மற்றும் B,C யிலும் ஒவ்வொருகாட்சிகளே இடம் பெற்றன. ஒரு காட்சி முடிந்து மறுகாட்சிக்கு மேடைக்கு வரவேண்டிய நடிகன் D என்னும் பாதை வழியே சென்று மேடையை அடைவார். ஏராளமான செலவு செய்து அமைத்த அவ்விடம் வெறும் பாதையாகவே பயன்படுத்தப்பட்டது.

மாலை 6.30 என அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி சில தடை களால் இரவு 8 மணிக்கே அருட்தந்தை ஸ்ரனிஸ் ஸோஸ் பெரேரா அவர்களின் ஆசி உரையுடன் ஆரம்பமானது. அவர் தமது உரையில் எமது கிராம மக்களின் முயற்சியால் ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து ஏராளமான மனித உழைப்பினை உறிஞ்சி எடுத்தே காட்சி உருவாக்கி யிருப்பதாகத் தெரிவித்தார். திருப்பாடுகளின் காட்சியின் நாடகக் குழுத்தலைவராக திரு. பீலிக்ஸ் பீரிஸ் கடமை யாற்றினார். இந்நிகழ்ச்சி முன்னர் பல வருடங்களாக ஐந்து தடவைக்குமேல் மேடையேற்றப்பட்டுள்ளது.

நாடக ஆரம்பம் மோட்சத்தில் இருந்து தொடங்குகிறது. ஆண்டவனைப்போல் ஆகவேண்டும் என்று பேராசைப்பட்ட தேவதூதன் அவரால் சபிக்கப்பட்டு நரகத்தில் விழுவதில் இருந்து தொடங்கி, ஆதாம், ஏவாளை அச்சாத்தான் ஏமாற்றி விலக்கப்பட்ட கனியை உண்ணக்கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை உண்ட ஏவாளும் ஆதாமும் இறைவனின் தண்டனைக்கு உள்ளாகி தோட்டத்தை விட்டு வெளியேறுகின்றனர். அதன் பின் காயீன் செய்யும் ஆபேலின் முதற்கொலை, அதனைத் தொடர்ந்து ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட நிற்கும் காட்சி இவை இரண்டும் அசையாத (Still) காட்சியாக காண்பிக்கப்பட்டன. பின் மேசேஸ் பத்துக்கட்டளை பெறுதல் அதன்பின் புதிய ஏற்பாட்டின் காலத்துக்கு வரும், காலமாற்றத்தினை உரைஞர் ஒருவரின் கவி மூலம் வெளிப்படுத்தும் வேளை இசையாஸ் தீர்க்கதரிசியையும் காண்பித்தது அர்த்தமுடையதாக இருந்தது.

12 வயது யேசு – வேதபாரகர் சம்பாஷணையுடன் புதிய வரலாறு தொடங்குகிறது. சிறுவன் யேசு, தச்சு வேலை செய்து கொண்டிருக்கும் காலத்தில் வளர்வதைக் காட்சி மாற்றம் மூலம் காண்பித்தனர். தானே ஒரு சிலுவையினைச் செய்து உலகின் பாவங்களுக்காக தான் பட இருக்கும் துன்பங்களை நினைவுகூரும் விதத்தில் இக்காட்சியை அமைத்திருந்தனர். அதன் பின் புதுமைகள், மலைப்பொழிவு இவ்விதமாக வளர்ந்து செல்கிறது.

ஒரு காட்சி முடிந்து மறுகாட்சிக்கு மேடை ஆயத்தம் செய்து திறக்க எப்படியும் 5, 6 நிமிடங்களாகியது. மேடையில் B,C யில் முறையே ஒவ்வொரு காட்சியும், மிகுதி அனைத்துக் காட்சிகளையும் A பகுதியிலேயே காண்பித்தனர். இதன் காரணமாக 8 மணிக்கு ஆரம்பித்த நாடகம் அதிகாலை 1.30 க்கே நிறைவுற்றது.

இப்பெரிய மேடையினை வேறு விதத்தில் அமைத்து இடையீடு இன்றி சங்கிலித் தொடராகக் காண்பித்து இருந்தால் 21/2 மணி நேரத்தில் முடிந்திருக்கும். ஏராளமான வர்ண விளக்குகள் வைத்திருந்த போதிலும் பெரும்பாலான பகுதியினை வெள்ளை ஒளியூட்டியே காண்பித்தமை ஒரு பாராட்டப்பட வேண்டிய விடயம். சில காட்சிகள் பார்வையாளனை நாடகத்தோடு ஒன்றிக்கும் தன்மையில் இருந்து சிந்தனையைத் திசை திருப்பி சிரிப்புக்கிடமாக்கியிருந்தன.

யூதாஸ், முப்பது வெள்ளியை வீசி எறிந்துவிட்டு தற்கொலை செய்து கொள்ள Aயில் இருந்து D பாதையால் C யை நோக்கி ஓலமிட்ட வண்ணம் ஓடுகிறான். அதே போன்று சாத்தானும் மறுகரையில் இருந்து கூக்குரல் இட்டுக் கொண்டு யூதாஸைத் தேடி ஓடி அவன் தொங்கும் தூக்குக்கயிற்றில் ஏறிப்பாய்ந்து அவனை அணைத்துக் கொண்டு கீழே எரியும் நெருப்பில் விழுவதாகக் காண்பித்தனர். உண்மையாகவே நெருப்பை மூட்டி எரித்துக் கொண்டிருந்தனர்.

இன்னும் ஏரோதன் இறக்கும் வேளை மேடையில் இருந்து பார்வையாளர் பக்கம் 80 மீற்றர் தூரத்தில் ஒரு தென்னை மரத்தில் இருந்து மேடையை நோக்கி கம்பி ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் சீறுவாணம் ஒன்று நெருப்புப் பிளம்பாக மேடையின் Dபாதையை நோக்கிச் சென்று ஏரோது நின்ற இடத்தில் பயங்கரச் சத்தத்துடன் வெடித்த வேளை மேடையைச் சூழ புகை மண்டலம். மக்கள் அதிர்ந்து போனார்கள். இன்னும் சீனாய்மலையில் இறைவன் பத்துக்கட்டளை கொடுப்பதை நெருப்புப் பிளம்பாக எழுவது போன்று Dயில் வாண விளையாட்டின் மூலம் காண்பித்தனர். பக்திரசனையோடு நடக்க வேண்டிய நிகழ்ச்சியினை களியாட்டு விழா போன்று ஆக்கி விட்டார்கள்.

ஆயினும் சில காட்சிகள் மனதைத் தொடும் படியாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மனித உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. யேசுவை போர் வீரர் கைது செய்ய முனையும் போது சீடர் சூழ நின்று தடுத்தல் யேசுவுக்கு மரணத்தீர்ப்புக் கொடுத்து அவர் சிலுவை சுமந்து போவதை அறிந்த அருளப்பர் மாதாவிடம் ஓடிச் சென்று ''யேசுவுக்கு மரண தண்டனை சிலுவை சுமத்திக் கொண்டு செல்கிறார்கள், வாருங்கள், உடனே போனால் தான் அவரைக் காணலாம் எனக்கூற இதைக் கேட்ட மாதா அதிர்ச்சியடைந்து வீழ்ந்தார், பின் எழுந்து அவர் சென்ற பாதைக்கு வரும்போது நிலத்தில் இரத்தச் சுவடுகள் இருப்பதைக் கண்டு அப்படியே அள்ளி '' ஐயோ! இது என் மகனின் இரத்தம்'' என்று கதறி அழும்போது தாயின் பாசம் வெளிப்பட்டது. அவர் சிலுவை சுமந்து போகும் வேளை அவரை அணைத்து அழுவதும் அவர் சிலுவையில் இருந்து ''தாகமாயிருக்கிறேன்'' என்ற வேளை தண்ணீருக்கு ஓடித்திரிந்து கிடைக்காது கவலையடைவதும் இன்னும் யேசு உயிர்துறக்கும் போது சோகத்தின் உச்சிக்கே போய் துன்பம் தாங்காது அதிர்ச்சியுற்று வீழ்வதும் பாசம்மிகு அன்னையின் உணர்வுகளைக் காட்டின. மாதாவாக நடித்த நங்கைக்கு பாராட்டுக்கள்.

கைப்பாசாக நடித்தவர் அருமையாக நடித்தார். அவரின் தோற்றம், அங்க அசைவுகள், அற்புதமான குரல்வளம், அவர் மேடையினைக் கையாண்ட விதம் என்பனவற்றில் ஓர் பண்பட்ட நடிகனின் வெளிப்பாடு தெரிந்தது. யேசுவாக நடித்தவர் நன்றாக நடித்தார். குரலில் தேவையற்ற அனுங்கல் இருந்தது. அதைத் தவிர்த்து இருக்கலாம்.

லாசறு துணிகளால் சுற்றப்பட்டு உயிர்க்கும் காட்சி யேசு உயிர்க்கும் காட்சியும் நன்றாக இருந்தன. கைப்பாசின் போர்வீரர் யார், பிலாத்துவின் போர்வீரர் யார் என்ற வித்தியாசம் தெரியவில்லை. யேசுவைக் கற்றூணில் கட்டி அடிக்கும் வேளையிலும் சிலுவை சுமந்து செல்லும் வேளையிலும் போர் வீரர் யேசுவை அளவுக்கு மீறி நையப்புடைத்தனர். பெருந்தொகையானோர் போர் வீரராக நடித்தனர். நடிகர்கள் எந்தப் பக்கத்தால் போவது வருவது என்று தடுமாறியதில் இருந்தும், காட்சி தொடங்கும் இடம் தெரியாது வெளிச்சம் போட்டு மாற்றுவதிலும் இருந்து மேடை வெளிச்சத்துடன் கூடிய ஒத்திகை பார்க்கப்படவில்லை என்பது புலனாகிறது.

ஏராளமான பணச் செலவு, பொருட் செலவு, அதைவிடப் பலரின் மனித உழைப்பைக் கொண்டு உருவாக்கிய நிகழ்ச்சியினை சில மாறுதல்களைப் புகுத்தி மேடையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரக் காட்சிகள் வைக்கக்கூடிய விதத்தில் அமைத்து தடையின்றி காட்சிகளை நகரப்பண்ணி, நெருப்புடன் கூடிய வாண வேடிக்கைகளைத் தவிர்த்து இசையிலும் ஆடையிலும் கூடிய கவனம் செலுத்தி நேரத்தையும் குறைத்து செய்திருந்தால் நாடகம் மேலும் நன்றாக இருந்திருக்கும்.

இருப்பினும் பல கலைஞர்களை ஒன்றிணைத்து இப்பிரமாண்டமான நிகழ்வினை மேடையேற்றிய அருட்தந்தை. ஸ்ரனிஸ் ஸோஸ் பெரெரா, திரு.பீலிக்ஸ் பீரிஸ், நெறியாளர் திரு. W.ஆதர் சோவிஸ் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

**G.P.பேர்மினஸ்**

## சிற்பம்

"கனம், செறிவு சிற்பக்கலையில் தலைமைக் கூறுகளாகும். கோட்டாலும் வடிவத்தாலும் அமையப்பெறுகின்ற சித்திரத்தில் நீளம், உயரம் என்னும் இரு பரிமாணங்களே உள்ளன. இதில் நிழல்காட்டி, உருவங்களின் பருமனையும் காட்டி நிற்பர். இது ஒருவிதத் தோற்ற மயக்கமேயாகும். ஆனால் சிற்ப வடிவங்களின் கனமும் அது கொண்டு நிற்கிற பரப்பும் உண்மை நிலையில் உள்ளனவாகும். சிற்பத்தைச் சுற்றி வந்து நோக்க இயலும். நீளம் உயரம் தவிர அகலத்தையும் கொண்ட முப்பரிமாண நிலையைச் சிற்பம் பெறக் கனம், செறிவு என்னும் தன்மைகளே காரணங்களாகும். குவிந்தும், குழிந்தும், உள்ள நிலைகளும் சூனிய இடைவெளிகளும் சிற்பத்தின் வடிவாக்க நிலைகளாகும். மனித உடல், வடிவத்தில் முப்பரிமாணத்தைக் கொண்டு, முழைவு, குழிவு, சூனிய இடைவெளிகள் கொண்ட சிற்ப வடிவினதாகும். படுக்கையான மேடைத் தரையையும், செங்குத்தான காட்சியமைப்பையும், விளக்குகளால் ஒளியாக்கம் செய்யப்பட்ட தளத்தையும் நடிகனின் சிற்பத்தன்மை பொருந்திய உடல் நிலைக்கேற்பப் பொருந்திக் காட்டுவதே மேடை அமைப்புக் கலையில் இந்த நூற்றாண்டின் முருகியல் சிக்கலாக அமைந்துள்ளதைக் காணலாம். மேலும் இழைத்தன்மை என்பதைச் சிற்பத்தில் கண்ணால் மட்டுமன்றிக் கையாலும் தடவிப் பார்த்து உணர இயலும்."

– சே. இராமானுஜம்

**வாழ்த்துக்கள் நூறு....**

*மைக்கல் ஆஞ்சலோவின் மறுபிறப்பே, திருமறைக் கலாமன்றத்தின் விந்தைக் கலைஞனே உங்கள் படைப்புக்கள் உன்னதமானவை; தெய்வீகமானவை.*

*– ஆர்.எஸ்.பேரின்பநாயகம் யாழ்*

*ஏ.வி.ஆனந்தனின் சிற்பக் கலைத்திறமையைக் கண்டு மெய்மறந்தேன்.*

*– மு.சந்திரகுமார், பா.ம.உறுப்பினர், திருமலை.*

# இனி என் மூளையும் இதயமும் கற்பழிக்கப்படும்

நசுங்கிக் கிடக்கும்
இருதயத்தின்
கடைசித் துளி
இடைவெளிகள்
அதிகரிப்பை ஏற்படுத்த
அநாதையாய்
அலைந்து
நாசிக்குள்
போராடுகிறது
சுவாசம்

கடல்
இருட்டில்
செத்து போகின்றது
என் இரவு
பகல்களின்
உப்புக் காய்தல்களில்
வெளிறிப் போகிறது
வியர்வை
நிர்வாணப் பேயுக்கு
கோவணமும்
காலும்.

அவசரமாய்
அதிக
தடவல்களுடன்
உருண்டு விடுகிறது
இரவு விழுங்கும்
பகல்
செப்புக்கம்பிக்குள்
ஓடுகிறது
நிர்வாண மின்சாரம்

எதுவுமே
இல்லை
யாருக்கும் "தனி"
எழுத்துக்கள் விளங்கவில்லை
மண்டைகளில்
மூளை நரம்புகளில்
நேட்டோ ரவைகள்
கிடக்கின்றது.

என்னை ஏமாற்றிய
தேசம்
சுவர்களில்
நெளிகிறது
சடலங்கள்.

கடைசியில்
மூளையும்
கசங்கிய இதயமும்
கற்பழிக்கப்படும்
நிர்வாணப்
பேயுக்கு
கோவணமும்.

G. தெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதாஸின் கடிதம்

நியூஸிலாந்து சிறு கதை

ஆங்கில மூலம்:
ஆர்தர் பெஸிலியர்

தமிழாக்கம்
கு. இராமச்சந்திரன்

*அன்புள்ள அன்னையும் தந்தையும் அறிவது,*

கரியோத்திலிருக்கும் உங்கள் இருவருக்கும் அவசர அவசரமாக இக்கடிதத்தை, இன்று வெள்ளிக்கிழமை ஜெருசலேமிலிருந்து எழுதுகிறேன். இன்னும் ஒருசில நாள்களில் மனதைக்கலக்கும் சோகச்சம்பவங்களை நீங்கள் கேள்வியுறலாம். இந்தக் கவலைதரும் விவகாரத்தில் நீங்கள் இருவரும் என் பக்கம் சார்ந்திருக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.



**அண்மையில் மூடப்படாத ஆழமற்ற குழியொன்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் தோண்டியபோது பண்டைக்காலத்து எலும்புக்கூடு ஒன்று கிடைத்தது.**

**பௌதிகவியல் நிபுணர்கள் ஆய்வுசெய்து இந்த எலும்புக்கூடு இளைஞன் ஒருவரின் உடலென்றும் அவர்தற்கொலை செய்து, அதாவது தூக்கிட்டு இறந்திருக்கலாமென்றும் தெரிவித்திருந்தனர். எலும்புக்கூட்டின் அருகே தோலால் சுருட்டப்பட்டு பொதியப்பட்டிருந்த ஒரு கையெழுத்துப்பிரதியும் காணப்பட்டது.**

நாசரேத்து இயேசு என்று அறியப்பட்ட மனிதரோடு அந்நியோன்னியமாக இருந்த ஆண்கள், பெண்களின் நெருங்கிய கூட்டத்தோடு, கடந்த மூன்று ஆண்டுகளாக ஒட்டியிருந்தவர்களில் நானும் ஒருவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆர்வத்தை ஊட்டுவதாகவும் அதேவேளை அதிர்ச்சியும் பிரமிப்பும் தரக்கூடியதுமான நிகழ்ச்சிகளை அனுபவபூர்வமாக உணர்ந்ததோடு, அவை என்ன,ஏன், எப்படி நிகழ்கின்றன என்று எனக்குப் புரிந்துகொள்ள முடியாத மர்மமாகவே என்றென்றும் இருந்திருக்கின்றன. இந்தக் கூட்டத்தினரோடு கூடிக்களித்திருக்கிறேன். சிலவேளை என்னைக் குழப்பத்திற்குள்ளாக்கிய நிகழ்வுகளும் உண்டு.

அத்தோடு பணப்புழக்கத்தில் மிகவும் கண்ணும் கருத்ததுமாக இருக்கவேண்டும் என்ற தந்தையின் அறிவுரையை நான் என்றென்றும் நினைவில் சுமந்தே இருந்தேன். ஏனோதானோ வென்றிருந்த எங்களுடைய அற்பசொற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியைக் கையாள்வதில் எத்தனை சங்கடங்கள்.. பொது நிதியம் என்று எங்களால் அழைக்கப்பட்ட பணத்திற்குக் கூட நானே பொறுப்பாக இருந்தேன். ஆகையால் சமீபத்தில் சிலவற்றைக் கொள்முதல் செய்வதில் எல்லோர் முன்னிலையிலும் நான் மிகக் கண்டிப்பானவனாக இருக்க வேண்டியவனாகிவிட்டேன்– பெண்களிடமும்தான். அது அவர்களைப் புண்படுத்தியிருக்கலாம். ஆனால் இயேசுவோ எவ்வித பொல்லாப்பும் ஏற்படாதவாறு விரயமான செலவையிட்டு என்னுடைய கருத்தை வேறுகோணத்தில் பூடகமாக வெளிப்படுத்தினார், என்றாலும் அண்மைக்கால நிகழ்வொன்று எனக்கு எரிச்சலை ஊட்டியது. ஏனென்றால் பரிமளத் தைலங்கள், வாசனைத்திரவியங்கள் போன்ற அவசியமற்றவற்றில் பணத்தை வியர்த்தமாக்குவது எனக்கு அறவே பிடிக்காத ஒன்று. ஆனால் பொதுவாக இப்படியானவற்றை என்றென்றும் நினைவில் வைத்திருப்பவன் நான் ஒருவன் மட்டுந்தான்.

சரி, இன்றைய விடயத்துக்கு வருவோம். ஏறக்குறைய கடந்த இரவாக இருக்கலாம் அல்லது இன்றைய காலையாக இருக்கலாம். திடுதிப்பென்று வேகமாக நடந்தவை என்னை நானே புரிந்துணர்ந்து கொள்ள வாய்ப்பேற்படுத்தி விட்டன. நீங்களும் இதை உணாந்துகொள்வீர்கள் என நான் நம்புகின்றேன். பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நான் உணர்ச்சிக் காளாகி அதையே செயல்படுத்திவிடுகிறேன் என்று நம்புகின்றேன்.

கடந்த ஒரு கிழமைக்கு முன்னதாக எந்தப்பக்கம் காற்று வீசுகிறது என்பதை நான் உணரத்தலைப்பட்டேன். மானிடமகன் இயேசு கழுதையில் பட்டணத்திற்கு வரும் பொழுது மக்களின் காற்றின் வீசும் தன்மை என்ன எனப் பார்த்தேன். அது அவருக்கு எதிராக புயலாய் மாறியிருந்தது. இந்த இரண்டொரு நாள்களில்தான் இத்தகைய மாற்றம் ஏற்பட்டிருந்தது என்று என்னால் சொல்லமுடியும். இதன் பின்னணியிலிருக்கும் அரசியல்நோக்கை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் மக்களோ சாய்த்தால் சாயும் மந்தைகள். இயேசு மக்களுக்காக ஆற்றியவை அனைத்தும் ஓரம்கட்டப்பட்டுவிட்டன. பெரும்பாலும் நடைபெற்றுவரும் நிகழ்வுகள் எல்லாம் வேதனையைத்தரும் அறிகுறிகளாகவே தெரிந்தன. மேலிடத்திலிருந்து வந்தவை என்பதால் எதிரிகள் வலிமை மிக்கவர்களாகவே இருந்தனர்.

அதனோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அவர்களுடைய சீடர்களாகிய எங்கள் நிலை ? எங்களுக்கு வேலை தொழில் இல்லை; பணமில்லை; போக்கிடம் இல்லை. இயேசுவின் ஆட்கள் என்று நாங்கள் அறியப்பட்டிருந்தோம். பொதுமக்களின் எதிர்ப்புணர்ச்சியின் உக்கிரம் உண்மையில் பேராபத்தாகும்.

இந்தக் கசப்பான கருத்தை நான் மட்டுந்தான் கொண்டிருந்தேன் என்பதில்லை. என்னைப்போல் எங்கள் குழுத் தலைவன் பேதுரு ஒருவகையில் இயேசுவின் அன்புக்குப் பாத்திரமானவன்; கடந்த இரவு இயேசுவைத் தனக்குத் தெரியாது என்று மறுதலித்தான். ஒருபணிப்பெண் சரியாகவே அடையாளம் கண்டு பேதுருவை இயேசுவோடு இருந்தவன் என்று இனங்காட்டியும் அதை அறவே மறுதலித்தான். இயேசுவைக் கைது செய்தபின் நடந்த தலைமைச் சங்கத்தின் முன்னிலையில் மறுத்தான். அந்த அவரை பணிப்பெண் பேதுருவிடம் கேட்டபின்னர் என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்த நான் கெத்சமனிக்குப் போனேன். இயேசுவுக்கு விசுவாசமாய் கடைசிவரை இந்த மனிதன் இருப்பான் என நான் சத்தியமாக நம்பினேன். ஆனால் இப்பொழுது தன்னால் முடிந்தவரை முழுமையாக மறுதலித்தான். ஒருமுறையல்ல தொடர்ந்து மூன்று முறை மறுத்தான். பின்னர் எதைக் கேட்டானோ, அல்லது எதை நினைத்தானோ வெளியேறினான்; பயங்கர மனக்குழப்பத்திற் காளாகியிருந்தான்.

நானே எனக்குள் ஒரு முடிவுக்கு வரவேண்டியவனானேன்; மாறவேண்டியவனானேன். அரசியல் பின்னணியில் இயேசுவுக்கு எதிரான போக்கு வெகுவேகமாக வளர்ந்தது. பெயரளவில் பின்பற்ற நான் விரும்பவில்லை. அதனால் சில மணித்தியாலங்களில் என் தொடர்பை இயேசுவிடமிருந்து துண்டித்துவிட முடிவெடுத்தேன். அத்தோடு இதன்மூலம் ஆதாயம் தேடவும் முனைந்தேன். அவருக்கிருந்த செல்வாக்கு மறைந்தது. இயல்பாகவே ஒவ்வொருவரும் மறுக்கத்தொடங்கினர். ஆதாயம் தேடுவது எனது குறியாக இருந்தது. உடனடியாக நான் ஏதாவது செய்தேன் என்றால் தான் பணம் கொஞ்சம் தேடிக்கொள்ளமுடியும். இயேசு சிறைக்குள் அடைக்கப்பட்டு எங்கள் குழு சிதறிவிடும் போது இப்பணம் எனக்கு உதவியாக இருக்கும்.

இயேசு எங்கே இருக்கிறார் என்பதைப்பற்றி தலைமைக் குருக்களுக்கோ மேலிடத்துக்கோ தெரியவே தெரியாது; ஆனால் எனக்குத் தெரியும். அவர் எங்கே இருப்பார், எங்கே போவார் என்பது எனக்கு அத்துப்படி. ஆளுவோர் அவரை எப்படியும் சுற்றிவளைத்துவிடுவார்கள். நகரெங்கும் அவர்களுடைய படையினரும் கையாட்களும் இருந்தனர். யூதர்களுக்கும் உரோமர்களுக்கும் முரண்பாடும் மோதலும் ஏற்படாதபடி சாதுரியமாக சிறைக்குள் தள்ளுவதில் அவர்கள் குறியாக இருந்தனர்.

எல்லாம் சரி, ஆனால் அவர்களுக்கு அவர் எங்கே இருக்கிறார் என்பது தெரியாதே! நிச்சயமான தகவல் கொடுப்பது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இந்த விவகாரத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்கு தலைமைக் குருக்களுக்கும் உரோமர்களுக்கும் நான் ஒத்தாசை செய்தாக வேண்டும். புளிப்பில்லாத அப்பவிழாவில் எங்கள்மீது மக்கள் நீதிவிசாரணை கோரலாம். ஒவ்வொருவரும் அப்படியாகக் காணப்பட்டனர். தலைமைச்சங்கமும் ஏனையோரும் இயேசுவின் விவகாரத்தில் தீவிரமாக இருந்தனர். அவர்கள் எங்களையும் இக்கட்டுக்குள்ளாக்கலாம், கொஞ்ச நேரத்துக்குள் எதுவும் நடக்கலாம். அவர் முன்னதாகவே பிடிக்கப்பட்டால் அவருக்குச் சாதகமாகக்கூட இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரவு, அடிக்கடி கூடுவதைப்போல இரவுணவுக்கு பந்தியாய் இருந்தோம். அப்பொழுது பிடிக்காத இரண்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. முதல் நிகழ்ச்சி எங்கள் கால்களை இயேசு கழுவினார். இது ஒரு அருவருப்பான நிகழ்வாகப்படவில்லையா? அவர் எங்கள் முன் முழந்தாளிட்டார். ஏதேதோ அவர் போக்கில் கதைத்தார். இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம்மேலுடையைக் கழற்றிவைத்துவிட்டு ஒருதுண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார். ஒருகுவளையில் தண்ணீர் எடுத்துச் சீடர்களுடைய காலடிகளைக் கழுவத்தொடங்கினார். பேதுருவிடம் வந்தபோது ''ஆண்டவரே நீரா என் காலடிகளைக் கழுவப்போகிறீர்'' என்று அதிர்ந்துபோய்க்கேட்டார். அதன்பின் தனது காலடியைக் கழுவ ஒப்புக்கொண்டார். பேதுருவின் காலடியைக் கழுவிய பின்னர் தொடர்ந்து எல்லோருடைய கால்களையும் கழுவினார். ''பேதுரு நீ தூய்மையாகிவிட்டாய். ஆனால் அனைவரும் தூய்மையாய் இல்லை'' என்று என்னைக் கூர்ந்து உற்றுப் பார்த்தார். ஆனால் யாருமே அதைக் கண்டு கொள்ளவில்லை என்று நான் நிச்சயமாகச்சொல்வேன்.

நாங்கள் இரவுணவைப் பந்தியிலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது அவர் அப்பத்தைப் பிட்டு திராட்சைப் பழ இரசத்தில் தோய்த்து''என்னோடு உண்ணும் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்'' என்று கூறினார். **காட்டிக் கொடுப்பது** என்பது எவ்வளவு பாரதூரமான வார்த்தை. யாரைப்பற்றி அவர் அப்படிக் கூறினார் என்று தெரியாமல் குழப்பமுற்று நம்மவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். நீங்களே சற்று நினைத்துப் பாருங்கள். குறிப்பாக, காட்டிக்கொடுப்பவனுக்கு என்ன நடக்கும் என்றுரைத்தது, உண்மையில் அது பயங்கரமான கூற்றுத்தான். எப்பொழுதும் போலவே இயேசுவின் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்த யோவானிடம் பேதுரு சைகை காட்டி'' யாரைப்பற்றிக் கூறுகிறார் எனக் கேள்'' எனக் கேட்டார். அவரோ ''பன்னிருவரில் ஒருவன் – என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்'' என்று மட்டும் சொல்லி அவரவர் கணிப்பிற்கு விட்டுவிட்டார். நாங்கள் எல்லோருமே அதைத்தானே செய்கிறோம். உங்களுக்குச் சொல்வதற்கென்ன நான் பயத்திற்கு ஆளானேன். இந்தப் பரபரப்புக்குள் இயேசுவின் அருகில் சென்று நிச்சயம் அவர் என்னைத்தான் குறிப்பிட்டிருப்பார் என்று நினைத்தபடி '' ரபி, நானோ ? '' என அவரிடம் கேட்க, இயேசு,'' நீயே சொல்லிவிட்டாய்'' என்றவர்'' நீ செய்யவிருப்பதை விரைவில் செய்'' என்றும் சொன்னார்.

அன்னையே, தந்தையே! அவர் என்னை விடுவிக்க நினைத்துவிட்டுவிட்டார். என் எண்ணத்தில் இருந்ததை அவர் எப்படி அறிந்தார் என்பதுதான் எனக்குத் தெரியாத புதிராக இருக்கிறது. நான் ஒரு 'காட்டிக்கொடுப்பவன்' என்று என்னாலேயே தீர்மானித்துக் கொள்ளமுடியவில்லை. அவர் அப்படிச் சொல்லிமுடித்ததும் என்னவோ அலையெழுந்த சக்தியாய் உந்துதலுக்கு ஆளானேன். நான் வெளியே விரைந்தேன். மேலே என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. யாருடைய எண்ணத்தின்படியும் நான் நடக்க வில்லை.

தலைமைக்குருவிடம் போனேன்; காவலாளிகளிடம் இவ்வாறு கூறினேன். ''இயேசு இப்பொழுது எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். பின்னர் எங்கே போவார் என்றும் எனக்குத் தெரியும். இந்தத் தகவல் உங்களுக்கு நன்மையாக இருக்குமல்லவா?'' என்றேன். நான் ஆதாயம் தேடுவதில் குறியாக இருந்தேன். தலைமைக் குரு முப்பது வெள்ளிக்காசுகளைத் தந்தார். அது எனக்கு போதுமென்று மனதுக்குப்பட்டது. இதையிட்டுப் பேரம் பேசுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை; எனவே அதை எடுத்து என் பைக்குள் போட்டுக்கொண்டேன்.

இரண்டொரு மணித்தியாலங்களில் கெத்சமனிக்கருகிலுள்ள ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சில படைவீரர்களோடு வரும்படி அவர்களுக்கு நான் சொன்னேன். நான் அவர்களுக்கு இயேசுவை இனங்காட்டுகிறேன் என்றேன். அன்று கும்மிருட்டு. தவறான மனிதனைக் கைதுசெய்து விடக் கூடாதல்லவா? இருட்டில் விரலால் சுட்டிக்காட்டுவதை விட வேறு ஏதாவது வழியில் அடையாளம் காட்டுவதையே அவர்கள் விரும்பினார்கள். அவர்களில் ஒருவன் கன்னத்தில் முத்தமிடும்படி சொன்னான். அந்த கருத்து எனக்கு என்னவோ போலிருந்தது. என்றாலும் தவறு ஏதும் ஏற்படாமலிருக்க நான் அதற்கு உடன்பட்டேன்.

பின்னர் என்ன நடந்தது? அவர்கள் பெருங்கூட்டம் – வாளோடும் தடியோடும் படைதிரள வந்தனர். ஒரு மனிதனைப் பிடிப்பதற்கு இத்தனை கெடுபிடி! நான் அவர்களை அவ்விடத்திற்குஅழைத்துச்சென்றேன். அந்த நேரம் எனக்குள் ஒரு மிடுக்கு வந்தது. ''ரபி வாழ்க'' என்று அவர் கன்னத்தில் முத்தமிட்டேன். எனக்கு அவர்மீது ஒரு மதிப்பும் மரியாதையும் வந்தது. ஆனால் அவர் அதைக் கண்டு கொள்ளவில்லை. அவர் காட்டிக்கொடுப்பதையிட்டே பேசினார். அதையிட்டு நான் ஒரு பொருட்டாகக் கருத்திற் கொள்ளவில்லை. எல்லாமே நடந்து முடிந்துவிட்டன; இரவுணவின் போது என்னையிட்டுக் கூறியபடியே பலித்து விட்டது.

அதுதான் நான் இறுதியாக இயேசுவைச் சந்தித்த நேரம். நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, நகரத்துக்குப் போய் மக்களோடு மக்களாகக் கலந்துகொண்டபோதுதான் ''இயேசுவைத் தெரியாது'' என்று பேதுரு மறுதலித்ததைக் கேள்வியுற்றேன். பேதுரு விரைந்து சென்றபோது நான் அவரைப்பின் தொடர்ந்தேன். விழிகளில் பெருக்கெடுத்த கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடியதைக் கண்டேன். தாங்கிக் கொள்ளவேமுடியாத சோகத்தில் மூழ்கி அவன் குலுங்கிக் குலுங்கித் தேம்பித்தேம்பி அழுதான். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு முரண்பாடாக எனக்குப்பட்டது. சேவல்கூவுவதாயின் அது வைகறைப்பொழுதாகத்தான் இருக்கமுடியும். சந்தடி நிறைந்த நகரத்தில் எல்லா இடங்களிலும் சேவல்கள் கூவின. இதைக்கவனித்த, செவிமடுத்த பேதுருவுக்கு அது பீதியை ஏற்படுத்திய அனுபவமாக இருந்தது.

அந்தக் கணத்தில் அந்த இடத்தில் எனக்கும் பேதுருவுக்கும் ஒரு நெருக்கம் ஏற்பட்டதாகப்பட்டது. பேதுரு இயேசுவைத் தெரிந்தும் தனக்குத் தெரியாது என்றான். அவன் துணிச் சலாகச் சொன்னான். திரும்பத் திரும்பச் சொன்னான். காரணம் அவன் பயந்துவிட்டான். நானோ? அவனைப்போல் நடந்து கொள்ளவில்லை. பேதுருவைப்போல் பயந்தாங் கொள்ளித்தனமாக நடந்து கொள்ளவில்லை. நான் தேவை யோடும் கவனத்தோடும் நடந்துகொண்டேன். நான் இயேசுவை '' விற்ற''தாகக் கூட இருக்கலாம். எனக்குக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. ஆள்வோருக்கு ஒத்தாசை செய்தேன்.

நான் பேதுருவுக்காகப் பரிதாபப்பட்டேன். ''இங்கே பார், இங்கிருந்துபோய்விடுவோம். உடனடியாக நகரத்தை விட்டுப் போய்விடுவோம், என்னிடம் கொஞ்சம் காசு இருக்கிறது''என்றேன்.

'' யூதாஸ் உன்னிடம் காசு இருக்கிறதா! எவ்வளவு?''

'' போதுமான காசு இருக்கிறது; முப்பது வெள்ளிக்காசு இருக்கிறது''

அழுகையினூடாக என்றுமே பார்த்தே இராதவகையில் ஒரு ஏளனமான பயங்கரச் சிரிப்பொன்று சிரித்தான். '' முப்பது வெள்ளிக்காசு...எதை விற்றாய் யூதாஸ் ? ஒரு அடிமையையா? (அந்தக் காலத்தில் ஓர் அடிமையின் விலை இது) யூதாஸ் நீ ஒரு அடிமையையா விற்றாய்?''

அன்னையே, தந்தையே! உண்மையைச் சொல்கிறேன் அந்நேரம் நான் பித்துப்பிடித்தவனாகிவிட்டேன். பேதுரு ஒருபோதும் அழாதவாறு தேம்பிக் கதறியழுதான். கண்ணீர் ததும்பிய கண்களோடு என்னை உறுத்துப்பார்த்தான். ஏதோ உள்ளுணர்வு என்னை ஆட்டிப்படைத்தது.

தலைமைக்குருக்கள் என்னிடமிருந்து தகவல்கள் வாங்கிக்கொண்டார்கள். அதுமட்டுமா, இயேசுவை ஒரு கேவலமான அடிமையாக வாங்கியிருக்கிறார்கள். இது விதியின் விளையாட்டு. நான் அந்தக் கருத்தில் எப்பொழுதும் செயல்படவில்லையே. எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. ஆனாலும் என்னை நான் கட்டுப்படுத்திக் கொண் டேன்.

நினைத்தேன், ஆனால் மரணம்? கூடாது, கூடாது.

இயேசுவின் மரணத்திற்கு நான்தான் ஒத்தாசை புரிந்திருக் கிறேன். எவ்வளவு பாரதூரமானது. அவர் எந்தப் பழிபாவமும் இல்லாதவர். அவருக்கு மரணதண்டனையா என்று யோசித் தேன். இந்த விவகாரத்தில் நான் துரிதகதியில் செயற்பட்டி ராவிட்டால் எவ்வளவோ காலம் எடுத்திருக்கலாம். அவர்களின் தண்டனைப்போக்குக்கூட கொடூரமாக அமைந்திருக்காது. என்னால்தானே எல்லாம். எல்லாமே கொடுமையாக முடிந்து விட்டதே என்று நான் தவியாய்த் தவித்தேன்.

பேதுரு மறுதலிக்கமட்டும்தான் செய்தான். 'நிச்சயமாகத்' தெரியாது என்று மூன்று தடவை மறுதலித்தான், அது சாதாரணமாக அவனது பயந்தசுபாவத்தையே காட்டுகிறது. ஆனால் நானோ இயேசு சொன்னதைப்போல் அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டேன்; என் ஆதாயத்திற்காக.

என் அங்கிக்குள் இருந்த வெள்ளிக்காசுகள் திடீரெனப் பாரமாய் கனத்தன. தலைமைச்சங்கத்திற்கு விரைந்தேன். '' அவர் பழிபாவம் இல்லாதவர் நான் அவரைக்காட்டிக் கொடுத்துவிட்டேன்'' என்று கத்திய நான் அவர்கள் முன் காசை தரையில் விட்டெறிந்தேன்.

தலைமைக்குருக்கள் என்னையும் கீழேகிடந்த காசையும் வியப்போடு பார்த்தார்கள்.

'' இது இரத்தக்காசு'' என்று சொன்ன ஒருவன் '' இது இயேசுவின் இரத்தமல்ல, யூதாஸ் இஸ்காரியத்து! இது உன்னுடைய இரத்தம், போ வெளியே'' என்றான்.

நான் இப்பொழுது அச்சத்தால் வெலவெலத்துப் போனேன். நான் பேதுருவைக் காணப்போனேன். ஆனால் அவன் அங்கில்லை; போய்விட்டான். என்னைத்தெரிந்தவர்கள் யாருமே அங்கில்லை. எல்லோருமே போய்விட்டார்கள். அவருடைய அம்மா மரியாளிடம் போகமுடியாது. அல்லது எந்தப் பெண்ணிடமும் நான் போய்க்கொள்ளமுடியாது. எனக்காக எவருமே எதுவும் செய்யமாட்டார்கள். ஆகவே நான் தன்னந்தனியனாக ஒதுக்கப்பட்டுவிட்டேன். நான் பயங்கரத்தன்மைக்குள்ளாக்கப்பட்டுவிட்டேன் என்று உணர்கிறேன். சாத்தான் என்னை ஆக்கிரமித்துவிட்டான். என்னசெய்வேனோ ஏது செய்வேனோ எனக்கே தெரியவில்லை.

நான் உங்கள் இருவரையும் உள்ளார நேசிக்கிறேன். ஒருவரை ஒருவர் கவனமாகப் பாத்துக்கொள்ளுங்கள்.

**யூதாஸ்**


*நாடக அரங்கியலுக்கான இதழ்*

**ஆற்றுகை**

ஜனவரி - மார்ச் 1997

வெளிவந்துவிட்டது.

இது ஒரு

*திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலக வெளியீடு*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க "கவிதை"த்த சில கேள்விகள்

## அதுவும் இல்லையா?

'' ஆடி அடங்கும்
வாழ்க்கையிது
ஆறடி நிலமே
சொந்தம் " - எனப்
பாடிய புலவனை
நான் கேட்பேன்
நீ ....
பாடிய வரிகள்
சரிதானா?

மூடிய மண்ணை
மீண்டும் மீண்டும்
மாண்டவர் உடலைப்
புதைப்பதற்கு
தோண்டுதல் நீரும்
அறியீரோ....?
பின்
சொந்தம் என்பது
எப்படியோ....?

## எந்தக் கோர்ட்டில்....?

மனிதனுக்குக்
கொடுக்காமல்
மறைத்து வைத்த
'' நன்றி''
எனும்
நற்குணத்தை -

நாய்களுக்குப்
படைத்து விட்ட
இறைவா...!
உன் மீது
நியாயம் கோரி
எந்தக் கோட்டில்
வழக்கு ப் போடுவது...?

**கேள்வி:**

உன்னை மறந்தாலும்
தன்னை மறந்தாலும்
காதலை மட்டும்
மறக்காமல்
இந்த மானுடம்
அதற்குள்
கரைந்து
போவது ஏன்?

**பதில்:**

தன்னை
வாசிக்கத் தெரிந்த
கரங்களை விட
நேசிக்கத் தெரிந்த
மனங்களையே
வாழ்க்கை
யாசித்துக் கொண்டிருக்கிறது
அதனால்......

**கேள்வி:**

உன்னை
மறந்துவிட்டு
இந்த மானுடம்
தன்னையே
புகழ்ந்து கொள்கிறதே
ஏன்?

**பதில்:**

சேவல் கூவுவதால்
பொழுதுகள் விடிவதில்லை.
விடியலின்
பொழுதறிந்தே
சேவல்கள்
புளகித்துக் கூவுகின்றன
என்பதைப்
புரிந்து கொள்ளாததால்....

## இவ்வளவு தானா?

செத்துப் புதையுண்ட
அலெக்ஸாண்டர்
சமாதியிலே
கட்டி நிற்கின்ற
கழுதை யொன்று
எட்டி
உதைக்கிறது பார்!

ஏனந்த மா... வீரன்
இன்னும்
எழுந்திடவில்லை?

ஓ.... அவன்
செத்து விட்டானோ....?

இந்த
மானுடத்தின்
சேதியெல்லாம்
இவ்வளவுதானா....?

## ஏன் இன்னும்....?


ஏழை
அழுத கண்ணீர்
கடவுளின் கையில்
கூரிய வாளாமே....!
இந்த
இரக்கமில்லாச் சமூகத்தில
எத்தனை
ஏழைப் பெண்கள்
மானத்தை விற்று
நிர் - வாணத்தை
மறைத்துக் கொள்ள
வதைகிறார்கள்.
கடவுளின்
கைவாள்
ஏன் இன்னும்
கூராகவில்லை....?

**ந. தருமலிங்கம் - நீர்கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கு. இராமச்சந்திரன்



மறைந்த திரு.கு.இராமச்சந்திரன் திருமறைக் கலாமன்றத்து உறுப்பினர். அவர் சிறந்த எழுத்தாளன்; மொழிபெயர்ப்பாளன்; கவிஞன்; கலைஞன்; மனிதத்தைப் போற்றி வாழ்ந்த உயர்ந்த மனிதன்.

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் பலவற்றைச் செய்து தந்து தமது கலைத் திறமைகளை மன்றத்துக்காகவும் அர்ப்பணம் செய்தவர். **கலைமுகம்** உட்பட மன்ற வெளியீடுகள் பலவும் அவரது மேற்பார்வையில் கலைத்துவம் நிறைந்தவையாக அச்சேறின. அன்னாரது பிரிவு அவரது குடும்பத்தினரை மட்டும் சார்ந்தது அன்று. கலை உலகமே ஒரு நல்லவனையும் வல்லவனையும் இழந்துவிட்டது.

- திருமறைக் கலா மன்ற இயக்குனர்

என் வாழ்வில் சந்தித்த எத்தனையோ நண்பர்களில் இனியவரும், நேர்மையாளருமான ஒரு மனிதர்தான் கு.இராமச்சந்திரன் அவர்கள். அவர் இலக்கியவாதி மட்டுமல்ல, வானொலி, தொலைக்காட்சி, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் பிரகாசித்தவர்.

இவரால் மொழிபெயர்க்கப்பட்ட ''அடிமைகள்'' என்ற வட இந்தியக் கவிதையை நான் வாசிக்க நேர்ந்த பொழுது அது ஒரு மொழி பெயர்ப்பென்றே கூற முடியாத அளவுக்கு தத்ரூபமாக இருந்தது. மலையாளத்திலிருந்தும் நேரடியாகத் தமிழுக்குப் பல கவிதைகளை மொழிபெயர்த்திருக்கிறார்.

இவரின் குட்டிக் கதைகளிலே வரும் உண்மைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களையும், சுரண்டப்பட்டவர்களையும் காணலாம். வானொலிக்காக இவர் எழுதித்தந்த சிறுவர்களுக்கான நாடகங்கள் மிகவும் பிரபல்யம் பெற்றவை.

இவரின் மறைவு இலக்கிய உலகுக்கு மட்டுமல்லாமல் சமூக மட்டத்திலும் ஒரு பேரிழப்பாகும்.

– மடுளுகிரியே விஜேரத்ன

நன்றி: சரிநிகர்

நாவினிக்க நல்லனவற்றையே பேசுகின்ற அவரது வாய், நளினமாக அசைபோடும் நயனங்கள், புதுமைப்பித்தனைப் போன்ற முகவெட்டு, விட்டுத் தொலையாத பேரினவாத தொல்லைகளின் போதும் கட்டுக்குலையாத எட்டு முழ வெட்டியோடு நடமாடும் தனித்துவம். முத்திரை குத்திய சத்தான இலக்கியத் தகவல்கள், மொழிபெயர்ப்பு, கைத்தொழில் இரகசியங்கள் என்பவற்றோடு எங்கோ ஒரிடத்தில் அகஸ்மாத்தாக சந்திப்பவர்தான் கு.இராமச்சந்திரன்.

மேடையில் பேசும் பொழுதும் சரி, பத்திரிகைக்கு எழுதும்பொழுதும் சரி அவரது பொருள் பொதிந்த சின்னஞ்சிறு வசனங்கள் நெஞ்சில் நீங்காத நினைவை ஏற்படுத்த தவறுவதில்லை.

கவிதை, சிறுகதை, குட்டிக்கதை, உருவகக்கதை, மொழிபெயர்ப்பு, நாடகம், கட்டுரை, விமர்சனம் போன்ற அனைத்து இலக்கியத்துறைகளிலும் அவர் கவனம் செலுத்தியுள்ளார். தாளலய நாடகத்தை முதலில் அறிமுகப்படுத்தியவரும் கு.இராமச்சந்திரனே ஆவார்.

கவிஞர் மலைத்தம்பி

நன்றி: கண்டி இலக்கியச்செய்தி மடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் FAX குழம்பிய குடும்பம்!

Dec. 10. '96 12:05 p.m    ASC Communication    434356 P

---

அத்தான் பணம் கிடைத்தது. எனக்குத் தான் மனசு சரியில்லை. தம்பி உங்களைத் தேடுகிறான். அவனுக்கும் 6 வயசாச்சு. ஆசையில்லையா? வாங்க என்ன?

உங்களை ஒருக்கா வந்திட்டு போகட்டாம். உங்களுக்குத்தான் என்ர சிந்தனை இல்லையே! இரவில நித்திரையே இல்லை. ஊர் வேற பேசுது. புரிகிறதா?

மற்றது ஒரு செய்தி தெரியுமா? எங்களுக்கு பிறகு முடித்த பக்கத்துவீட்டுப் பிரேமாவுக்கு இரண்டு பிள்ளையாச்சு.

நீங்க நித்திரை கொள்றீங்க்ளா? காசு அனுப்பினா காணுமா? நீங்க வாங்க. வரவேணும் இல்லாட்டி கோபம்...

**மேனகா**

---

LONDON 4418142328216  A4 --- A4 10/12/96  10:27 p.m

மேனகா, நான் இப்பொழுது வந்தால் பின்னர் இங்கு வர முடியாது. இந்த வேலையும் கிடைக்காது. எனக்கு மட்டும் ஆசையில்லையா? இன்னும் மூனுவருடம் சென்றுதான் வரலாம். கவலைதான் என்ன செய்ய.

**அத்தான்.**

---

Dec. 10. '96 3:38 p.m    ASC Communication    434356 P

அத்தான்! உங்களைக் காணத்தான் கொழும்புக்கு வந்தனான். ஆறுவருடப் பிரிவு காணாதா - வேலை போனால் போகட்டும் நீங்க வாங்க. உடன் பதில் தரவும்.

**மேனகா.**

---

LONDON 4418142328216  A4 --- A4 10/12/96  2:10 p.m

நான் வரவே முடியாது. சொன்னால் கேட்கவும். இன்னும் மூன்று வருடங்களுக்குப் பின்னர் .யோசிப்போம். நீ வீட்டுக்குப் போகவும்.

**அத்தான்.**

---

சர்மிளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Dec. 10. '96 7:00 p.m ASC Communication 434356 P*

*ஐயோ நீங்க என்ன மனுஷன். கதை வேண்டாம். நானும் தம்பியும் நாளை பிளேன் எடுக்கிறம். அங்கு வருகிறோம். ஏயர் போட்டுக்கு வரவும்.*

***மேனகா.***

---

*LONDON 4418142328216 A4 --- A4 10/12/96 3:00 p.m*

*மேனகா என்ன விளையாடுகிறாய்? நீ வரவேண்டாம். இன்றைக்கு 3.00 மணிக்கு கோல் எடுக்கிறன். கதைக்கவும். பிளைட்டை கான்சல் பண்ணவும்.*

***அத்தான்.***

---

டிறீங்... டிறீங். நிமிர்ந்து பார்த்தாள். சரியாக 3.00 மணி. துடித்துக் கொண்டு அந்த சிறிய அறைக்குள் அவள் செல்ல, மகனும் சேலைத்தலைப்பை பிடித்துக் கொண்டு உள்ளே சென்றான்.

கடிகார முட்கள் ஒரு 6 நிமிடங்களை கடந்திருக்கலாம். திடீரென அந்தச் சிறுவனின் ஓலம் அம்மா அம்மா எனக் கேட்டது. ஓடி வந்தவர்கள் மயங்கிய நிலையில் அவளை வெளியே தூக்கி வந்தனர். அவர்களில் ஒரு இளைஞன் அந்த சிறுவனைப் பார்த்து என்ன நடந்தது என்று கேட்க... அவன் ''அம்மா அப்பாவை இங்க வரச்சொல்லி கோபமாக கத்திக் கொண்டு பேசி; கொஞ்சநேரத்தால ஏதோ இங்கிலிஸில ஏசா உங்களுக்கா? ஏசா உங்களுக்கா? எண்டு ஏதோ சொல்லிக் கொண்டு அழுதுகொண்டு அறிவு கெட்டு விழுந்தா'' என்றதும் கவலையோடு அவளின் முகத்தை உற்று நோக்கிய இளைஞன் எழுந்த பொழுது அந்த சுவரில் தெரிந்த ''எயிட்ஸ் இன்றைய உலகின் மாபெரும் எதிரி'' என்ற வாசகம் அவன் நெஞ்சைப் பிழந்தது.

---



### வாழ்த்துக்கள் நூறு....

எமது மண்ணின் அவலங்களையும் அங்களாய்ப்புகளையும் உயிரோட்டமுள்ள சிலைவடிவில் தந்த சிற்பி ஆனந்தன் அவர்களை உள்ளன்புடன் வாழ்த்துகிறேன்.

– திருமதி. பா.சிவலோகானந்தன்,
புனித மரியாள் கல்லூரி, திருமலை

மிகவும் அற்புதமான கலை வடிவங்களைக் காணும் பேறு பெற்றோம். யாழ் மண்ணின் வாசனை வீசுகிறது.

– செல்வி. ராதா முருகேசு,
கல்வியமைச்சு, திருமலை

கண்ணுக்கு விருந்து, கருத்தாழமிக்க தத்துவங்கள், கைவண்ணம் மிளிரும் வெளிப்பாடுகள்

– திருமதி.கே.பொன்னம்பலம்
அதிபர், மெதடிஸ் த/ பெண்கள்
கல்லூரி, திருமலை

சிற்பக்கலை பற்றிய நுட்பங்களை எடுத்துரைத்து ஆக்க பூர்வமான கருத்துக்களை திருமலை மக்களுக்கு தந்தமைக்கு மனமார்ந்த நன்றிகள்.

– திருமதி. மதியழகன்,
புனித மரியாள் கல்லூரி, திருமலை

ஒவ்வொரு சிற்பமும் பற்பல கதைகள் பேசுகின்றன. கர்நாடகக் கலைஞர்களது ஒவ்வொரு பாத்திரப் படைப்புக்களும் தத்ரூபமான முகபாவத்துடன் வெளிக் காட்டப்பட்டமை சிற்பியின் வெற்றி யாகும்.

– எம்.எம்.சாபீர்
கல்வித்திணைக்களம், திருமலை

கொழும்பில் 23, 24,-05 -97 இல் நடந்த திரு.ஏ.வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவந்த ஜப்பானிய கலாசார அலுவலர் திரு. மசாகி தக்காதா மன்ற இணைப்பாளர் திரு. ஏ.பிரான்சிஸ் ஜெனம் அவர்களால் வரவேற்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்துக்கள் நூறு....**

உடல் பாதி, கூடு பாதி. மிகவும் சிறப் பான கருத்து. அழகின் நிலயற்ற தன்மையை விளக்கும் சிறந்த கலைப்படைப்பு.

– ச.அகிலன், கலைப்பிரிவு
விவேகானந்தாகல்லூரி,
திருமலை.

ஆறுமுகம் என்ற தலைப்பில் அமைந்த மனிதமுகம் அற் புதமான படைப்பு. படைத்த வனுக்குப் பாராட்டுக்கள்

– கே.சுப்பிரமனியம்
சாம்பல் தீவு
த.ம.வித்தியாலயம்

கருத்தொருமித்து உரு வாக்கிய செயற்கரிய செயல்!

– பத்மநாத சர்மா,
திருமலை.

சிற்பங்களைப் பார்த்தேன் புல்லரித்துப் போனேன். சிற்பியைப் பார்த்தேன் பிரம்மனைக் கண்டேன்.

– வே.ஜனார்த்தனம்,
திருமலை.

கையின் கலைவண்ணம். அவ்வண்ணத்தினூடு தென் படும் எம் வாழ்விடம் பற்றிய எண்ணம் இவன் புகழ் எட்டுத் திக்கிலும் அறியப்படுவது திண்ணம்.

– கலைஞர் வேல்ஆனந்தன்,
திருமலை.

பெத்தலேகம் குடில் ஓர் அற்புதம் – மரத்தில் வார்த்தெடுத்த சங்கிலியும் குரங்கும் இன்னொரு அற்புதம்

– வரதசீலன்
கல்வியமைச்சு, திருமலை.

சிற்பங்கள் உள்ளுணர் வுகளைத் தூண்டிச்சிந்திக்க வைத்துள்ளன. கலைஞரது சுதந்திரமான உணர்வுகளின் வெளிப் பாடுகளிவை.

– எஸ்.டொமினிக்
கல்வியமைச்சு, திருமலை.

ஏ.வி.ஆனந்தனின் படைப்பு களில் கற்பனைத் திறனையும் கண்ணீர் விட்டழவேண்டிய படைப்புக்களையும் கண்டேன். சமாதானப் புறாவே சங்கடத்தில் மாட்டியிருப்பது கற்பனையின் சிகரம்

– பெ.சூரிய மூர்த்தி
நகர பிதா, திருமலை.

தங்கள் படைப்புக்கள் கலை யுலகிற்கு அரிய பொக் கிஷங்கள். சிறந்த கைங்கரியம்.

–டாக்டர் கே.சற்குணலிங்கம்,
திருமலை.

உறங்கிக் கிடந்த என் கலை ஞானத்தை தட்டியெழுப்பி விட்டீர்கள். உலகம் போற்றும் சிற்பியாக மிளிரட்டும்.

– ஏ.எச்.சாகுல்ஹமீது,
திருமலை.

இவை வெறும் சிற்பங்கள் அல்ல. அரும் பொருட் காட்சி சாலையில் வைக்கப் பட வேண்டிய கலைப் பொக்கிஷங்கள்

– சி.இன்பரூபன், றெட்பானா
யாழ்

கருத்தாழம் கொண்ட கலை வடிவங்கள். சிந்திக்கத் தூண்டுகின்றன. படைப்பாளி அபூர்வசக்தி கொண்டவர்.

– செ.கணபதி பி.ஏ
சட்டத்தரணி,
கொழும்புதுறை.

தங்கள் கலைப்படைப்புகள் என் மனதை தொட்டன.

– ஞானதேசிகன் பி.ஏ,
கந்தர்மடம்.

அழகு சொட்டும் சிற்பக் கலைப் படைப்புக்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. பழமையோடு நின்றுவிடாது நவீன தொழில் நுட்பத்தையும் உத்திகளையும் பிரயோகித்து உள்ளமை பாராட்டுக்குரியது.

– சோ.பத்மநாதன்
அதிபர் பயிற்சி கலாசாலை,
பலாலி.

சங்கீதத்தின் சுருதிகள் கேட்கின்றன. அற்புதமான லயத்தை மரத்தில் கண்டேன்.

– குப்பிழான் சண்முகம்

சிற்ப மன்னன் ஆனந்தனது படைப்புக்களை கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

– பி.கே. அமிர்தநாதர்

சிற்பியின் சிந்தனை தீர்க்க தரிசனமாகட்டும்.

– கணேசலிங்கநாதன்,
வைத்திய அதிகாரி,
திருமலை.

நினைத்துப் பார்க்க முடியாத கைத்திறமைகள் செயற்கரிய செய்வார் பெரியார்.

காந்தி,
ஆசிரியை, திருமலை

கற்பனையையும் மிஞ்சிய கலைத்திறன்

ஜாபீர் .
ஆசிரியர், மூதூர்

இங்கு நான் கண்டவை உணர்வுமிக்க மனிதநிலைகள். சிற்பியின் சிந்தனையில் எழுந்த உயர் தத்துவங்கள்.

– சமீம்,
உப்புவெளி,
திருமலை

இவை வரலாற்றுச் சிற்பங்கள்

– ஜெகதீஸ்வரன்,
பணிப்பாளர் ப.அ.சபை,
திருமலை.

நினைவை விட்டு நீங்காத சிற்பங்கள் பாராட்டப் படவேண்டிய படைப்புக் களைப் பார்த்து திகைப்புற்று மெய்சிலிர்த்தேன்.

சி.கோணமலை,
அதிபர்,
கிண்ணியா அ.த.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கல் ஆஞ்சலோ எமக்கேன்? டாவின்சி எங்கே? அஜந்தாவும், தம்புல்லையின் கற்குகையும் எங்கே? எல்லாவற்றையும் விஞ்சி நிற்கின்றது திருமலையில் சுவடு பதித்த ஆனந்தனின் கலைச்சுவடுகள்.

– ஜவாகர்
ஆசிரியர், ஜின்னாநகர்

தங்கத் தமிழனின் கலைத் திறமைக்கு எமது வாழ்த்துக்கள்

– கே.வி. குமார்
ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணி, திருமலை

தனித்துவமான சிறந்த படைப்புக்களை உலகளாவிய ரீதியில் புகழ் பெற்றவையுடன் சமாதானமாகத் துலங்கக் கூடியவை.

– மாகாண கல்விப் பணிப்பாளர், திருமலை

உளி கொண்டெழுதிய சிற்பக் கவிதைகள் உயிர் கொண் டிருக்கின்றன.

– நந்தினி,
திருமலை

மனித பூர்வ பரிணாமம் தொடக்கம் நவீனயுகம் வரை அறிவியல் ரீதியாக கலை ஆக்கம் பொய்துள்ளார்.

– திருமலை சந்திரன்,
நற்பணிகலாமன்றம்

மனதில் ஓர் நிலைப் பாட்டையும் தெளிவையும் ஏற்படுதியுள்ளார்.

– கா.யோகேஸ்வரன்
உபதலைவர்,
தி.ம.ந.மன்றம்

''பிரமதேவன் படைப்புக் கலையினுக்கு நிகரே" மிகவும் அற்புதம். மரபுவழியிலும் நவீனத்திலும் ஆக்கிப் படைத் துள்ளார் தமிழ்கூறும் நல்லு லகம் இவரது பணியினை நினைவு கூரும்.

– எம். பற்குணம்
வட.கி.மா.க.வி.துறை
அமைச்சு, திருமலை.

பார்க்க பார்க்க சிந்தனையைத் தூண்டும் சிற்பங்கள் என்றும் பசுமையாக என் நெஞ்சில் பதிந்திருக்கும்.

– பிரியதர்சினி,
திருமலை.

கலை காலத்தால் அழியாதது என்பதனை கலைஞர் நிரூபித்துவிட்டார்.

பெ.சிவகுருநாதன்
கணக்காளர் வீதி அபிவிருத்தி திணைக்களம் திருமலை.

சூப்பரப்பா........

– முகம்மது
முஸ்லிம் ம.வி.திருமலை

உங்கள் கற்பனை வளத்தையும் கவிதை நயத்தையும் சிற்பங் களில் கண்டு வாழ்த்துகிறேன்.

– புனித மரியாள்
விடுதி மாணவி,
திருமலை.

வெகு காலத்தின் பின் தலைநகரில் தமிழரின் கலைச் சிறப்பை விளக்கும் கலைச் சிற்பங்களைக் கண்டேன்.

– தி.ரத்னாவதி,
பம்பலப்பிட்டி

மாபெரும் சிற்பக் கலைஞன் ஒருவன் நம்மிடையே வாழ்கிறான்.

– கே.எஸ்.சிவகுமாரன்,
கொழும்பு

இலங்கையில் ஓர் சிறந்த சிற்பக் காட்சி யினைப் பார்த்தோம். உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய படைப்புக்கள் இதில் அடங்கியுள்ளன.

– மலேசியத்துறவிகள் குழு

நம் நாட்டில் மட்டுமல்லாது பிறநாடுகளிலும் இக்கலைப் படைப்புகள் பிரசித்தியடைய வேண்டும்.

– திருமதி யோன்
குலசேகரம், கொச்சிக்கடை.

சிற்பக் கலைஞர் ஆனந்தனின் கலைப் படைப்புக்கு நான் அடிமை.

– ஓவியர் எஸ்.டி.சாமி,
கொழும்பு

ஆனந்தா ! உன் உளியினால்
மனதைச் சுத்தப்படுத்திய
உன் மரமுகங்கள் – எங்களுக்குள்
ஓர் உணர்ச்சிச் சூறாவளியையே
உற்பத்தி செய்து விட்டன
உன் உளி உதடுகள் உச்சரித்த
மனித முகங்களைத்தான் நானும் தேடுகிறேன்.

– மேமன்கவி,
கொழும்பு

உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்த படைப்புக்கள்

– பாடகர் வி.முத்தழகு,
கொழும்பு

சிற்பப் புதுமை கண்டு வியந்தேன். உயிரற்ற மரங்களுக்கு உயிரூட்டி நிஜ உருவங்களாகப் பேச வைத்துள்ளீர்கள்.

– சற்சொரூபவதி நாதன்,
இல.ஒலிபரப்புகூட்டுத்தாபனம்

எல்லாச் சிற்பங்களும் தத்ரூப மாக உள்ளன. ''சகுந்தலை" என் கலையுள்ளத்தை வருடிக் கொண்டே இருக்கிறாள்

– சிற்பக் கலைஞர்
புல்லுமலை நல்லரத்தினம்,
கொழும்பு

ஈழத்தின் மைக்கல் ஆஞ்ச லோவின் படைப்புக்களை கண்டேன்.

– சீ.ஈ. குணரட்னம், கொழும்பு

வந்தேன் – பார்த்தேன் – மிகவும் நன்று

சில்லாலை டாக்டர் அல்போன்ஸ் அத்தனாசிரியர்,
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இப்படியான சிற்பக்கலைஞன் ஒருவர் இருப்பது நாட்டுக்கு பெருமை.

– வ. சிவஜோதி,
கொழும்பு

கலைஞனின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் என் நெஞ்சைத் தொட்டுவிட்டன.

– ஓவியன் சத்யன், கொழும்பு

"கலை கண்ட ஆனந்தன்
நிலை கொண்டு வாழ்க"
கலைவண்ணக் கரமொன்று
உளி கொண்டு மோத
மலை கூடச் சிலையாகி
மனந்தன்னைத் தட்டும்.


– கவிஞர் நீர்கொழும்பு
தருமலிங்கம்

தலைநகர் இதுவரை கண்டிராத கண்காட்சி, நாடே பெருமைப்படுகிறது. திக்கெட்டும் இவர் புகழ் பரவட்டும். அதனால் நாடும் நாமும் பெருமையடைவோம்.

– தில்லையம்பலம்,
வெள்ளவத்தை

சிற்பக் கலைஞர் ஆனந்தனது ஆற்றல் என்னைப் பிரமிக்க வைத்துவிட்டது.

– ஏ.ஜுனைதீன் கலைஞன்,
கெந்தளை, வத்தளை




இவ்வாண்டு திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்பட்ட ஒரு சில நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997-01-26.

යාපනයේ දී අද හොඳ නාට්‍ය දර්ශනයක් දැක ගැනීමට
ලැබීම සතුටකි. මෙවැනි සංස්කෘතික මෙහෙයුම් දැක්වීම්
ජාතිකත්වය දැක හැකි දර්ශන දිය යුතු කරුණකි.
මෙතුළ තල නාට්‍යවල ජාතිකත්වය නැගෙනව තව
තවත් වර්ධනය වී දීර්ඝායුෂ ලැබේවායි පතමි!

ගාමිණී ජී. ජී. දිසානායක
( යාපනය.

1977-01-26. අද දින මා විසින් නරඹන ලද නැටුම් ප්‍රසංගය යාපනය
ජනතාවගේ සංස්කෘතික ලක්ෂණයන් මොනවට පිළිබිඹු කෙරෙන
සංස්කෘතික දැක්මක් විය. මෙම ප්‍රසංග මෙම ප්‍රදේශයට
පමණක් සීමා නොකර රටේ අනෙකුත් ප්‍රදේශයන්
තුළද පවත්වන්නේ නම් සිංහල හා ද්‍රවිඩ ජනතාවට
එකිනෙකා අතර ඇති සමීපතාව වඩාත් ලංවනු ඇත.
සිංහල හා ද්‍රවිඩ ජන කොටස් අතර,
සමගිය සාමය උදාවනු දැකීම අප සැමගේ අභිලාෂය
ප්‍රාර්ථනයයි

තිසර H.T.J. සිල්වා
ගාල්ල.

1997/01/26. C'est un grand plaisir de voir la vie culturelle
continuer à travers cette exposition et de réaliser
que quoiqu'il arrive Jaffna reste une ville où
la culture ne peut être annihilée.
Énormément d'appréciation pour les seul.
plurer tel que le danseur de kavadi et
l'approche naïve mais réaliste du sujet.
Beaucoup aimé Dayamanthi & Shakuntala.
Patrick Jones




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















யாழ் திருமறைக் கலாமன்றம் நடத்திய சிற்பி ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியில்


பார்வையாளர், கலை நிகழ்ச்சிகள். யாழ் மண்ணில் பொங்கல் விழா!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALAIMUGAM


| | | |
|---|---|---|
| Publisher | - | Tirumarai Kalamanram |
| Editor - In - Chief | - | Nee.Maria Xavier Adikal |
| Co-Editor | - | P.S.Alfred |
| Associate Editor | - | Sam Pradeepan |
| Checking Dept. | - | A.Francis Jenam |
| | | A.A.Junaideen |
| | | M.B.Juliana |
| | | K.Krishnakumary |
| | | A.M.Recilda |
| Art/Cover/Layout | - | S.D.Samy |
| Typesetting & Printing | - | Lanka Publishing House |







உலகளாவிய திருமறைக் கலாமன்றம்.

இடமிருந்து வலம்:
பிரான்ஸ், கனடா, ஹொலண்ட், இங்கிலாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2




1



8






3



7




4



6

5



"சிற்பச் செல்வனு"டன்

1. மலேசிய துறவிகள்
2. வட ~ கிழக்கு மாகாணசபைப் பணிப்பாளர்
3. ஜப்பானிய தூதரகக் கலாச்சார அலுவலர்
4. கனேடிய தூதரக அலுவலர்

"சிற்பச் செல்வனு"டன்

யாழ் ஓவியர் 5
திருமறைக் கலாமன்ற சிங்கள நடன ஆசிரியை 6
யாழ் எழுத்தாளன் 7
யாழ் கவிஞன் 8

Published by

THIRUMARAI KALAMANRAM

Jaffna, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lanka Publishing House Colombo 13